**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business
- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900


COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ
Tel: 020 8543 4974

We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE
PAPER - 07 ♦ ISSUE - 138 ♦ 24 FRIDAY DECEMBER 2010

Bridal Sarees, Party Sarees, Lengha, Salwar...
Amani
Bridal Boutique Wedding Planners
upto 50% off
offer ends 10/01/11
294 London Road, Croydon, CRO 2TG
Tel: 020 8684 3145 www.amani.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




**Sri Lanka**
**Landline & Mobile**
**9p /min**
**Lyca mobile**
Call the world for less

**Ersan & Co**
SOLICITORS

Ersans has a wealth of experience in providing specialist help and advice for Personal Injury claims. We offer a free assessment of your claim and a "No Win No Fee" package to ensure that no deductions are made from any compensation to which you may be entitled.

"We will make sure that you will receive 100% of your compensation and our service will not cost you a penny"

தனியாருக்கு ஏற்படும் காயங்களுக்கு நட்டஈடு பெறுவதற்கு உதவிசெய்வதில், 'எர்சன்ஸ்' (Ersans) சிறந்த அநுபவம் உடையவர்கள். உங்களுடைய விண்ணப்பத்தை இலவசமாகப் பரிசீலனை செய்து, 'வெற்றியில்லையேல் கட்டணம் இல்லை' என்ற அடிப்படையில் எவ்விதக் கழிவும் இன்றி உங்களுக்குரிய நட்டஈட்டுத் தொகை கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளோம்.

உங்களுடைய நட்டஈட்டுத்தொகை 100 சதவீதம் உங்களுக்குக் கிடைக்கவும், எமது சேவைக்காக உங்களுக்கு எவ்வித செலவும் இல்லாதிருக்கவும் உறுதிசெய்வோம்.

**ERSAN & CO SOLICITORS**







7 Willoughby Road, Turnpike Lane, London N8 0HR
Tel: 0208 342 7070
Fax: 0208 342 7071 Mobile: 07816 646345
E-mail: info@ersans.co.uk

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்!!

# VINCENT SOLICITORS

✓ மார்ச் 2010க்கு முன்னர் அகதி அந்தஸ்து விண்ணப்பம் கோரி நிராகரிக்கப்பட்டோருக்கு ஒரு வருடத்துக்கு மேலாக எதுவித முடிவும் கிடைக்காவிடில்

1. நிரந்தர வதிவிட உரிமை (Permanent Residency)
2. Sept 2007 புதிய தீர்ப்பின்படி வேலை செய்வதற்கான உரிமை ஒரு மாதத்தில் பெற்றுத்தரப்படும்.

✓ பிரித்தானியா, இலங்கை, பாஸ்போட் விணப்பம் மற்றும் Travel Document விண்ணப்பம்.

✓ PSW, மாணவர் விசா நீடித்தல் மற்றும் விசா நிராகரிப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்தல்.

✓ கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்களில் உள்ளவர்கள் தொடர்பில் உயர்நீதிமன்ற விண்ணப்பம் மற்றும் தடுத்து நிறுத்துதல்

✓ Change of Course, College or University செய்து தரப்படும்

✓ பிரித்தானியச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கு அனுமதி பெற்றுத் தரப்படும்.

✓ பலவருடங்களாக உங்கள் விண்ணப்பம் பல்வேறு காரணங்களால் சரியான முறையில் அனுமதிக்கப்படவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம்.

✓ ஆகவே நன்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழுவினர் தமிழ்பேசும் மக்களுக்கான இலவச ஆலோசனை சேவை வழங்கி வருகின்றனர்.



**020 8574 0666**

11-13 Southall Road, Southall, UB1 1SU (ஹிமாலயா சினிமா எதிரே)

இலவச ஆலோசனைக்கு அழையுங்கள் 07870763570

குறிப்பு : போலி வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம்.

## நீங்கள் கருத்தரித்துக் கொள்வதில் பிரச்சினை உள்ளதா?



கருத்தரிக்க உதவுவதில் 20 வருட அனுபவம் உள்ள தமிழ்பேசும் வைத்திய வல்லுனருடன் உரையாடுங்கள்.

சினைமுட்டை பகிர்வதனையும் (Egg Sharing) அல்லது சினை தானம் செய்வதனையும் (Egg Donation) நாங்கள் ஊக்குவிக்கிறோம். முட்டை பகிரும் திட்டத்தில் முட்டை தானம் செய்வோருக்கு இலவச கருத்தரிப்பு சிகிச்சை அளிக்கப்படும். முட்டை தானம் செய்யும் திட்டத்தில் தானம் செய்பவருக்கு அவரது முயற்சிக்கு ஏற்ப நிதி ஈடு செய்யப்படும்.

மேலும் விபரங்களுக்கு தமிழில் தொடர்புகொள்ள உடன் அழையுங்கள்

HSFC HARLEY STREET FERTILITY CLINIC

Director: Dr Geetha Venkat MD, FRCOG

43 Devonshire Street, London, W1G 7AL

Phone: +44 (0)20 7436 6838 Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

## M&K MALIKS & KHAN SOLICITORS

265 Dunstable Road Luton LU4 8BS

mandksolcitors@lawyer.com

Tel 01582 732503

Fax 01582 732533

www.mandksolicitors.com

**IMMIGRATION**

All cases including Asylum, Human rights, Nationality, Detention, Deportation, Bail and Appeals to IAC and High Court

**PERSONAL INJURY**

All cases including Road Traffic Accident, Accident at work and public places. We give 100% compensation + £300.00 Cash back on successful completion of case subj to terms and conditions if you instruct us directly.

**CONVEYANCING**

Residential Freehold Purchase £350+VAT; Sale £299+VAT; Residential and Commercial property, Transfer, Assignment and extension of lease.

**FAMILY LAW**

Divorce, Child Contact Orders, Eviction etc.

Our staff can speak Tamil, Malayalam, Hindhi, Urdu and Pahari.

Accredited member of Law society in Immigration




FREE 3 YEARS WARRNTY & BARCODE PRINTER

# Spicy Village

## Indian & Srilankan Cuisine

*We cater all indian and sri lankan food*

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

- 3 Mutton Roll or 3 Veg Rolls ........................ £ 1.20
- 3 Fish Cutlet...................... £ 1
- 3 Paties............................ £ 1
- 3 Masala Vadai ................. £ 1

Take away ONLY

100 இடியப்பம், சொதி, சம்பல், உருளைக் கிழங்கு மற்றும் பருப்பு கறி **£ 12 Only** Takeaway Only

அப்பம், தோசை என்பனவற்றை தரமாகவும் சுவையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

| FREE DELIVERY ON MINIMUM | ORDER £10 WITHIN 3 MILES RADIUS.<br>OVER £40 WITHIN 5 MILES RADIUS<br>OVER £150 WITHIN 10 MILES RADIUS |
|---|---|



உங்கள் திருமணம், பிறந்தநாள், அரங்கேற்றம் மற்றும் மங்களகரமான நிகழ்வுகளுக்கான அனைத்து வகையான இலங்கை, இந்திய உணவு வகைகளை தரமாகவும் நிறைந்த சுவையுடனும் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.

(பிற நகரங்களுக்கும் விநியோகம் செய்யப்படும்.)

86 Brighton Road, Purley CR8 4DA

TP: 020 8660 0956

# பூராயம்



## குடல் குலுங்கச் சிரிக்க வைத்தது

வ.கணேஸ் எழுதிய கோட்டாவும் மகிந்தவும் நகைச்சுவைப் பகுதியை வாசித்து நானும் எனது மனைவியும் குடல் குலுங்க சிரித்தோம். இப்போது தான் ஒரு பேப்பர் பழைய மாதிரி கிண்டலுடனும், பகிடியுடனும் வருகிறது. நன்றி .கணேஸ், தொடர்ந்து உங்களது ஆக்கங்களை எதிர் பார்க்கிறோம்.

*- ஆசிர் நாதன்*

## கெங்காவை விட்டு விட்டீர்கள்!

மகிந்தவின் எம்பசி பார்ட்டிக்கு போனவர்களின் பட்டியியலில் சிலரை தவற விட்டு விட்டீர்கள். ஒன்றை சேர்த்துக் கொள்ளுங்கள் நாகலிங்கம் சிறி கெங்காதரன். அவரில்லாத ஒரு அஞ்சாம் படையோ? விசயம் கேள்விப் பட்டால் கோவிக்கப் போகிறார். மகிந்தாவின்ரை மேன் நாமலின்ர கலியாண வீட்டுக்கே அவருக்கு அழைப்பு வந்திருக்கறது என்றால் அவர் எவ்வளவு குளோசான ஆள் எண்டு உங்களுக்கு தெரியாமலிருக்குது.

*- சபாபதி*

## தாவும் புலிக்கு..

சேயோனின் சற்று மாறுதலுக்காக கொஞ்ச காலமாக அழுது வடிந்து கொண்டிருந்தது. ஆனால் கடந்த பேப்பரில் புலிபோல் சீறியெழுந்து எங்களைச் சிலிர்த்தெழ வைத்தது. மீண்டும் நான் விரும்பும் சேயோனைக் கண்டேன். மகிழ்ந்தேன்.

*- வரதன்*

## முகத்தார் நினைவுகள்

முகத்தார் என்றாலே ஜேசுரட்ணம் என்ற பெயர்தான் ஞாபகத்திற்கு வரும் அந்நதளவுக்கு எங்களுடன் நெருங்கியவராக இருந்தார் திரு ஜேசுரட்ணம் அவர்கள். இலங்கை வானொலியில் முகத்தார் வீடு நாடகத்தில் மட்டுமல்லாமல் ஞாயிற்றுக் கிழமைகளில் வரும் கதம்பம் நிகழ்ச்சியிலும் பல நாடகங்களில் அவர் நடித்திருக்கிறார். முகம் காட்டாமலே அவரது குரல் மூலம் ரசிகர்களை மகிழ்வித்தவர் அவர்.

*சிவப்பிரியா*

## கட்டுரைகளை மீள வெளியிட முடியாதா?

மூத்த ஊடகவியலாளர் திரு. சிவநாயகம் அவர்கள் எழுதிய சில கட்டுரைகள் நூல் வடிவில் வந்துள்ளன. மீதியை தொடர்ச்சியாக ஒரு பேப்பர் ரில் வெளியிடுவீர்களா?

*- ஆறுமுகம்*

## கஸ்பரா இப்படி?

அருள்தந்தை கஸ்பர் அவர்கள் ஸ்பெக்ரம் அலைக்கற்றை மோசடியில் சம்பந்தப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளமை கவலையைத் தருகிறது. வேரித்தாஸ் வானொலியில் அவர் பணியாற்றியபோது, அவர் ஈழத்தமிழ் மக்களுக்கு ஆற்றிய சேவையினை மறைக்க முடியாது. ஆனால் அவருக்கு பணத் தாசை வந்து விட்டதுபோல் இருக்கிறது.

*- போல்ராஜ்*

## ஐந்தாம் படையை அறியுங்கள்.

பூராயம் பகுதியில் உள்ளே எலியே என்ற கடிதத்தில் எங்களது ஐந்தாம் படை ஆட்களின் லிஸ்ற் ஒன்றை போட்டிருந்தீர்கள். உலக சரித்திரத்தில் இந்த ஐந்தாம் படைக்காரர் எங்கேயும் எப்போதும் இருப்பவர்கள் தான். இவர்களுக்கு இனம், மானம், வெட்கம், ரோசம் என்று எதுவும் கிடையாது. இதற்கிடையில் இவர்களுக்கு இன்ரனெற், வெப்சைற் என்ற தளங்கள் வேறு. இதில் வருகின்ற தம்பிராசா ஜெயபாலன் என்பவர் தேசம் நெற் ஜெயபாலன் தானே? தம்பிராசா என்றவுடம் குழம்பிவிட்டேன். இவ்வளவு காலமும் த.ஜெயபாலன் என்பதை @!¿X!¬ ஜெயபாலன் என்றுதான் நினைத்திருந்தேன். இப்பொழுதான் விளங்குகிறது இது தம்பிராசா ஜெயபாலன் என்று.

*- கோழங்கி.*

## இன மானத் தமிழர் இலண்டன் தமிழர்.

எவ்வளவு நாட்களுக்குப் பிறகு நிம்மதியான நித்திரை வந்தது. ராஜபக்ச பரிவாரங்களை இலண்டன் தமிழர் ஓட ஓட விரட்டி அவமானப் படுத்திய அன்றிரவுதான் நிம்மதியாக நித்திரை கொண்டேன். பனிக் குளிரில் வரப் பஞ்சிப்பட்டு வீட்டில் நின்று விட்டேன். பிறகுதான் எனக்கு சரியான மனவருத்தம். அதுவும் ஒரு பேப்பர் ரில் இந்த செய்திகளைப் பார்த்தவுடன் ஆகக் கவலை வந்தது. உண்மையில் இனமானத் தமிழர் என்றால் அது இலண்டன் தமிழர் தான்.

*- க. புவிநாதன்.*

## வள வளா கொள கொளா.

சினிமாப் பக்கத்தில் இம்முறையே ஆக்க பூர்வமான கட்டுரை வந்தது. பாரதிராஜா முதல் மிஷ்கின் வரை என்ற கட்டுரையையே சொல்கிறேன். இப்படி ஒரு கட்டுரையை ஒவ்வொரு ஒரு பேப்பர் ரிலும் வெளியிட்டால் என்ன? மற்றய பேப்பர்கள் மாதிரி ஒரு பேப்பர் ரும் வள வளா கொள கொளா என்று சினிமாப் பக்கங்களை எழுதுவதை நிறுத்துங்கள். இம்மாதிரிக் கட்டுரைகளை வெளியிடுங்கள்.

*- எம்.ஆர்.வி*

## மருண்டவன் கண்களுக்கு...

சென்ற இதழில் திரு சுகி சிவம் அவர்களுடைய வேண்டுகோளை விமர்சித்து ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. சுகி சிவம் அவர்கள் இலங்கையில் உணவற்று, உடுக்க உடையற்று, குடியிருக்க இடமற்று அவலப் படும் மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படுவதென்ன என்பதை விவரித்து அம்மக்களுக்கு உதவி செய்யுங்கள் என்றுதானே வேண்டியுள்ளார். அது தவறா? அரசாங்கத்தைத் தட்டிக்கேட்க நாதியற்ற நிலையில், ஒன்றும் செய்யமுடியாத நிலையில், வெறும் வாய்ச் சொல்லால் ஒரு பிரயோசனமும் இல்லை என்ற நிலையில், இப்போது அரசியல் பேசலாமா எனக் கேட்பது தவறா?

வீரவசனம் பேசலாமா என்று கேட்பது தவறா? உடனே செய்யவேண்டிய பணிகள் யாவை என்று கூறினாரே தவிர, உங்கள் உரிமையை விட்டுக் கொடுத்து அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுங்கள் என்று கேட்கவில்லையே அங்கே துன்பத்தில் உள்ள மக்களுக்கு மேலும் துன்பத்தைத் தரும் வகையில் நடந்து கொள்ளாதீர்கள் என்று தானே கூறினார். இது பிழையா?

மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல் எமது கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எல்லோரையும் விரோதிகளாகக் கருதும் எமது மனப்பாங்கு மாற வேண்டும். மற்றவர்களுடைய கருத்திற்கும் மதிப்பளிக்கும் மனப் பக்குவம் பெற வேண்டும்.

*- இராம.மு.நாதன்.*

## சிவநாயகம் ஐயா

மாமனிதர் சிவநாயகம் ஐயா அவர்கட்கு. நிறைந்த அஞ்சலியாக அவரது நிழற்படத்தை ஒரு பேப்பர் ரின் முகப்பில் அலங்கரிக்க வைத்து மறைந்த மாமனிதரின் மங்காத புகழை, வாசகர் மத்தியில் தவழவிட்டது பொருத்தமான சிந்தனை. 80 வயதுவரை, ஐயா அவர்களால் தமிழ் மக்களுக்கு சேவை செய்ய இடம்கொடுத்த இயற்கை அன்னைக்கும், அவரை ஈன்றெடுத்த சொந்தத் தாய்க்கும், தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் நன்றிக்கடன் செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். எமது ஆழ்ந்த அனுதாபத்தை அவர் விட்டுச் சென்ற குடும்பத்தினருக்கு ஒரு பேப்பர் ரின் வாசகர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி. வணக்கம்.

*- உமா மகாலிங்கம்.*

# உள்ளே எலியே (வெளியே) - 2

கடந்த ஒரு பேப்பர் ரில் தமிழ் ஐந்தாம் படை பற்றி எழுதியிருந்தேன். இதில் ஒன்று இரண்டு பத்திரிகையாளர்கள் அல்லது இணையதளங்கள் நடத்திற ஆட்களும் அடங்கியிருந்ததால், இவர்கள் மாற்றுக் கருத்தாளர்களே தவிர ஐந்தாம் படையினர் அல்ல என்று ஒருவர் எனக்கு ஈமெயில் போட்டிருந்தார். இன்னொருவர் பட்டியலில் விடுபட்ட சிலரின் விபரங்களை எழுதியிருந்தார்.

பத்திரிகைகளையும், இணையதளங்களையும் யாரும் நடாத்தலாம், உன்னிடம் பிறெஸ் பாஸ் இருக்குதா? என டொமெயின் ரிஜிஸ்ற்றியில் உள்ளவர்கள் கேட்கமாட்டார்கள். ஆகவே எல்லோரையும் ஊடகவியலாளர்கள் என்று ஏற்றுக் கொள்ளுவோம்.

ஒக்ஸ்போர்ட் உரையை ஒருதலைப் பட்சமாக இரத்துச் செய்ததால் மனம் உடைந்து போன மகிந்தவின் சோகக் கதையை கேட்க ஊடகவியலாளர்கள் போனார்கள் எனவைத்துக் கொள்வோம். இவர்களில் றறின் கொன்ஸ்ரன்ரைன் என்பவர் முன்பொரு முறை பசில் இராஜபக்சவிடம் போனபோது, அவர் தாங்கள் நடாத்திய போர்க்குற்ற வீடியோவின் பிறிவியூவை போட்டுக் காட்டி இவரை குசிப்படுத்தினாராம். அது பிரத்தியேகக் காட்சி, கொஞ்சம் influential ஆன ஆட்களுக்கு மட்டும்தான் காட்டுவார்களாம். மற்றாக்கள் சனல்4 ல் காட்டும் போதுதான் பார்க்கலாமாம்.

சரி மாற்றுக் கருத்தாளர்கள் என்பவர்கள் யார்? பொதுவான அல்லது பெரும்பான்மை கருத்துடன மாறுபட்ட கருத்துகளை வெளியிடுபவர்களை மாற்றுக் கருத்தாளர்கள் என்று அடையாளப்படுத்த முடியும். அந்த வகையில் பெரும்பான்மையான தமிழர்கள் ஒரு கருத்தை வைத்திருந்தால் அதற்கு எதிரான கருத்துகளை வெளியிடுபவர்களை மாற்றுக் கருத்தாளர் என்று குறிப்பிடலாம். மாற்றுக் கருத்தாளர்களை மற்றவர்கள் மதிக்க வேண்டும். அப்படி மதிக்காமல் அவர்களை மிதிக்கப் புறப்பட்டால் நீங்கள் இன்னொரு மேர்வின் டி சில்வா ஆக அல்லது கோத்தாபாயவாக இருக்க வேண்டும்.

இதில் வேடிக்கை என்னவென்றால் மகிந்த கும்பலுக்கு பயந்து டசின் கணக்கிலை தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் வெளிநாடுகளுக்கு தப்பி வந்திருக்க, இந்த தமிழ் வெப்சைட் காரரை கூப்பிட்டு அவர் விருந்து வைத்திருக்கிறார். சிறிலங்காவில் இருக்கிற ஊடகக்காரர் எல்லாம் கோத்தபாயவை பார்த்துப் பயப்பட, இந்த கதை எழுதிற பெண்மணி ராஜேஸ்வரி துணிந்து அவருக்காக வேலை செய்கிறா. இதுதான் வீரம் எண்டு சொல்லிறதோ?

சரி மாற்றுக் கருத்தாளர்களை விடுவோம், கருத்தே இல்லாதவர்களை எந்தப் பட்டியலில் போடுவது?

விடுதலைப் புலிகளை எதிர்க்கிறோம் அவர்கள் ஜனநாயகத்தை கடைப் பிடிப்பதில்லை.. ஆயுத வன்முறையை முன்னெடுக்கிறார்கள்.. சிறுவர்களை படையில் சேர்க்கிறார்கள் என்றெல்லாம் முன்பு ஒப்பாரி வைத்த கும்பல். அதையே மகிந்த செய்தால் அவருக்கு ஆரத்தி எடுக்க தட்டோடு போகிறார்கள். தீபாவளி கொண்டாட சிறிலங்கா தூதரகத்திற்கு போகிறார்கள். (ஆரத்தழுவி கொண்டாடலாம் என சிறிலங்கா தூதரகத்திம் சில தமிழர்களுக்கு அனுப்பி வைத்த அழைப்பிதழ்களின் எழுதப்பட்டிருந்ததை தவறாக எடுத்து விட்டார்களோ தெரியாது)

பிள்ளை பிடிக்கிறாங்கள், மனிதவுரிமை அமைப்புகளுக்கு முறையிடுவோம் வாருங்கோ என்றார்கள். பிள்ளையானும் கருணாவும் பிள்ளை பிடிக்கும்போது, அவர்களுக்கு இவர்கள் மதியுரைஞர்கள் ஆனார்கள். டக்ளசும் கருணாவும் தமிழ் பெண்களை கடத்தி மலேசியாவில் விபச்சாரத்துக்கு அனுப்பியதாக விக்கிலீக்ஸ் விசில் ஊதுகிறது. கண்டித்து ஒரு கவிதையாவது எழுத வேண்டாமா இந்த 'பெண்ணிலை வாதி'?

கொழும்பில் முருகபூபதி நடாத்த இருக்கிற 'எழுத்தாளர்' மாநாட்டுக்கு எதிராக அறிக்கை விட்டவர்களில் ஒரு வயதான அப்பாவி மனிதரை தொலைபேசியில் ரவுடித்தனமாய மிரட்டியிருக்கிறார் இந்த 'பெண்ணியவாதி'. மறுநாள் இதுகளின் வெப்சைட் அந்த மனிதர் பற்றிய அவதூறுகளை காவி வந்தது.

இதுகள் திருந்தும் என்ற நம்பிக்கையில் இதனை எழுதவில்லை. இருந்தாலும் இதுகளுக்கு வக்காலத்து வாங்கும் விளக்கம் குறைந்ததுகளாவது விளங்கிக் கொள்ளட்டும் என்ற நப்பாசை தான்.

இப்போதைக்கு முற்றும்.

*- மதமுலன்ன லங்கா லீக்ஸ்*



ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, DECEMBER 24, 2010, ISSUE 138

## புலம் பெயர் சமூகத்தில் புதியன புகுதல்

கழியும் 2010, புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களைப் பொறுத்த வரை முக்கியமான ஆண்டாக அமைந்துள்ளது. நாடு கடந்த நிலையில் வாழ்ந்தாலும் தாயகம் நோக்கிய அரசியல், புனர்வாழ்வு, சமூகப் பணிகளில் தம்மால் காத்திரமான பங்களிப்பினை வழங்க முடியும் என்பதை ஒரளவுக்கேனும் நிரூபிக்கத்தக்க நகர்வுகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை காலமும் அவர்களை வழிநடத்திய விடுதலைப் புலிகள் அமைப்பு பாரிய அழிவினை சந்தித்து, அதன் கட்டமைப்புகள் சிதைக்கப்பட்டுள்ள நிலையில், சனநாயக வழிமுறைகளை பின்பற்றி புலம்பெயர் தமிழ்மக்கள் மேற்கொண்ட நகர்வுகள், அவர்கள் சரியான திசை வழியில், திசையில் செல்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துபவையாக அமைந்துள்ளன.

இவ்வாண்டில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு, நாடு கடந்த அரசாங்கத்திற்கான தேர்தல் என புலம் பெயர் தமிழ் மக்கள் பங்கெடுத்த இரண்டு வாக்கெடுப்புகள் நடாத்தப்பட்டன. பலவேறு நாடுகளிலும் இயங்கும் தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பான உலகத் தமிழர் பேரவை, மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட நாடு கடந்த அரசாங்கம் என்பன உருவாக்கப்பட்டன. இவற்றில் காணப்படும், பல்வேறு இயங்குநிலைச் சிக்கல்கள், கருத்து முரண்பாடுகளுக்கு அப்பால், நாடு கடந்த ரீதியில் செயற்படுவதற்கான சன நாயகக் கட்டமைப்புகள் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்.

இவ்வாண்டின் இறுதிப் பகுதியில் நடை பெற்ற மாவீரர்நாள் நிகழ்வுகளிலும் மக்கள் உணர்வுடன் கலந்து கொண்டார்கள். நிகழ்வு நடைபெற்ற மண்டபங்கள் மக்களால் நிறைந்து காணப்பட்டன. போர்க் குற்றவாளி மகிந்த இலண்டன் மாநகருக்கு வந்த போது குளிரையும் பனியையும் பொருட்படுத்தாது திரண்டு வந்து ஆர்ப்பாட்டம் செய்து, மகிந்தவின் உண்மையான முகத்தை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தினார்கள்.

புலம்பெயர் தமிழ் மக்கள் அரசியற் போராட்டங்களில் காட்டும் ஆர்வத்தினை தாயக மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கையில் காட்டுகின்றபோதும், அபிவிருத்தி என்ற மாயைக்குள் அரசியல் உரிமைக்கான போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யும் முயற்சிகளுக்கு அவர்கள் துணை போகவில்லை.

மக்கள் மிகவும் தெளிவாக உள்ள இன்றைய நிலையில், அவர்களை வழிநடத்த முயல்பவர்கள், மிகுந்த அர்ப்பணிப்புடனும் வெளிப்படைத்தன்மையுடனும் இயங்குவது அவசியமானது. மலரவிருக்கும் புத்தாண்டில் அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*பனியும் குளிரும் என காலநிலை செய்யிற கொடுமைக்கு நடுவிலை வருசக் கடைசி விடுமுறை காலத்தில் கொண்டாட்டங்களுக்கு தயாராக இருப்பீர்கள். 2009 வருசத்தை போலல்லாமல் இந்த வருசம் ஒரளவு ஒழுங்காக* ***ஒரு பேப்பர்*** *ரை வெளிக் கொணர்ந்தோம். அதற்கு ஒத்தாசையாக இருந்த எமது விளம்பரதார்கள், வாசகர்கள் அனைவருக்கும் ஒரு பேப்பர் குடும்பத்தின் நன்றியினை தெரிவிக்கிறம்.*

*வெளியிலை தெரியாட்டிலும்* ***ஒரு பேப்பர்*** *குழுவிலும் கனக்க மாற்றங்களை செய்ய வேண்டியதாய் போயிடுத்து. அதுவும் நல்லதுக்குத்தான் போல இருக்கு, திரும்பவும் முன்னை மாதிரி வாசகர்களினது ஆதரவை நாங்கள் பெற்றுள்ளோம்.*

*இங்கை பலர் புதிசு புதிசா அறிக்கை விட்டுக் கொண்டிருப்பதை அறிவியள். ஊடகங்களை கட்டுப்பாட்டுக்கிள்ளை கொண்டு வரப்போறம் எண்டும் சொல்லியினம். இன்னும் சிலர் இருக்கிறதுகளுக்கு முத்திரை குத்த வெளிக்கிடுறதும் அறிஞ்சிருப்பியள்.* ***ஒரு பேப்பர்*** *ருக்கும் முத்திரை குத்த முயற்சி செய்யிறது எங்களுக்கு தெரியும், ஆனால்.. நாங்கள் எந்தப் பகுதியோடையும் இல்லை, சுதந்திரமாக இயங்கிறம் எண்டிறது உங்களுக்கு தெரியும்.*

*ஊடகத்துறையிலை விக்கிலிக்ஸ் என்ன மாதிரி ஒரு மாற்றத்தை கொண்டு வந்ததோ, மக்களுக்கு விரோதமான ஆட்களை வெளிப்படுத்தேக்கை நாங்கள் ஊடக தருமம் அது இது என்று பார்க்கிறதில்லை. என்ன இருந்தாலும் உண்மையான சங்கதி வெளிவர வேண்டும் என்பதுதான் எங்கடை நோக்கமே தவிர ஒண்டுமில்லாத விசயத்துக்கு, சும்மா பரபரப்பை கிழப்பிறது, மக்களை உசுப்பேத்தி விட்டு வேடிக்கை பாக்கிறது எங்கடை வேலையில்லை.*

*உங்களது கருத்துகளை வெளியிடுவதற்கு ஒரு களமாக* ***ஒரு பேப்பர்*** *எண்டைக்குமே இருந்து வந்துள்ளது. தொடர்ந்தும் அப்படியே இருக்கும் என்பதனை அடிச்சு சொல்லிறம்.*

*எங்கடை இணைய தளம் புதுப்பிக்கப்படாமல் இருக்கிறது அதை கவனியுங்கோ எண்டு பலரும் எங்களிடைடை முறையிட்டிருக்கினம். இதுக்கு ஆட்பற்றாக்குறைதான் காரணம். கூடிய விரைவில் அதனை இயங்க வைக்கிறோம்.*

*புதுவருசத்திலை சமூக விசயங்களுக்கும், இளம் பெடியளின் விசயங்களுக்கும் கூடிய முக்கியத்துவம் குடுக்கலாம் என யோசிக்கிறம். நீங்கள் என்ன நினைக்கிறியள்? அரசியலும் வேணும்தான் ஆனால் ஒரே அரசியலாய் கிடக்குது எண்டு சிலர் சொல்லிறதையிலையும் நியாயமிருக்கு. நெடுக இப்படியிருக்கேலாது கொஞ்சமாவது மாற்றம் ஏற்படுத்த வேண்டும். உங்கடை ஆலோசனைகளை தெரியப்படுத்துங்கோ.*

*எல்லாருக்கும் புது வருச வாழ்த்துகளை தெரிவிக்கிறம். மகிழ்ச்சியாக கொண்டாடுங்கோ.*

*புது வருசத்திலை சந்திப்பம்.*

***ஒரு பேப்பர்*** *காரன்கள்+காரிகள்*

# Not a rebuff on Sri Lanka; a rebuff to the Rajapaksa regime



Rajapaksa's private trip to the UK highlights the regime's inability to recognize the abhorrence with which it is widely viewed.

Scheduled to speak to the Oxford Union on December 2nd, the event was pulled at the last minute. Much speculation ensued about the reasons behind this decision. The official line was the inadequate security to cope with the large British Tamil community and critics of the Sri Lankan government. But could it be that the cancellation was linked to the mounting evidence of war crimes committed by the Sri Lankan regime from Wikileaks and the new video footage released by Channel 4?

Or perhaps the British Union of Students' guideline: "no platform for fascists" kicked in? (Although the UK society upholds democratic principles including freedom of speech thankfully it also pays due regard to ethical boundaries).

In response, Foreign Minister G.L. Peiris said, "[President Rajapaksa] has been prevented from expressing his point of view,". He then went on to say that the Union cancelled the event because of intimidation and "brute force".

The cruel irony is that this hyperbolic accusation comes from a government that was at the same time was using brute force in its own parliament in Sri Lanka. Government MPs publicly assaulted senior Opposition (UNP) MP Dr. Jayalath Jayawardena in Parliament accusing him of instigating the protests in London! A local human right activist commented on this pathetic state of affairs, saying, "You can see the 'culture' we have. If MPs can assault another MP in parliament during sessions, what won't government thugs and paramilitary gangs do to poor human rights defenders, intellectual dissidents and grass roots activists?"

Government MPs publicly assaulted senior Opposition (UNP) MP Dr. Jayalath Jayawardena in Parliament accusing him of instigating the protests in London!

In an article using the President's own words for its title, The Times pointedly remarked on Rajapakasa's claims regarding civilian deaths during the last stages of the war. The article detailing the interview with the President was titled, "Sri Lanka never killed any civilians as such: Rajapaksa". "As such" is indeed a deliberately deceptive phrase with which to describe what has been estimated by the International Crisis Group as 30,000 (with an upper limit of 75,000) people unaccounted for.

The Times article describes the interview: "The most telling moment in the Times interview with President Rajapaksa of Sri Lanka came after it was over. For almost an hour, in a suite in the Dorchester, Mr Rajapaksa had painted a picture of his Government and country that was as white and spotless as his traditional garb: any atrocities at the culmination of Sri Lanka's brutal war with Tamil separatists were the work of the terrorists; videos allegedly showing army troops killing civilians were fakes; war crime allegations were groundless; the arrest and trial of his foremost political opponent was a matter for the judiciary and nothing to do with him."

The Times then goes on to say that as they were leaving the hotel lobby they were called back: "Mr Rajapaksa, looking both angry and crestfallen, met us in the corridor, to declare that the president of the Oxford Union no longer wanted him to give a speech today -- his official reason for coming to Britain. Protests were planned by Tamil activists and the union leader had said that he could not guarantee Mr Rajapaksa's safety. "' think he has been threatened by these fellows,' snapped Mr Rajapaksa -- a man, one suspects, not used to being disinvited".

So how will this turn of events be reflected in the country?

"We also expect a propaganda barrage in Sinhala about imperialist power humiliating 'sovereignty of nation' which will further harden Sinhala ultra nationalism at least at the rural peasant level," said a local human rights activist who wishes to remain anonymous.

Continuing, he said, "It will take more international humiliations before the populace realises that it is NOT an attack on 'Sri Lanka' as such but is an attack on a political faction that is misbehaving to the degree that that faction is bringing on shame to our country. This kind of difficult logic needs many hard knocks before it is driven home."

Britain has once again called for an independent inquiry into alleged human rights violations during the war between the security forces and the LTTE. A Foreign Office spokeswoman issued the call at a media briefing in London on December 2.

Oh well, the trip was probably not entirely wasted.. The entourage would have had a cosy time at the Dorchester, with Christmas lights and shopping opportunities just around the corner. After all, the shopping in London has got to be better than in Tehran or Beijing.

# அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

இணையத் தளங்கள் பல ஆயிரம் இருந்தாலும் இன்று பலராலும் பேசப்படுகிற இணையத்தளம் Wikileaks இணையம் என்பதாகும். இந்த இணையத்தை ஒரு சில நாடுகளும் சில தலைவர்களும் எதிர்த்தாலும் கூட, மக்கள் மட்டத்திலும் பல ஊடகங்கள் மத்தியிலும் இதற்கு பெரும் ஆதரவு உண்டு.

இந்த இணையம் வெளியிட்ட இரகசிய அறிக்கையொன்றில் பிரித்தானிய தமிழர்களின் வாக்குகளை கடந்த பொது தேர்தலில், தொழிற்கட்சி சுருட்டுவதற்காகத்தான் தொழிற்கட்சி அரசாங்கத்தில் வெளிநாட்டமைச்சராக இருந்த டேவிட் மிலிபான்ட் அவர்கள் கடந்த வருடம் இலங்கையில் இந்திய பிராமணிய அனுசரணையுடன் வகைதொகையின்றி நடந்த இன ஒழிப்பு காலங்களில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்திருந்தார் என்பதுவும் ஒன்று.

ஆதலால் சில தமிழ் உணர்வுள்ள தமிழ் ஊடகங்கள் சிறிதளவில் கவலைகளை வெளியிட்டிருந்தாலும் மாற்றுக் கருத்துள்ள பல ஊடகங்கள் இதை ஊதி பெரிதாக்கி பிரித்தானிய தமிழர்கள் நம்பி இருந்தார்கள், ஆனால் கடைசியில் ஏமாற்றப்பட்டார்கள் என்று நையாண்டியாக வர்ணித்திருந்தன.

உண்மையில் தமிழர்களை பாதுகாப்பதைவிட தொழிற்கட்சியின் வெற்றியை முக்கியமாகக் கொண்டு டேவிட் மிலிபான்ட் செயற்பட்டிருந்தாலும் கூட, அவரது நடவடிக்கைகைள், அறிக்கைகள் அத்தனையும் எங்களுக்கு ஆதரவாகவும் சிங்களத்துக்கு நெருக்கு வாரம் கொடுக்கின்ற வகையில் தான் அமைந்திருந்தன.

புலம் பெயர் சமூகமாகிய நாங்கள் ஒரு விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். பிரித்தானியாவின் அன்றைய ஆட்சியில் அதுவும் பொதுத் தேர்தல் நெருங்கும் நேரத்திலும் கூட டேவிட் மிலிபான்ட் பிரித்தானியாவில் செய்த பிரச்சாரங்களை விட தமிழர் பிரச்சினையை கையிலெடுத்து களமிறங்கியதை நாம் எமது நல்ல சகுனமாக கருத இடமுண்டு.

எங்களுடைய தமிழர் அமைப்புக்கள் குறிப்பாக உலகத் தமிழர் பேரவை, பிரித்தானிய தமிழர் பேரவை, இளையோர் அமைப்புக்கள் போன்றவற்றின் பின்னால் ஆயிரமாயிரம் தமிழர்கள் அணிதிரண்டிருக்கின்றார்கள். இவ்வமைப்புக்களோடு சேர்ந்து இலங்கைத்தீவிலுள்ள ஈழத்தமிழ் மக்களின் விடிவிற்காய் தாம் பாடுபட்டால், ஒன்றிணைந்த சமூகமாக இருக்கின்ற இங்கிலாந்தின் தமிழர்களின் ஆதரவு என்றென்றும் தொழிற்கட்சிக்கு இருக்குமென்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவர்களுக்கு இருக்கின்றது.

அதனால்தானே தமிழர்களின் பொது நிகழ்ச்சிகளிலெல்லாம் பிரித்தானியாவின் முக்கிய மூன்று அரசியல் கட்சிகளிலும் இருந்து முக்கிய பிரபலங்கள் கலந்து கொள்கிறார்கள். அவர்களின் ஆலோசனைகள், அறிவுறுத்தல்கள் போலீஸ் மட்டத்திலும் பகிரப் படுவதால்தானே பாதுகாப்பு தரப்புகளிலிருந்தும் எங்களது ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களுக்கு சில விட்டுக் கொடுப்புகளும் நடை பெறுகின்றன.

இன்று வருடாவருடம் பிரித்தானியாவில் நடைபெறுகின்ற Remembarence Day or D.Dayல் இந்த நாட்டின் சனத்தொகையில் எத்தனையாயிரம் பேர் பங்கெடுக்கிறார்கள்? முதலாம் உலக யுத்தத்திலிருந்து இன்று ஈராக், ஆப்கானிஸ்தான் வரைக்கும் எத்தனை ஆயிரம் பிரத்தானிய படைவீரர்கள் இறந்திருப்பார்கள். இவர்களின் குடும்பங்கள் இலண்டன் மாநகரில் அன்றய தினம் கூடினால் இலண்டனே தாங்காது போய்விடும்.

ஆனால் எமது ஈழ விடுதலைக்காக வித்தாகிய நாற்பதினாயிரம் மாவீரர்களை நினைவு கூரும் தேசிய எழுச்சி நாளில் புலம் பெயர்ந்து வாழுகின்ற எமது சனத்தெகையில் எத்தனை ஆயிரமாயிரம் பேர் எழுச்சியுடன் கலந்து கொள்கின்றோம். இவைகளை கண்ணுற்ற இந்த நாடுகளின் அரசியல் தலைவர்கள் சிறிது சுயநலம் இருந்தாலும் கூட எமது மாவீரர்களுக்கு அகவணக்கம், மலர் வணக்கம் செய்யும் போது கூட தாமும் எழுந்து நின்று எமது மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தி எமது நற்பண்புகள், எமது சமுதாய கூட்டமைப்புக்கள். மற்றும் இலங்கைத்தீவில் ஈழத்தமிழருக்கு பிரச்சினை இருக்கின்றது. அடக்கப்படுகின்றார்கள். அவர்கள் ஒடுக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு ஒரு நாடு அது ஈழமாக அமைய வேண்டுமென்றும் மேடையேறி பேசாமலும் விட்டதில்லையே.

தமிழர் அமைப்புக்கள் இந்த அரசியல் தலைவர்களோடு இணைந்து செயற்படுகிறார்கள், ஆனாலும் இந்த அமைப்புக்கள் மெருமளவிலான உறுப்பினர்களை அந்தந்த அமைப்புக்களில் பதிவு செய்து பெரியளவில் நிறுவனங்களாக வியாபித்து ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை கொண்ட வருடாந்த மகாநாடுகளை நடாத்தும் போது இந்த அரசியல்வாதிகளையும் உள்வாங்கி மேலும் பல மனிதாபிமான பொது அமைப்புக்களையும் அழைத்து எங்களை அவர்கள் பெரிய நிறுவனமாக அடையாளம் காண வைக்க வேண்டும். அப்போதுதான் அவர்களும் துணிவாக எங்களுக்காக குரல் கொடுப்பார்கள்.

இன்று இலங்கை அரசிற்கு எதிராக பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகள் குரல் கொடுக்கின்றன, போர்குற்ற விசாரணைகள் தேவை என்றும், இலங்கைத் தீவில் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டுமென்றும், அமெரிக்கா கூட இலங்கையை உன்னிப்பாக கவனித்து வருகின்றோம் என்று இலேசாக மிரட்டும் தொனியிலும் கூட அறிக்கைகள் விடுகிறார்கள்.

வட கொரியாவிடம் ஆயுதகட கொள்வனவு. சீனாவுடனான நெருக்கம். ஈரானுடைய நட்பு போன்றனவும் அமெரிக்கா பிரித்தானிய கருத்துக்களுக்கு எதிராக சிங்கள ஆட்சியாளர்களின் காட்டமான பதிலறிக்கைகள் போன்றனவும் இந்த நாடுகளை மிகவும் கோபமூட்டுகின்றன. ஆனாலும் இந்த நாடுகள் இலங்கைக்கு ஆப்பு வைக்க வேண்டிய தருணம் வரும்போது நிச்சயமாக மனித உரிமை மீறல்களையும், பல வருடங்களாக நடந்தேறிய இன அழிப்பையும்தான் கையிலெடுக்கப் போகிறார்கள்.

இலங்கையில் போர்குற்றம் புரிந்த அத்தனை சிங்கள தலைவர்களையும் கம்பிகளுக்குப் பின்னால் தள்ளி எமது நியாயமான உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் ஒற்றுமையாகவும் உறுதி குலையாமலும் ஓர் வலுவான நிறுவனமாகி இலங்கைத்தீவிலுள்ள எமது ஈழ உறவுகளை காப்பாற்ற வேண்டிய பாரிய பொறுப்பு புலம்பெயர் தமிழர்களாகிய எங்கள் கையில்தான் உள்ளது.

*- வ. கணேஷ்*

இரவுகளை

உடைத்து

சூரியனை

எழ வைப்போம்

ஒரு பேப்பர்

ORU PAPER

OPINION

## 'Ignorance is bliss; truth is ugly'

**By Periasamy Kanthavel**

Violence has never been or never will be the first choice of the oppressed people anywhere any time until armed oppression pushes them to armed resistance, and so it has been in the case of us, the Eelam Tamils. Looking back over the two phases, during the first phase the world did not even know that we had a problem and it was during the 2nd phase that the world became aware of the problem and, in fact, we had a de facto and de jure government recognized by international agreement , though only for 6 years and the map of Eelam was drawn.

"War in Vanni that had revealed the face of the devil!"; "Sri Lankan Puppets in the Hands of Emerging Superpowers", wrote Richard Dixon in one of his series of genuine and touching articles.

Tamils were slaughtered in thousands with swords and knives in the buses, trains and in their own homes in the fifties, sixties, seventies and eighties. Frustrated Tamil youths took arms to fight against fascism. Armed rebellion has now been crushed with the help of China and India. http://richarddix.livejournal.com/

His referring to China and India giving equal weight-age is absolutely wrong. China came into the scene only after the daring attack on the Anuradhapura air-port by the LTTE destroying ten of Sri Lanka government's key military air-crafts in October, 2007. China gave Sri Lanka — apparently free of charge — six F7 jet fighters; according to the Stockholm International Peace Research Institute.

The LTTE did re-take Elephant pass in April, 2000. The sprawling complex, heavily fortified and with concrete bunkers capable of withstanding bombing was a key bulwark for government troops in countering the military aggression of the LTTE. Terrestrial incursions into the peninsula from the mainland were consistently thwarted by the overwhelming presence of two top divisions of the Sri Lankan Army in the Iyakachchi-Elephant Pass sector. The LTTE captured: **three long-range 152 mm artillery pieces, two 122 mm artillery pieces,** twelve 120 mm heavy mortars, one 25 mm cannon, several 50 caliber machine guns, hundreds of rocket-propelled grenades and thousands of automatic rifles. That lot formed the initial armament of the great rebels.

Within a year after capturing the Elephant garrison) LTTE routed SL army's Agni Khiela (Rod of Fire) offensive. These victories underscored Tamils' perception that their ability to negotiate political rights is essentially predicated on the LTTE's military power.

During the early 1990s, the LTTE leadership realized they needed a conventional regiment to fight Sri Lanka's conventional armed forces and to show the world that the Tamils had the capability of defending themselves through conventional means, justifying their demand for an independent State of Tamil Eelam.

Although an expert on psychological and guerillaare, LTTE leader, Velupillai Pirapaharan had the correct vision and assigned **Balraj** as the first commander of the first conventional LTTE regiment formed on April 10, 1991 – the **Charles Anthony Brigade,** named after the LTTE's senior leader and the leader's close friend, Charles Anthony of Trincomalee. who was killed in 1983. The Charles Anthony Brigade was crucial in the capture of Elephant Pass base in 2000.

Then in July, 2001, the LTTE attacked the Katunayake International Airport, despite the fact that there were ninety sentry points around the complex and over 500 men guarding it, wearing military uniforms and mainly mortars, T-56 rifles and rocket-propelled guns.

Within minutes, they had reduced to rubble eight military aircraft, including two Kfirs, two Mi-17 helicopters, one MiG-27 fighter and three Chinese K-8 trainer aircrafts. The total estimated cost of the destroyed aircraft is about $450 million, The Tigers are believed to have waited until foreign fights had departed and probably timed their attack to minimize the possibility of foreigners getting hurt.

These brilliant achievements naturally, led to the ceasefire agreement between the GoSL and the LTTE in 2002. This led to the opening of major high ways. Our leader Prabhakaran's Magnanimity was seen, once declared that the Tigers are ready to reconsider armed struggle if given a solution that satisfies the Tamil community. He also welcomes talk of the creation of an interim administration in the war-torn north and the east for two to three years, a key part of the peace talks.

The USA, the European Union, Norway and Japan had jointly raised 4.5 billion dollars in June 2003 to support peace efforts in Sri Lanka. Anyway during this period, there was consensus in world opinion for a political solution based on the UN accepted; **'traditional homelands of Ethnic minorities principle'.**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள்
யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்
கனடா
தயா - அரவிந்தன் - சிந்து
பிரான்ஸ்
சிறி
ஜேர்மனி
சபேசன்
சுவிஸ்
சயந்தன்
பொறுப்பாசிரியர்
- கோபி -
மக்கள் தொடர்பு
சாரதா
விளம்பரம்
சோபனா
அச்சு
தர்சினி (கனடா) பானு
வடிவமைப்பு
மயூரன் - விஜி
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி - நிர்வாகம்
பானு
வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்



உங்கள் தொடர்புகட்கு:
தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850
தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855
ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com


'Oru Paper' is a bi-lingual paper published from London by Orupaper Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

# நடந்து வந்த பாதை

*'மக்கள் சக்தியே மாபெரும் சக்தி*

*வெடிகுண்டையும் விஞ்சிய சக்தி'*

என்ற கொட்டு முழக்கு எண்பதுகளின் அரைப் பகுதியில் ஈழத்தில் ஒலித்தது. ஒலித்தோர் ஒருசிலரில் அடியேனும் ஒருவன் எனவே அது குறித்து உரையாட எனக்கு உரிமையுண்டு. மக்கள் சக்தி என்று தொண்டை வறளும் வரைக்கும் நாக்கு வெளித்தள்ளும் வரைக்கும் நாங்கள் கத்தினோம். ஆனால் மக்கள் அதனைக் கேட்கவில்லை அவர்கள் அதனைக் கேட்காததற்குகாரணம் என்னவென்றெல்லாம் பிறகு, பிறகு யோசித்தேன் இப்பொழு தான் அதுஎக்குப் புரியத் தொடங்கியது. சொன்ன நாங்கள்உண்மையில் மக்களை நம்பிச் சொல்லவில்லை. அது நல்லதொரு கோசம் என்பதனாலும் அப்படிச்சொல்ல மாத்திரமே எங்களால் இயலும் என்பதனாலுமே சொன்னோம்.

உதாரணமாகப் பாருங்கள். தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், புதிய ஜனநாயக மக்கள் முன்னணி இவையெல்லாம் 'மக்களைக்' கொண்டுள்ள அமைப்புக்கள் தாம். ஆனால் மக்களுக்கு இந்த அமைப்புக்களைத் தெரியவில்லை அப்படியென்றால் இந்த மக்கள் 'மக்கள்' இல்லையா ? வெறும் 'மாக்களா' (மாக்கள்-விலங்குகள்).

இப்பொழுது இவைபற்றியெல்லாம் என்னை யோசிக்கத் தூண்டியது எது? மக்களை நம்பாதவர்கள் பல்லாயிரக்கணக்கில் மக்களைத் திரட்டி சிங்கள வெறியனை இனப்படுகொலையாளனை இலண்டன் மாநகரை விட்டு ஓட ஓட விரட்டியடித்தார்கள். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மூக்கை அறுத்தார்கள் ஹித்துறூா விமான நிலையத்தில் பின் கதவால் ஓடவைத்தார்கள். இத்தகையதொரு அவமானம் உலகில் எந்த நாட்டுத் தலைவருக்கும் நேர்ந்ததில்லை. கொழும்பு விமான நிலையத்தில் கலங்கும் கண்ணீரையும் அசட்டையும் பின்வாங்கிய அவமானத்தையும் சேர்த்துத் துடைத்துவிட்டுப் போகிறான் சிங்களக் காடையன் மகிந்தா. மக்களை நம்பாத மனிதர் செய்த காரியங்கள் இவை.

மக்களை நம்பிய மக்கள் சக்தியே மாபெரும் சக்தி என்று சொன்ன நாம் என்ன செய்தோம். பல்லாயிரக்கணக்கில் தமிழ்மக்களை படுகொலை செய்த இனவெறியனை பின் கதவால் போய்ப் பார்த்து கூழைக்கும்பிடு போட்டோம். கூனிக் குறுகி நின்றோம். அவன் எங்களைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. 'பறத்தமிழனை' பார்க்க என்ன இருக்கிறது என்பது அவன் முகத்தில் தெரிகிறது. அது பற்றியெல்லாம் எங்களுக்குக் கவலை இல்லை பெரிய ஐயாவின் காலடியைத் தரிசித்து விட்டோம். அது ஒன்றே போதும் என்று கைகட்டி வாய்பொத்தி தலைகுனிந்து நிற்கிறோம். ஏனென்றால் மக்கள் சக்தியே மாபெரும் சக்தி அல்லவா.

## சற்று மாறுதலுக்காக

எழுதுவது: **சேயோன்**

கொடும் பனிக்குள்ளும் கடும் குளிருக்குள்ளும் வெளியில் மக்கள் மக்கள் திரண்டிருக்கிறார்கள். ஏன் திரண்டார்கள், எதற்குத் திரண்டார்கள் இவை பற்றியெல்லாம் எங்களுக்கு என்ன கவலை. வார்த்து வார்த்துத் தந்தான்கள் மூக்கு முட்டக்குடித்தோம். இரண்டு மூன்று நாட்களுக்கு குடிக்கத் தேவையில்லாத அளவு ஒட்டகம் போல் குடித்தோம். கோழிக்காலில் ஒருகடி, ஆட்டுத் துடையில் ஒரு சப்பு. குளிரே தெரியாத அளவு குடி. நக்கத் தானே போனோம். செக்கென்ன சிவலிங்கம் என்ன?

வெளியில் மக்கள் திரண்டிருக்கிறார்களே இவர்களுக்குத் தேவையில்லாத வேலை நாங்கள் சொன்ன மக்கள் இவர்கள் இல்லை பார் என்னுடன் சேர்ந்து நக்கிக் கொண்டிருக்கின்றார்களே அவர்கள் தான் மக்கள் இவர்கள் இப்படித்திரண்டு சிறு துரும்பையாவது அசைக்க முடியுமா? முட்கம்பி வேலிக்குள் இருக்கும் மக்களை வெளியேற்ற வைப்பார்களா?

எங்களைப் பொறுத்தஅளவில்எல்லோரும் மக்கள் தான் இப்ப நக்கிக்கொண்டிருப்பவர்களும் தான் சிங்களவர்களும் தான் எல்லோரும் மக்கள் தான் யாரும் எல்லோரும் எங்கேயும் இருக்கலாம். மக்கள் சக்தியே மாபெரும் சக்தி.

எங்களுக்கு இணையத்தளங்கள் இருக்கின்றன தேசம்,நாசம்,மோசம்,பாசம் என்று எத்தனையோ பெயர்கள் இருக்கின்றன. இப்பொழுது போய் ஒன்றும் செய்ய இயலாது. கண்மண் தெரியாத வெறி ஒன்றிரண்டு நாள் போகட்டும். வெறி முறிய அவங்கள் தந்த காசுக்குத் தக்கபடி விளாச வேண்டியது தானே எப்படி விளாசிறமோ அதுக்குத் தக்கபடி காசு தருவார்கள்.

சொற்களுக்கா பஞ்சம். சொந்தச் சரக்கு இல்லாவிட்டாலும் இரவல் சரக்கு இருக்கிறது தானே. மக்கள் புரட்சி, பினாமி, பாசிசம், அராஜகம், திரிபுவாதம், புரட்டல் வாதம் என்று கொஞ்சச் சொற்கள் இருக்கின்றன. கடுகு சீரகம் வெந்தயம் மாதிரி இந்தச் சொற்களிலும் சிலவற்றை எடுத்து மாறி மாறிப் போட்டு தாளித்துவிடவேண்டியது தானே நாங்கள் எழுதுவது எங்களுக்கே விளங்குதோ இல்லையோ பக்கத்தை நிரப்பவேண்டியது தானே.அப்பாடா என்று நிமிர்ந்து விட்டு எங்களுடன் சேர்ந்து நக்கிய ஐந்தாறு பேருக்குப் போன் போட்டால்அவர்கள் பின்னூட்டம் என்று எழுதி நிரப்புவார்கள். அதிலும் பாசிசம் , பினாமி என்ற சொற்கள் வரப்பார்க்க வேண்டும் அவை தானே மக்களை நம்பிய எங்களின் தத்துவங்கள்.

இடையிடை கொம்மினூசிய சுலோகங்களையும் லெனின் மாசேதுங் என்ற மாதிரிப் பெயர்களையும் போட்டுவிட்டால் பரிபூரணதிருப்தி. மக்கள் புரட்சிக்கு இவைதானே அடையாளங்கள்.

இனிச் சேயோன்.

இது வெறும் கற்பனை அல்ல இதுதான் உண்மை சொல்லுக்கும் செயலுக்கும் யாதொரு சம்மந்தமும் இவர்களிடையே கிடையாது மக்கள் சக்தி, மக்களைத் திரட்ட வேண்டும் என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால் மக்களைக் கொன்றவர்களுடன் கூடிக் குலாவுவார்கள் கும்மாளமிடுவார்கள் கேட்டால் பாசிசம் அராஜகம் பினாமி என்ற சொற்களின் அர்த்தமே புரியாது பிதற்றுவார்கள்.

*'நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்*

*நெஞ்சு பொறுக்குதில்லையே'*

என்று பாரதியாரை இங்கு அழைக்கவும் விருப்பமில்லை அந்தாள் பாவம் இந்த ஈனப் பிறவிகளுக்காக பாரதியாரை ஏன் வலிந்து அழைப்பான்?

இன்னமும் கூட ஒன்றையும் உணராது தமிழினப் படுகொலையின் வலிதெரியாது தமது இருப்பிற்காக தமிழரின் இனத்தையும் மானத்தையும் கூறு போட்டு விற்கமுயலும் இவர்களை என்ன செய்தல் தகும். நடந்து வந்த பாதையை திரும்பிப்பார்ப்பது அனைவருக்கும் நலம்.

# தனியே ஒரு குரல்!

பெரும்பாலான மனிதர்கள் காலத்தோடு ஒத்துப் போகிறார்கள். எல்லோரையும் போல சிந்திப்பது, செயல்படுவது, எல்லோரும் எப்படி வாழ்கிறார்களோ அப்படியே வாழ்வது என்று இருந்து விடுகிறார்கள். அவர்கள் வித்தியாசமாக சிந்தித்து, செயல்பட்டு, வாழ்ந்து சமூகத்தை பயமுறுத்துவதில்லை. சமூகத்தை தர்மசங்கடத்துக்கு உள்ளாக்குவதில்லை. ஆனால் எல்லோராலும் அப்படி இருக்க முடிவதில்லை. சிலர் விதிவிலக்குகளாக இருந்து தனிக்குரல் எழுப்புகிறார்கள். அந்தத் தனிக்குரல் சமூகத்தின் காதுகளில் நாராசமாக ஒலிக்கிறது. அந்தத் தனிக்குரலை ஒடுக்க சமூகம் பாடுபட ஆரம்பித்து, பெரும்பாலான சமயங்களில் வெற்றியும் பெற்று விடுகிறது. ஆனாலும் அந்த தனிக்குரல் பல நூற்றாண்டுகள் கழித்தும் ஒலிப்பதுண்டு. அந்தக் குரலுக்கு பிற்கால சமூகம் செவி சாய்ப்பதுண்டு. அப்போது அந்தத் தனிக்குரல் சரித்திரம் படைக்கிறது. மனித குலத்தின் மகத்தான அத்தனை முன்னேற்றங்களுக்கும் இது போன்ற தனிக்குரல்களே மூல காரணமாக இருந்திருக்கின்றன.

பதினாறாம் நூற்றாண்டில் இத்தாலியில் ஒலித்த அப்படிப்பட்ட ஒரு தனிக்குரல் கலிலியோ கலிலி என்ற அறிஞருடையது. கி.பி 1564 ஆம் ஆண்டு பிறந்த கலிலியோ எதையும் மிக நுணுக்கமாக கவனிப்பவராக விளங்கினார். கிறித்துவக் கோயிலுக்கு அவர் சென்றிருந்த ஒரு சமயத்தில் தொங்கு விளக்கு ஒன்று காற்றால் ஆடிக் கொண்டு இருந்தது. காற்று வேகமாக வீசுகையில் விளக்கு வேகமாகவும், வேகம் குறைவாக வீசும் போது விளக்கு குறைவான வேகத்துடனும் ஆடிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டே இருந்த கலிலியோவுக்கு அதில் மாறாத ஒரு விஷயம் இருப்பது கவனத்தைக் கவர்ந்தது.

தன் நாடியைப் பிடித்து அந்த விளக்கின் அசைவுகளை கலிலியோ ஆராய்ந்தார். வேகமாக அசையும் போதும் சரி, நிதானமாக அசையும் போதும் சரி அந்த விளக்கு ஒவ்வொருமுறையும் போய் திரும்பி வர ஒரே கால அவகாசத்தை எடுத்துக் கொண்டது அவருக்கு வியப்பை அளித்தது. அந்தக் கண்டுபிடிப்பு ஊசல் விதியாக எடுத்துக் கொள்ளப்பட்டு பிற்காலத்தில் கடிகாரங்களை உருவாக்க உதவியது. அவர் அந்த ஊசல் விதி கண்டு பிடித்த போது அவருக்கு வயது இருபது.

அரிஸ்டாட்டில் சொன்ன விதி ஒன்று யாராலும் கலிலியோவின் காலம் வரை சரியா என்று ஆராயப்படாமலேயே இருந்தது. அது எடை கூடிய பொருள்கள் எடை குறைந்த பொருள்களை விட வேகமாய் கீழே விழக் கூடியவை? என்பது தான். கலிலியோவிற்கு அது சரியாக இருக்கும் என்று தோன்றவில்லை. எனவே அவர் பல வித எடைகளில் இரும்புக்குண்டுகளை எடுத்துக் கொண்டு பைசா கோபுரத்தின் மேலே சென்று ஒவ்வொன்றையும் கீழே போட்டுப் பார்த்தார். எல்லாம் கீழே விழ ஒரே நேரத்தை எடுத்துக் கொண்டன. இதன் மூலம் அது வரை நம்பப்பட்டு வந்த அரிஸ்டாட்டிலின் அந்த குறிப்பிட்ட விதி தவறென்று கலிலியோ நிரூபித்துக் காட்டினார்.

அதோடு அவர் நிறுத்தியிருந்தால் அவர் புகழோடும், செல்வத்தோடும் மீதமுள்ள வாழ் நாள் முழுவதும் வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் பெயர் சரித்திரத்தில் சிறிதாகத் தான் எழுதப்பட்டிருக்கும். அவர் தன் அறிவியல் ஆராய்ச்சியின் அடுத்த கட்டங்களுக்குச் சென்றார். அது அவருடைய பிரச்னைகளுக்கு அஸ்திவாரம் போட்டது.

அவர் உருவாக்கிய டெலஸ்கோப்பால் சந்திரனைப்பார்த்தார். சந்திரன் மிக அழகாக சமதளமாக இருக்கும் என்று எதிர்பார்த்தவருக்கு அதில் பாறைகளும், மலைகளும், மேடு பள்ளங்களும் இருப்பது வியப்பாய் இருந்தது. தன் டெலெஸ்கோப்பின் சக்தியை மேலும் பன்மடங்கு கூட்டி ஜனவரி 7, 1610 அன்று அந்த டெலஸ்கோப்பை யூபிடர் கிரகம் பக்கம் திருப்பினார். யூபிடர் கிரகம் அருகில் மூன்று நட்சத்திரங்கள் நேர்கோட்டில் இருப்பதைக் கண்டார். சிறிது நேரம் கழித்துப் பார்க்கையில் அந்த நட்சத்திரங்கள் இடம் மாறி அதே போல் நேர்கோட்டில் இருப்பதைக் கண்டார். அப்போதுதான் அவை யூபிடரின் உபகிரகங்கள் என்றும் அவை யூபிடரைச் சுற்றி சுழன்று கொண்டு இருக்கின்றன என்றும் அவர் முடிவுக்கு வந்தார். கலிலியோ தன் ஆய்வுகளைத் தொடர்ந்தார்.

68 வயதாகி இருந்த கலிலியோவிற்கு கண்பார்வையும் மங்க ஆரம்பித்திருந்தது. அவர் நோய்வாய்ப் பட்டும் இருந்தார். இந்த நிலையில் அவரை சித்திரவதைப் படுத்துவோம் என்று அதிகாரவர்க்கம் அச்சுறுத்தவே தான் சொன்னது எல்லாம் தவறென்று கலிலியோ பகிரங்கமாக ஒப்புக் கொண்டார். பூமி அசையாமல் இருந்த இடத்தில் இருக்க சூரியனே அதைச் சுற்றி வருகிறது என்று பூமியைப் பற்றிச் சத்தமாகச் சொன்ன அந்த நேரத்தில், கடைசியில் ஆனாலும் அது நகர்கிறது என்று முணுமுணுத்ததாக சிலர் சொல்வதுண்டு. வீட்டு சிறையிலேயே தன் மீதமுள்ள வாழ்நாளைக் கழிக்க வேண்டி வந்த கலிலியோ இந்த வானவியல் ஆராய்ச்சிகளை விட்டு மற்ற விஞ்ஞான ஆராய்ச்சிகளில் தன்னை மரணம் வரை ஈடுபடுத்திக் கொண்டார்.

கோபர்நிகஸின் கண்டுபிடிப்பு சரியே என்பது பிற்காலத்தில் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டதால் 1822 ஆம் ஆண்டு அவருடைய நூல்களுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது. பின்னர் சில நூற்றாண்டுகள் கழித்து வட்டிகன் 1992 ஆம் ஆண்டு பகிரங்கமாக கலிலியோ குற்றமற்றவர் என்றும், அவரை விசாரித்து சிறைப்படுத்தியது தவறு என்றும் ஒத்துக் கொண்டது.

சில நேரங்களில் உண்மை என்று உணர்வதை வெளியே சொல்லும் போது அது அக்கால கட்டத்தில் இருப்போரின் அந்த சூழ்நிலைக்கு ஏற்க முடியாததாக இருக்கலாம். ஆனாலும் உண்மை அப்படி தனியாகவே ஒரு குரலில் ஒலித்தாலும், பிற்காலத்தில் அந்த தனிக்குரல் உண்மையென்று அனைவரும் உணரும் நிலை வருவது நிச்சயம்.

எனவே சில நேரங்களில் தனிக்குரலாக உங்கள் கருத்து ஒலிப்பதில் வெட்கம் கொள்ளாதீர்கள். அக்குரல் உங்களை வரலாற்றுப் பக்கங்களில் பதிய வைக்கும் குரலாகக் கூட இருக்கலாம்.

- என். கணேசன்

# கைகுலுக்கத் தயாராகும் இரண்டு ஆணைக் குழுக்கள்



இந்த மாத இறுதிக்குள், கொழும்புக்கு பயணமொன்றை மேற்கொள்கிறார் இந்திய பாதுகாப்புத்துறைச் செயலாளர் சிவசங்கர் மேனன்.

இந்திய அரசு ஆரம்பித்துள்ள 50,000 வீடமைப்புத் திட்டம் வன்னியில் முன்னெடுக்கப்படுகிறதா என்பதை கண்காணிப்பதற்கு மேனன் அங்கு செல்லவில்லை.

அது நடைபெறுவது போல் தெரியவில்லை என்பது வெறு விவகாரம்.

இருப்பினும் ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில், வீட்டோ அதிகாரம் கொண்ட ஐவரின், இந்தியப் பயணத்தில் பின்னர், இந்திய உயரதிகாரி இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் விஜயம் இது.

அமெரிக்க, பிரஞ்சு பிரித்தானிய சீன மற்றும் இரஷ்யத் தலைவர்களின் அண்மைக்கால இந்திய விஜயம், இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் நெகிழ்வுப் போக்கினை உருவாக்குமென இந்திய கொள்கை வகுப்பாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி, பாதுகாப்பு உடன்படிக்கைகளை மேற்கொண்டு விடலாமென இந்தியா எண்ணுகிறது போலிருக்கிறது.

அதேவேளை ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் நியமித்த மூவரடங்கிய ஆலோசனைக் குழுவினர், இலங்கைக்குச் செல்வதற்கு முன்பாக, சில நகர்வுகளை முன்னெடுக்க இந்தியா விரும்புகிறது.

மேனனின் இலங்கைப்பயணம், தமிழ்மக்களின் அரசியல் தீர்வு குறித்த விடயத்தை உள்ளடக்கியிருக்கும் என்கிற தமிழ்நாட்டின் எதிர்பார்ப்பினை திசை திருப்புவதற்கு, விடுதலைப்புலிகளால் இந்திய உயர் மட்டத் தலைவர்களின் உயிருக்கு ஆபத்து, மும்பை தாதா இப்ராகிம் தாவுத்துடன் புலிகளுக்கு தொடர்புண்டு போன்ற பல பரப்புரைகளை இந்திய புலனாய்வுப் பிரிவினர் அவிழ்த்து விட்டுள்ளனர்.

இறுதிப்போரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பல உயர்மட்ட தலைவர்கள் தப்பிச் சென்றுள்ளார்கள் என்று இந்தியத் தரப்பினர் கூறும் தகவல்கள், இலங்கை அரச மட்டத்தில் பதட்டத்தை உருவாக்குவதைப் பார்க்கிலும் தமிழ்நாட்டிலேயே அதிக அதிர்ச்சியலைகளை ஏற்படுத்துமென நம்பலாம்.

சர்வதேச போர்க்குற்ற விசாரணையின் முக்கியத்துவத்தை குறைப்பதற்கு, விடுதலைப்புலிகள் மறுபடியும் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று பரப்புரை மெற்கொள்வது, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் தேவையாக அமையலாம்.

ஆனாலும் புலம்பெயர் நாடுகளில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களும், இராஜதந்திர ஆளுமை கொண்ட பரப்புரைகளும் இந்தியாவின் புலிக்கதைகளை மேவிச் சென்றுவிடும் போல் தெரிகிறது.

ஐ.நா சபையின் ஆலோசனைக் குழுவிற்கு அளிக்கப்பட்ட போர்க்குற்ற ஆவணங்களுக்கு என்ன நடக்குமென்பது தான் புலம்பெயர் மக்கள் மத்தியில் தற்போது எழுந்துள்ள கெள்வி.

ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் காலக்கெடுவினை இம்மாதம் 31ம் திகதிவரை நீடித்த கையோடு, பான் கீ மூனின் ஆலோசனைக் குழுவினர், இலங்கைக்கு செல்லவிருக்கிறார்கள் என்ற செய்தியும் வந்தது.

வழமைபோன்று, தேசப்பற்றுள்ள தேசிய இயக்க சிங்கங்கள், மகாவம்ச ஹெல உறுமயக் காரர் யாவரும் இதனை எதிர்க்க ஆரம்பித்துள்ளனர்.

அத்தோடு மகிந்தர் உருவாக்கிய கற்றுக்கொண்ட பாடங்களின் நல்லிணக்க ஆலோசனைக்குழுவில் சாட்சியமளிக்க, மர்சூகி தருஷ் மானும், யாஸ்மின் அகாவும், ஸ்டீபன் ரட்ணரும் வருகிறார்களென்று அமைச்சர் ஹெகலியரம்புக்வெல புதிய விளக்கமொன்றினை சிங்கள மக்களுக்கு அளித்துள்ளனர்.

நியூயோர்க்கை தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைக் கண்காணிப்பகம், அனைத்துலக மன்னிப்புச்சபை மற்றும் சர்வதெச நெருக்கடிக் குழு (ICG) ஆகியோர் இணைந்து வெளியிட்ட அறிக்கையில், மகிந்தரின் நல்லிணக்க குழு நம்பகத்தன்மையற்றதால், தாம் அதில் கலந்துகொள்ள முடியாதென தெரிவித்த விடயத்தை ரம்புக்வெல மறைத்தாலும், பான் கீ மூனின் குழுவினர் நினைவில் கொண்டால் நல்லது.

## அரசியல் அலசல்

**இதயச்சந்திரன்**

பட்டறிவிலிருந்து கற்றுக்கொள்ள முயலும் நல்லிணக்க ஆணைக்குழுவழனரைச் சந்திப்பதோடு, முகாம்களில் வதைபடும் மக்களையும், மீள்குடியேற்றமென்று நடுத்தெருவில் விடப்பட்டவர்களையும், இறுதிப்போரில் நிகழ்ந்த இடங்களையும் பான் கீ மூனின் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டு சாட்சியங்களை பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதையே ஈழத்தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

சிங்களத்தின் நல்லிணக்க குழு போன்று, இதுவும் ஒரு கண்துடைப்பு ஆணைக்குழுவாக மாறிவிடக் கூடாதென்கிற ஏக்கமே பலரிடம் காணப்படுகிறது.

பான் கீ மூன் அவர்களால் தனது அதிகார வரம்பிற்கு உட்பட்டு, அமைத்த இந்த ஆலோசனைக் குழவினர் சுயாதீன சர்வதேச போர்க்குற்ற விசாரணைக் குழுவொன்றினை அமைப்பர்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே தமது சட்சியங்களை மக்கள் முன் வைத்தார்கள்.

ஆனாலும் இலங்கை அரசை மீறி, அங்குள்ள மக்களிடமிருந்து சாட்சியங்களை திரட்ட முடியாத கையறு நிலையில் ஐ.நாவின் பொதுச் சபை இருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்

அதனை மகிந்தரின் நல்லிணக்க ஆலோசனைக் குழுவினரிடமிருந்து பெற்றுக்கொண்டால் போதுமென பான் கீ மூன் கருதினால், அவ்வறிக்கையானது தாயக மக்களின் உண்மையான சாட்சியங்களை உள்ளடக்கியிருக்காது என்பதை சுட்டிக் காட்டத் தேவையில்லை.

இந்த இரு குழுக்களும் இணைந்து, தமிழ் மக்கள் மீது சிங்களம் கட்டவிழ்த்த இனப்படுகொலைகளை மூடி மறைத்து விடலாமென்று ஐயமுறுவதில் தவறில்லை.

இச் சந்திப்பானது. இலங்கையில் நடைபெறாமல், வேற்று நாடொன்றில் நிகழ்ந்தால், மகிந்த அரசு சற்று ஆறுதலடையும்.

அதேவேளை இவர்களுக்கிடையே நிகழும் தகவல் பறிமாற்றங்கள் மூலம், பான் கீ மூன் தயாரிக்கும் இறுதி அறிக்கைக்கு என்ன நடக்கும் என்பதை யார் தீர்மானிப்பது.?

ஐ.நா வின் பொதுச் சபையோ அல்லது பாதுகாப்புச் சபையொ, இதனை எவ்வாறு எதிர்கொள்ளும் என்கிற பல கேள்விகள் எழுகின்றன.

இறுதி அறிக்கை நிச்சயமாக வெளியிடப்படும் என்ற உறுதி மொழியை, பான் கீ மூனிடம் பெறக்கூடிய வல்லமையுடையோர் எவரென்பதை தெரிந்து கொள்வது அவசியம்.

**பான் கீ மூனின் ஆணைக்குழு நீதியைப் பெற்றுத்தரும் என்கிற நம்பிக்கையில் வாழ்வைக் கழிக்காமல் இருக்கும் ஆதாரங்களைக் கொண்டு, பொர்க்குற்றவாளின் மீது காத்திரமான நடவடிக்கைகளை புலம் பெயர் மக்கள் முன்னெடுக்கவெண்டும்.**

இவைதவிர, சாட்சியங்களின் பாதுகாப்புத் தன்மை பேணப்படுமெனக் கூறும் தருஸ்மானின் ஆலோசனைக் குழுவானது, கிடைக்கப்பெற்ற ஆவணங்களை, மகிந்தரின் நல்லிணக்க ஆணைக் குழுவிடம் வழங்காதென்பதை யார் உறுதிப்படுத்துவது?

ஏற்கனவே கற்றுக்கொண்ட பாடம் நடாத்தும் நல்லிணக்க குழு முன்பாக சாட்சியமளித்த பலர் துணை இராணுவக் குழுக்களாலும், கபில ஹெந்தி விதாரணயின் புலனாய்வுக் குழுக்களாலும் அச்சுறுத்தப்படுவதாக செய்திகள் வெளிவருகின்றன

அத்தோடு தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் 'இது சிங்கள தேசம்' பொன்ற சொற்பொழிவுகளும் அங்கு நிகழ்த்தப்படுகிறது.

நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக பிரசங்கம் நடாத்திய, பொளத்த சிங்கள பேரினவாதிகள் கருத்துக்களை, பான் கீ மூன் மட்டுமல்லாது, உலக மக்களும் செவிமடுக்க வெண்டும்

பான் கீ மூனின் ஆணைக்குழு நீதியைப் பெற்றுத் தரும் என்கிற நம்பிக்கையில் வாழ்வைக் கழிக்காமல் இருக்கும் ஆதாரங்களைக் கொண்டு, போர்க் குற்றவாளின் மீது காத்திரமான நடவடிக்கைகளை புலம் பெயர் மக்கள் முன்னெடுக்கவேண்டும்.

## பாலா அண்ணா!!

பாலா அண்ணா பாசமிகு தலைவனின் நேசமிகு
குரலே அண்ணனின் அருகமரும் அதிகாரம்
உடையவரே - சிங்களத்தை சிதறடித்த
சூறாவளியே சுற்றும் பூமிக்கும் சுழலும் காற்றுக்கும்
பேசக்கற்றுக்கொடுத்த ஆசானே

பார் முழுதும் புலிக்கொடி பறக்க தேசமெங்கும் தமிழர்
குரல் ஒலிக்க தண்ணீரில் வந்து தாயகம் தொட்ட
தலையனே என் களத்தில் சிங்களம் எம் குரல்வளை
நசுக்கி சூதுரைத்து நின்றபோது உண்மைக்காய்
ஒலித்தகுரலே பாலா அண்ணா!

திரைகடலோடியும் தமிழீழம் காண்போம் என்றுரைத்த
தமிழே கொடிய நோய் வந்து தேகத்தை வாட்டினாலும்
வேகத்தைக்குறைக்காமல் கொடிது கொடிது
மண்டியிடும் தமிழன் வாழ்வென்ற வரிப்புலியே
வெள்ளைத்தலைகளுக்குள் அரியாசனம் பெற்ற
தளபதியே பாலா அண்ணா!

வஞ்சகரெல்லாம் வாழ்வாங்கு வாழ -
சூழப்பிறந்த அண்ணன் தளபதியே கொடிய
புற்றுநோயுங்களை காவு கொள்வதா ?
நம்பமுடியவில்லை அண்ணா நம்பமுடியவில்லை

அரசியல் சூழ்ச்சிகள் நிறைந்த தருணத்தில் எம்மை
விட்டு நீங்கள்பிரிந்தீர்கள் நாம் தவித்தோம் உங்கள்
பிரிவால்எதிரிதான் சொல்கிறான் நீங்கள் செத்து
மடிந்ததாய் உங்கள் உடல் தான் மாண்டது என்
தேசமெங்கும் உங்கள் குரல் ஒலிக்கிறது

– அம்பிகைபாகன்

மக்கள் படை
அணிவகுப்பில்
மலைகளை
அதிரச் செய்வோம்

ஒரு பேப்பர்
ORU PAPER

# 4ம் ஆண்டு நினைவலைகள்



## தேசத்தின்குரல்

## அன்ரன் பாலசிங்கம்

**04.03.1938 - 14.12.2006**

விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் ஒரு மூத்த தலைமகனாக பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்றுசேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"


- தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் -

நினைவு நாள் 14.12.2010

TAMIL EELAM

வெளியீடு: வெளியீட்டுப்பிரிவு, அனைத்துலகத் தொடர்பகம், தமிழீழ விடுதலைப் புலிகள் - தமிழீழம்

# சாட்சிகள் நிறைந்த யுத்தம்




**கோபி**
*ஒரு பேப்பர்*

சிறிலங்கா அரசாங்கம் தமிழர்கள் மீது நடாத்திய யுத்தத்தினை 'சாட்சிகளற்ற யுத்தம்' (Without Witness) எனப் பொதுவாக ஊடகங்களால் அழைக்கப்பட்டு வந்தது. இவ்வாறு அழைக்கப்பட்டதில் ஒரு நியாயமும் இருந்ததை மறுப்பதற்கில்லை. போர் நடந்த பகுதிக்கு ஓரளவுக்கேனும் சுயாதீனமாக செயற்படக் கூடிய ஊடகவியலாளர்கள் எவரும் அனுமதிக்கப்பட வில்லை. போர் தீவிரமடைந்தபோது, அங்கு நிலை கொண்டிருந்த அனைத்துலக மட்டத்தில் இயங்கும் தொண்டு நிறுவனங்கள், அரசு-சாரா நிறுவனங்கள் என்பனவற்றின் பணியாளர்கள் சிறிலங்கா அரசின் நிர்ப்பந்தத்தின் பேரில் களத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். இது தவறி அங்கிருந்து வந்த செய்திகளும் ஒன்றில் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து அல்லது சிறிலங்கா அரச தரப்பிலிருந்து வெளிவந்தவையாக இருந்தமையால், அவை பரப்புரை நோக்குடன் வெளியிடப்பட்டவையாக, நம்பகத்தன்மை குறைந்தவையாக கருதப்பட்டன அல்லது குறித்த தரப்பினரின் செய்தியாக அடையாளம் காணப்பட்டன.

போர் நடாத்தப்பட்ட பிரதேசங்களில் இருந்த பொதுமக்களுடன் பேசக்கூடிய வகையில் மட்டுப்படுத்தப்பட்டளவு (செய்மதி) தொலைபேசி வசதிகள் இருந்தமையால், அவர்களிடமிருந்து ஓரளவுக்கேனும் செய்திகளை பெற முடிந்தது. இருப்பினும் அவற்றை நம்பகத்தன்மையுடைய செய்திகளாக ஏற்றுக் கொள்ள சர்வதேச ஊடகங்கள் மறுத்துவிட்டன. இங்குள்ள (மேற்கு நாடுகளில்) அரசியல் வாதிகளோ (குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள்) தாம் இச்செய்திகளையிட்டு அனுதாபத்தை கொண்டிருந்தாலும், தமது அரசாங்கங்கள் அவற்றினை ஏற்றுக் கொள்வதற்கு போதிய சாட்சியங்கள் எதுவுமில்லை என கவலை தெரிவித்து வந்தார்கள்.

வன்னியில் போர் உக்கிரமடைந்தபோது அங்கு கொல்லப்படும் மற்றும் காயப்படும் பொதுமக்களின் விபரங்களையும், ஒளிப்படங்கள் காணொளிகளை இணைத்து தினசரி மின்னஞ்சல் வாயிலாக வெளியுலகுக்கு வெளியிட்டு வந்தார்கள்.

பி.பி.சி. போன்ற ஊடகங்கள் அவர்களை தொலைபேசி வழியாக பேட்டி கண்டு செய்தி வெளியிட்டார்கள். களத்திலிருக்கும் மருத்துவர்கள் என்ற வகையில் அவர்களது தகவல்கள் ஓரளவுக்கு முக்கியத்துவம் பெற்றன. ஆனால் போர் முடிந்து அவர்கள் சிறிலங்கா அரசினால் தடுத்து வைக்கப்பட்ட போது, தாங்கள் முன்னர் வெளியிட்டு வந்த செய்திகளும் படங்களும் விடுதலைப் புலிகளின் நிர்ப்பந்தத்தினால் வெளியிட்ட மிகைப்படுத்தப்பட்ட தகவல்கள் எனக் கூறி தமது முன்னைய தகவல்களின் நம்பகத் தன்மையை கேள்விக் குறியாக்கினார்கள். இதனால் அவர்கள் வெளியிட்ட செய்திகளின் மீதான கொஞ்ச நஞ்ச நம்பகத்தன்மையும் இழக்கப்பட்டது. *(இம்மருத்துவர்கள் சிறிலங்கா அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் குறிப்பிட்டவைதான் அழுதங்களின் நிமித்தம் வெளியிட்ட கருத்துகள் என விக்கிலீக்ஸ் இப்போது தகவல் வெளியிட்டுள்ளது.)*

இச்சூழ்நிலையை வாய்ப்பாக பயன்படுத்திய சிறிலங்கா அரசாங்கம் போரில் பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை எனவும் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளே எனவும் அப்பட்டமான பொய்யை தயக்கமின்றி கூறிவந்தது. தடயங்கள் யாவற்றையும் அழித்துவிட்டோம், சாட்சிகளாக இருப்பவர்களின் வாயடைத்து வைத்துள்ளோம் என்ற தைரியத்தில் சிறிலங்கா இவ்வாறான பிரசாரத்தில் ஈடுபட்டுவந்தது. இந்தியா உட்பட்ட தென்னாசிய நாடுகளின் இராஜதந்திரிகளும் இப்பிரச்சாரத்திற்கு துணைபுரிந்து வந்தார்கள். இதுவரை ஒடுக்கு முறைக்கு உள்ளாகும் மக்களுக்கு குரல் கொடுப்பதாக கூறிவந்த கியூபாவும் சிறிலங்காவிற்கு தனது நிபந்தனையற்ற ஆதரவினை வழங்கி, இடது சாரி நாடுகளின் 'நேர்மையை' வெளிப்படுத்தியது.

ஆனால் தொடர்ந்து வந்த செய்திகள் சிறிலங்கா அரசு எதிர்பார்த்தபடி அமையவில்லை. போர்க்குற்ற ஆதாரங்கள் மெல்ல மெல்ல கசிய ஆரம்பித்தன. போர் முடிவடைந்த நாட்களில் பிரித்தானியாவிலிருந்து வெளிவரும் 'The Times' பத்திரிகை, செய்மதி மூலம் எடுக்கப்பட்ட இறுதிக்கட்ட போர் நடந்த பிரதேசத்தின் படத்தினை வெளியிட்டது. அதனை தொடர்ந்து சனல் 4 தொலைக்காட்சி சில படங்களையும், வவுனியாவில் மக்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த முகாம்களில் இரகசியமாக உள்நுழைந்து எடுக்கப்பட்ட காணொளிக் காட்சிகளையும் வெளியிட்டது. இவ்வாறான முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட பிரித்தானியாவில் வசிக்கும் தமிழ் பெண்ணான தமிழ்வாணி ஞானக்குமரனின் நேர்காணலையும் சனல் 4 காண்பித்தது.

சிறிலங்கா இராணுவத்தினால் மூர்க்கத்தனமான முறையில் கொல்லப்பட்ட பலரின் ஒளிப்படங்கள் இணைய தளங்களிலும் பத்திரிகைகளிலும் வெளிவர ஆரம்பித்தன. இவற்றுள் தேசியத் தலைவர் அவர்களது பதினொரு வயது மகனின் படமும் அடங்கியிருந்தது. இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், ஆண்கள் அம்மணமாக்கப்பட்ட நிலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்படும் காட்சிகளையும், அதன் பின்னணியில் இராணுவத்தினர் பேசிய விடயங்களையும் கடந்த வருடம் செப்ரெம்பரில் சனல் 4 ஒளிபரப்பியது.

இக்காணொளி போலியானது என சிறிலங்கா அரசாங்கத்தின் 'வல்லுனர்கள்' கூறிவந்தாலும், அதன் நம்பகத்தன்மையை ஐ.நா. நிபுணர்கள் உறுதிப்படுத்தினார்கள். இக்காணொளியின் தெளிவான பிரதியையும், அதனுடன் இணைந்த மேலதிக காட்சிகளையும் (இசைப்பிரியாவின் உடலம், தளபதி இரமேஸ் மீதான விசாரணை) இம்மாத முற்பகுதியில் சனல் 4 வெளியிட்டது.

இவையனைத்தும், சிறிலங்கா இராணுவ தரப்பிலிருந்து கிடைக்கப் பெற்ற ஆவணங்கள் என நம்பப்படுகிறது. சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவரது வாக்குமூலம் அடங்கிய சத்தியக் கடதாசியினை (affidavit) தாம் பெற்றுக் கொண்டுள்ளதாக இனப்படுகொலைக்கான தமிழரமைப்பு (Tamils Against Genocide) அறிவித்தது. உலகத்தமிழர் பேரவையும் தம்வசம் போர்க்குற்றங்களை ஆதாரப்படுத்தும் நூற்றுக்கணக்கான ஒளிப்படங்கள் உள்ளதாகவும், தாம் அவற்றை சிறிலங்கா இராணுவ தரப்பிலிருந்தே பெற்றுக் கொண்டதாக குறிப்பிட்டுள்ளதுடன். அவற்றை சர்வதேச ஊடகங்களுக்கு காட்டியுள்ளதாக தெரிவித்துள்ளது.

ஆனால் இவற்றையெல்லாம் விஞ்சக் கூடிய வகையில், வேறொரு தரப்பிலிருந்து தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. விக்கிலீக்ஸ் இணையதளம். சிறிலங்காவிலுள்ள அமெரிக்க தூதரகத்திலிருந்து, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட தள அறிக்கைகளை (cables) வெளியிட்டு வருகிறது. ஆச்சரியத்தக்க வகையில் வெளியாகியிருக்கும் இத்தகவல்களிலிருந்து, போர் நடைபெற்றபோதும், அதற்கு முன்னரும், பின்னரும் உள்ள நிலவரம் தொடர்பாக போதிய தகவல்களை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் பெற்றுக் கொண்டுள்ளமை தெரிய வருகிறது. குறிப்புகளை பரிமாறிக் கொள்ளும் வழக்கம் நட்பு நாடுகளின் வெளியுறவுத் துறையிடம் காணப்படுவதால், மற்றைய மேற்கு நாடுகளின் அரசாங்களும் இத்தகவல்களை உரிய காலத்தில் பெற்றுக் கொண்டிருக்கும் எனக் கருத இடமுண்டு.

விக்கிலீக்ஸ் இனால் மிக அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் படி, சிறிலங்கா அரசாங்கத்திற்கும் அதனுடன் சேர்ந்தியங்கிய கருணா, பிள்ளையான், டக்ளஸ் தலைமையிலான ஆயுதக் குழுக்களுக்கான தொடர்பினை அமெரிக்க தூதரகம் அறிந்து வைத்திருந்தமையும். இவ்வாயுதக் குழுக்கள், கொலை, கொள்ளை, கப்பம் பெறுதல், ஆட்கடத்தல், சிறுவர்களை படையில் சேர்த்தல், பெண்களை கடத்தி பாலியல் தொழிலுக்கு விற்றல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதனை அமெரிக்க தூதரகம் தனது தள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

கருணா குழு, டக்ளஸ் குழு போன்ற ஆயுதக் குழுக்கள் தமிழ் வர்த்தகர்களிடம் பணம் வசூலிப்பதற்கு சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய இராஜபக்ச அனுமதியளித்தமையை அமெரிக்க தூதரகம் அறிந்து வைத்திருந்துள்ளது. கோத்தாபாய அமெரிக்க குடியுரிமை பெற்றவர் என்பதும், அதற்கு பின்னரும் அவர் அமெரிக்காவிற்கு சென்று வந்துள்ளமையும் இங்கு கவனிக்கத் தக்கது.

ஒட்டுக் குழுக்களினது நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் எதுவும் தமிழ்மக்களுக்கு புதியவை அல்ல எனினும் இவை சுயாதீன செய்தி மூலங்களிலிருந்து வெளியிடப்படாமையால், அவற்றின் நம்பகத்தன்மை பற்றிய ஐயப்பாடு இருந்து வந்தது. டக்ளஸ், கருணா, பிள்ளையான், குழுக்களைப்பற்றிக் குறிப்பிடும் போது, இக்குழுக்கள் தனித்து தமிழர்களை கொண்டவையாக இருந்தபோதும், தமிழ் மக்களுக்கு எதிராகவே குற்றமிழைத்து வந்தன என ஒரு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. தமிழ்மக்கள் நீண்டகாலமாகவே இவ்வாறான குற்றச்சாட்டினை வெளியிட்டு வருவது. இங்கு சுட்டிக் காட்டுதல் பொருத்தமாக இருக்கும்.

போரின் இறுதி மணித்தியாலங்களில், விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்கள் அவருடைய மகனுடன் பகிர்ந்து கொண்டவை, கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை அவர்களது தொலைப்பேசி உரையாடல் என்பனவும் இப்போது வெளிவந்துள்ளன.

இந்நிலையில் சிறிலங்காவின் இனவழிப்பு யுத்தத்தினை இன்னமும் சாட்சியமற்ற யுத்தம் எனக் குறிப்பிட முடியாது. போரின்போது நடந்தவற்றினை மூடி மறைக்க முடியாதளவுக்கு சாட்சியங்கள் குவிந்து வருகின்றன. இவற்றினை பயன்படுத்தி ஒரு சுயாதீனமான போர்க்குற்ற விசாரணை நடைபெறுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. இதற்கான விடையினை வரும் புத்தாண்டில் பெற்றுக் கொள்ள முடியும் என நம்புவோமாக.






# உது கண்ணை வித்துச் சித்திரம் வேண்டிய கதைதான் பாருங்கோ..

**ஆச்சி**
*(ஒரு பேப்பருக்காக)*

ஒன்றும் ஏலாது என்று பாறிப் போய் இருந்த என்னைச் சும்மா இருக்க விடாது, உசுப்பிவிட்டு எழுத வைக்குதுகள் இந்தப் பாழாய் போன பெத்ததுகள். எல்லாம் இந்த பிள்ளைகளை பெத்துவிட்டு, பாசமாய் வளக்கிறம் என்று நினைத்துக் கொண்டு, இந்த நாட்டுச் சட்ட திட்டங்கள் தெரியாமல், அல்லது தெரிந்து கொண்டு எங்கை பிடிபட போகிறமே என்று நினைத்துக் கொண்டு அலுவலைப் பாக்கிற எங்கட சனத்தைத்தான் சொல்லுகிறேன்.

*'அடினும் பால்பெய்து கைப்பு அறாது பேய்ச் சுரைக்காய்'*

பாலை கலந்து சமைத்தாலும் சுரைக்காயின் கசப்பு மாறாது மாதிரி இதுகளை புத்தி சொல்லித் திருந்தேலாது என்றாலும் என்ட ஆத்தாக் கொடுமைக்குச் சொல்லுறன்.

நீங்கள், புருசனும் பெண்சாதியும், இரண்டு பேரும் வேலைக்கு போகவேணும், உழைக்க வேணும், பிள்ளைகள் நல்லா இருக்க வேணும் என்றுதானே ஓடி ஓடி உழைக்கிறோம் என்று சொல்வதெல்லாம் சரி மோனே. ஆனால் பிள்ளைகளை தனிய வீட்டில விட்டு போட்டு வேலைக்கு போகாதேங்கோ.

இங்கத்தைய சட்டப்படி பதின்மூன்றும், அதற்கு உட்பட்ட பிள்ளைகளையும் தனிய விட்டு விட்டு எங்கும் போக ஏலாது. பதின்மூன்று வயது கூட அவரவர் பிள்ளைகளின் மன வளர்ச்சிக்கு ஏற்ப மாறுபட்டு இன்னும் கூடுதலாக இருக்கலாமாம். அத்தோடு கைக்குழந்தைகளை வீட்டில் தனிய விட்டு சில நிமிடங்கள்தானும் கூட போக முடியாது என்றுதான் சட்டம் கூறுகிறது. எங்கட சனம் சிலது பிள்ளையை கொட்டுக்குள் நித்திரை கொள்ள விட்டு, பக்கத்து மூலைக்கடையில பால் வேண்ட ஓடுகிறதும், ஏன் இன்னும் சிலர் படக்கொப்பி எடுக்கவும் ஓடுகினம். எல்லாம் ஒருநாள் முதலுக்கு மோசமாய் வரும்.

இதவிடக் கொடுமை 12, 13 வயது பிள்ளையிடம், அடுத்த வயது குறைந்த சகோதரத்தை பார்க்கும் படி சொல்லி இருவரையும் தனிய விட்டு விட்டு போவது, போன் அடித்தால், பிள்ளை எடுத்து, அம்மா குளிக்கிறா, நானும் தம்பியும் விளையாடுகிறம் என்று சொல்லும்,

இங்கு 16 வயதுக்கு குறைந்த ஒருவரை, இன்னொரு பிள்ளையைப் பார்க்கும் படி சொல்ல ஏலாது பாருங்கோ. அத்தோடு 15, 14, 13 வயது பிள்ளைகளைக் கூட நீங்கள் தனியாக ஒரு இரவு வீட்டில் விட இங்குள்ள சட்டம் (children and young person's act 1933) அனுமதிக்காது. கேள்விப்பட்டிருப்பீர்கள்,

குழந்தைக்கு சுகமில்லை என்று, வேலைக்கு போன அம்மாவுக்கு போன் அடிக்க, அவ போனில் சொன்னதின் படி எதிர் வீட்டு தமிழ் அன்ரியைக் கூப்பிட ஓடிய பிள்ளை, கார் அடித்து இறந்து விட்டது. வீட்டில் இருந்த குழந்தையும் அவசர உதவி கிடைக்காமல் இறந்து விட்டது. வேலைக்கு போன தமிழ் பெற்றோருக்கு சிறைத் தண்டனை.

பிள்ளைகள் கேட்டா நாம் அவர்களைப் பெறுகின்றோம், இல்லை நாமாகத்தான் விரும்பிப் பெறுகிறோம், பிறகு ஏன் இந்த அவதிப் பறப்பு. பிள்ளைச் செல்வம் மகத்தானது. அதை ஒரு செல்வம் போல பேணி பாதுகாத்து வளர்க்க வேண்டும். நீங்கள் சொத்துப் பத்து சேர்க்க வேண்டாம் அதை விட அவர்களின் மனநிலை பாதிக்கப்படாமல், ஒன்று பெத்தாலும் அக்குழந்தையை சரியாக வளர்த்தால் போதும்.

இங்கு பிள்ளைப் பராமரிப்புக்கு சரியான செலவு, ஆனாலும் அதை மிச்சம் பிடிக்க எண்ணி பின் மொத்தமாக விலை கொடுக்க வேண்டி வரும்.

## 'தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழன்' என்பார்கள். பிள்ளைகளோடு தோழமையோடு அணுகி அவர்களின் நிலையில் இருந்தும் பிரச்சனையை பார்க்க பழக வேண்டும்

இது மட்டுமே பிள்ளை வளர்ந்தாலும், அதுகளை சும்மா விட்டு வைப்பது இல்லை. தாங்கள் படிக்காத படிப்பெல்லாம் அதுகள் படிக்க வேண்டும், தாங்கள் எடுக்காத பெறுபேறுகள் எல்லாம அதுகள் எடுக்க வேணும், வயலின், மிருதங்கம் நடனம் என்று ஒரு கலைப்பாடம், பிறகு தாய்மொழி எனத் தமிழ் பாடம் அதை விட விளையாட்டு, நீச்சல், பேச்சு என்று ஏறக் குறைய ஒரு நவீன சகலகலாவல்லி அல்லது வல்லவன் ஆக்கி திருப்தி அடைவார்கள். அத்தோடு விட்டு விடுவார்கள் என்றால், அதுதான் இல்லை.

பல்கலைகழக நுழைவுக்கு எந்தத் துறைக்கு படிப்பது, எங்கு படிப்பது, என்பதையும் அவர்களே தீர்மானிக்கிறார்கள். பிள்ளைகளின் விருப்பு வெறுப்புப் பற்றியோ, அவர்களுக்கு எதில் திறமை உள்ளது என்பது பற்றி எல்லாம் அதிகமாக அலட்டிக் கொள்ளதில்லை. ஒன்று மட்டும் நான் சொல்லுவேன்.

'வான்குருவியின் கூடு வல்லார்க்குத்
தொல்கறையான்
தேன்சிலம்பி யாவருக்கும் செய்அரிதால்
யாம் பெரிதும்
வல்லோமே என்று வலிமை சொல்
வேண்டாம் காண்
எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது'

தூக்கணாங் குருவியின் கூடும், குளவியின் கூடும், பழைமையான கறையான் புற்றும், தேன் கூடும், சிலந்தி வலையும் யாராலும் செய்ய முடியாது. ஆதலால் நாம் செய்வது தான் பெரியது என்று தற்பெருமை வேண்டாம். உலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் திறமை உண்டு, பெற்றோர் அதை அடையாளம் கண்டு அதை ஊக்குவித்தால் அவர்களுக்கு இசைந்த ஒன்றில் அவர்கள் திறமையானவர்களாகத் திகழ்வார்கள். வைத்தியரும், பொறியியலாரும், கணக்கியலாளரும் தான் படிப்பென்று இல்லை.


'தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழன்' என்பார்கள். பிள்ளைகளோடு தோழமையோடு அணுகி அவர்களின் நிலையில் இருந்தும் பிரச்சனையை பார்க்க பழக வேண்டும். இங்குள்ள பாடதிட்டத்தில் கேள்விகள் கேட்க வைத்து, அலசி ஆராய்ந்து சுயமாக முடிவெடுப்பதை ஊக்கப்படுத்துகிறார்கள். ஆனால் வீட்டில் வந்தால் நான் சொல்கிறேன், ஏன் என்று விசர்க் கதை கதைக்காமல் செய் என்றால், பிள்ளை செய்யாது, அதனால் வாக்குவாதப்பட்டு, அடிபிடிபட்டு சமூக நிறுவனத்திடம் பிள்ளையை பறிகொடுத்த தமிழ் பெற்றோரும் இருக்கிறார்கள்.

அதே போல மனைவிக்கு அடித்ததால், அந்த வீடு இருக்கும் பிரதேச பக்கமே வரக் கூடாது என்று, பிள்ளைகளையும் பார்க்க கூட அனுமதி இல்லாமல் தவிக்கும் கணவர்களும் உண்டு.

மனைவியே போய் என் கணவருக்கு என்னை அடிக்கும் உரிமையிருக்கிறது, எமக்கிடையில் ஒருபிரச்சனையும் இல்லை அவர் கொஞ்சம் முன்கோபக்காரர் அவ்வளவுதான் என்றாலும். அப்படியா நல்லது, நீர் வேண்டுமென்றால் உமது கணவரோடு சேர்ந்து இரும் ஆனால் குழந்தைகளுக்கு பாதுகாப்பில்லை எனவே நாம் உமது குழந்தைகளை கொண்டு செல்கிறோம் என்று சமூக நிறுவனங்கள் சொல்ல, சீரழியும் தமிழ் குடும்பங்களும் உண்டு.

இங்குள்ள சட்டங்களுக்கு இசைவாக நாம் நடந்தால் எத்தனையோ குடும்பங்களின் சீரழிவைத் தடுக்கலாம்.



# ஐ.நா. மன்றுக்கு ஒரு ஈழமகன் அனுப்பிய கண்ணீர் மடல்

இலங்கையில் நடந்த மோதலின் இறுதிப்பகுதியில் இடம்பெற்றதாகக் குற்றம் சாட்டப்படும் சர்வதேச மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் என்பவைக்கான பொறுப்புப் பற்றிய விடயங்கள் குறித்து ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் நிபுணர் குழுவில் இடம்பெற்றிருக்கும் பெரு மதிப்பிற்குரிய யஸ்மின் சூகா, மார்சுகி டருஸ்மன், ஸ்ரிவன் ரற்னர் எல்லோருக்கும் என் வணக்கங்கள்.

நான் இலங்கையின் வடபகுதி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். இலங்கையில் உயிராபத்து ஏற்பட்டிருந்த நிலையில் புலம்பெயர் நாடொன்றில் அகதியாக வந்து வசித்து வருகின்றேன்.

திருமதி சூகா அவர்களே! தென்னாபிரிக்காவின் உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவில் உறுப்பின ராகப் பணிபுரிந்த உங்கள் நேர்மையையும் உண்மைத் தன்மையையும் நம்புகின்றேன்

திரு.மார்சுகி அவர்களே! இந்தோனேசியக் குடியர சின் சட்டவாளர் நாயகமாக கடமையாற்றிய உங்கள் தகுதியையும், இந்தோனேசியாவின் தேசிய மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினராக இருந்த உங்கள் அனுபவத்தையும், ஐ.நா.வின் இரு உண்மை காண் செயற்பாட்டிலும் பங்குபற்றிய உங்கள் உண்மைத் தன்மையையும் நம்புகின்றேன்.

பேராசிரியர் ஸ்ரிவன் ரட்னர் அவர்களே! மிசிகன் பல்கலைக்கழக சட்டப்பள்ளியில் சட்டத்துறைப் பேராசிரி யராக இருக்கும் உங்கள் வழிகாட்டலை மதிக்கின்றேன்.

தாங்கள் ஐ.நா செயலாளர் நாயகத்திற்கு ஆலோ சனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட குழு மட்டுமே என்பதை நான் நன்கு அறிவேன். இக்குழு இலங்கை யைக் கட்டுப்படுத்தாது. இந்தக் குழுவினர் இலங்கைக் குள் நுழைவதற்கு இலங்கை அரசு அனுமதி மறுத்துள்ளது என்பதையும் அறிவேன்.

இருந்தாலும் தமிழ்மக்களாகிய எங்களுக்கு முதன் முதலாக கிடைத்திருக்கும் இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தையிட்டு மிகவும் ஆறுதலடைகின்றேன். என க்குள் புதைந்திருக்கும் உண்மைகளையும் உள்ளக் குமுறலையும் தங்களுக்கு எப்படியும் முழுமையாக தெரிவித்து விட வேண்டும் என்ற அவாவில் எங்கு தொடங்குவது எதில் முடிப்பது என்று தெரியாமல் எழுத முற்படுகின்றேன். இதில் தங்களிற்கு ஏதும் சிரமம் இருந்தால் பொறுத்துக் கொள்ளவும்.

தாங்கள் வழங்கியிருக்கும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இலங்கை இராணுவம் போர்க்குற்றம் புரிந்திருக்கின்றது என்பதை என்னால் முடிந்த அளவு தங்களுக்கு உறுதிப்படுத்த முற்படுகின்றேன். இலங்கை அரச இயந்திரம் மீது பல தசாப்தங்களாக நம்பிக்கை இழந்திருக்கும் தமிழர்களாகிய நாம் ஒரு பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணையைக் கோரி நிற்கின்றோம்.

அத்துடன் தாங்கள் நீதிக்காக வழங்கியிருக்கும் இச்சந்தர்ப்பத்தை பல தசாப்தங்களாக எங்கள் மனங் களிலும் உடல்களிலும் தேசத்திலும் பதியப்பட்டிருக்கும் ஆழமான காயங்களை ஐ.நா சபைக்கு ஆத்மார்த்தமாக தெரிவிக்கும் அரிய வாய்ப்பாகவும் பயன்படுத்துகின்றேன் என்பதை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்னுடைய தாயார் 1958ல் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். அன்றைய நாட்களில் இலங்கையில் இனக் கலவரம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. அதாவது சிங்கள இராணுவமும் அதனுடன் சேர்ந்த காடையர் கூட்டமும் அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் தமிழ் மக்களின் உயிர்களையும் சொத்துக்களையும் சூறை யாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது சிங்கள அரசிற்கு எதிராக போராட்ட இயக்கங்கள் எதுவும் இருந்திருக்க வில்லை. ஆனால் சிங்கள இனவாத இராணுவம் வைத்தியசாலையில் அன்று பிறந்திருந்த குழந்தையான எனது தாயாரை காலால் தாக்கியது. பச்சைக் குழந் தையை காலால் தாக்கிய கொடியவர்களைப் பற்றி நீங்கள் இதற்கு முதல் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அன்று என் தாயாருக்கு நடந்த தாக்குதல் இலங்கையின் சிங்கள மேலாதிக்க மனோபாவத்திற்கும் மனிதநேயமற்ற தன்மைக்குமான குறியீடு ஆகும்.

இத்தகைய சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் காயங்களும் அரசியல் கல்வி சமூக, பொருளாதார ரீதியாக தோற்கடிக்கப்பட்டதன் விளைவுமே இலங்கையில் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தது. ஆயுதப் போராட்டத்தில் புரியப்பட்டதாகக் கூறப்படும் குற்றங் களுக்கும் விசாரணைகளுக்கும் முதல் ஆயுதப் போராட் டத்தை தூண்டியவர்களுக்கும் உருவாக்கியவர்களுக்கும் என்ன தீர்ப்பினை மானிடத்தின் தலைமை மையமான ஐ.நா சபை வைத்திருக்கின்றது? என தங்களை பணிவுடன் பாதிக்கப்பட்ட சக மனிதனாக கேட்டுக்கொள்கின்றேன்.

இத்தகைய வினாவை எங்களுக்கு நீதியைப்பெற்றுக் கொள்வதற்காக மட்டுமல்ல, உலகில் இனிமேல் எந்த வொரு தீவிரவாதமும் தோற்றம் பெறாமல் மனிதமும் மனித உரிமைகளும் பேணப்பட்டு இந்தப் பூமி சகல மக்களுக்கும் சமாதான சொர்க்கமாக விளங்க வேண்டும் என்பதற்காகவுமே கேட்கின்றேன் என்பதை நீங்கள் ஆத்மார்த்தமாக புரிந்து கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

தொடர்ந்து 1983 ஆம் ஆண்டு யூலை மாதம் என்னுடைய சகோதரன் பிறந்திருந்த போதும் இன அழிப்பு நடைபெற்றது. (இதையும் இனக்கலவரம் என்றே கூறுகிறார்கள் ஆனால் அப்பாவி மக்களாகிய ஒரு இனத்தை இன்னொரு இன இராணுவம் அழித்துச் சிதைப்பதை இனக்கலவரம் என்று சொல்ல முடியாதென்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்).

எனது தாய் பிறந்ததிலிருந்து எங்கள் ஒவ்வொரு வருடைய பிறப்புக்களும் அன்றாட வாழ்வும், கல்வியும் இலங்கை அரச படைகளின் எறிகணை மற்றும் விமானத் தாக்குதல்களாலும் ஆக்கிரமிப்புக்களாலுமே நிறைந்து வந்திருக்கின்றது.

இதற்குள் அப்போது அமைதி காக்கவென இலங்கை க்கு வந்திருந்த இந்திய இராணுவம் அப்பாவியான என் தந்தையை குழந்தையான என் கண்முன்னேயே சுட்டுக்கொன்றது. அப்போது என் தந்தை என்னைத் தூக்கி வைத்திருந்தார். ஆனால் அவர்கள் சிறிதும் இரக்கம் இல்லாமல் என்னை நிலத்தில் தூக்கி எறிந்தார்கள். அப்போது என் சகோதரியை என் அம்மா வயிற்றில் ஏழு மாதக் குழந்தையாக சுமந்தபடி இருந்தார். நாங்கள் நான்கு ஆண் பிள்ளைகள். ஐந்தாவதாக பிறக்க இருந்த தன் பெண் குழந்தையை பார்க்காவிடாது படுகொலை செய்யப்பட்ட என் தந்தைக்கும் அதனால் இன்றும் அநாதையாக அலையும் என் குடும்பத்திற்கும், பாடசாலை மாணவர்களாய் இருந்த என் மைத்துன ரையும் அவர் நண்பனையும் நடுவீதியில் போட்டு உருட்டி உருட்டி அடித்துக் கொலை செய்யப்பட்டதற்கும் எம் போன்ற பாதிக்கப்பட்ட பல்லாயிரம் உறவுகளுக்கும் இந்திய தேசமும் ஐ.நா சபையும் என்ன நீதியைத் தரப்போகின்றது. நாங்கள் அத்தனை ஆவணங்களையும் வைத்திருக்கின்றோம். உங்களால் முடிந்தால் உலகில் எங்களுக்கான நீதியை எங்கே எப்படிப் பெறுவதென்று கூறுங்கள். நாங்கள் சாட்சிகளாய் இரு தசாப்தங்கள் கடந்தும் நீதிக்காகக் காத்திருக்கின்றோம். என்றோ ஒரு நாள் நீதி கிடைக்கும் என்று நம்பி இருக்கின்றோம்.

நாங்கள் பிரித்தானியா ஆட்சிக் காலத்திற்கு முன்பிருந் ததன் படி பிரிந்து வாழ்வதே எங்கள் இருப்பையும் இயல்பு வாழ்வையும் உறுதிப்படுத்தும் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவரவிரும்புகின்றேன். ஐ.நா விதிகளின்படி எங்களிற்கு பிரிந்து செல்வதற்கான உரிமையும் தகமைகளும் இருந்தும் நாங்களும் கொசோவோ போல் மொன்றொநீக்றோ போல் இனிவரும் தென்சூடான் போல் பிரிந்து சென்று சுதந்திரம் பெற ஒரு வாக்கெடுப்பை நடாத்த ஏன் ஐ.நா மன்றம் இன்னமும் முன்வரவில்லை என்ற என் கேள்விக்கும் தாங்கள் பதில் பெற்றுத் தருவீர்கள் என்று நம்புகின்றேன்

இறுதியாக முள்ளிவாய்க்காலில் நூறிற்கும் மேற்பட்ட என்னுடைய நேரடி குடும்ப உறுப்பினர்களை இழந்திருக்கின்றேன் அல்லது தொலைத்திருக்கின்றேன். பலர் பொஸ்பரஸ் குண்டுகளாலும் தடை செய்யப்பட்ட வேறு பல குண்டுகளாலும் காயப்படுத்தப்பட்டிருக் கிறார்கள். அங்கங்களை இழக்க வைக்கப்பட்டிருக் கிறார்கள். இன்னமும் பலர் சிறைப்படுத்தப்பட்டுள் ளார்கள். சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவனு டன் சரணடைந்த என்னுடைய சகோதரன் உட்பட பல உறவுகளிற்கு இன்னமும் என்ன நடந்தது என அறியமுடியவில்லை.

இலங்கை அரசு இன்று வெளியுலகுக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு காட்டிக் கொண்டிருக்கும் நிலையிலும் முள்ளிவாய்க்காலில் கணவனை இழந்த என்னுடைய சகோதரியும் அவள் குழந்தைகளும் உட்பட பல உறவினர்கள் சிங்கள அரச புலனாய்வுத் துறையால் உடல் உள ரீதியாக இன்றும் துன்புறுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எங்கள் உறவுகளின் உயிருக்கும் பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் அளிக்கும் பட்சத்தில் முள்ளிவாய்க்காலிலும் அதன் பின்னரும் நிகழ்த்தப்பட்ட தற்போதும் நிகழ்த்தப்பட்டுக் கொண்டி ருக்கும் அரச பயங்கரவாதத்தை பல நூறு நேரடிச் சாட்சிகள் மூலமாகவும் ஆவணங்கள் மூலமாகவும் அம்பலப்படுத்தி எமக்கான நியாயத்தைப் பெற காத்துக் கொண்டிருக்கின்றேன்.

*இப்படிக்கு*
*உண்மையுள்ள*

*ஈழமகன்*




ஒரு பேப்பர்
ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ______________________

Address: ______________________

______________________

______________________

Postcode: ______________________

Telephone: ______________________

Email: ______________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு
"Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும்,
G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# ஆனையை மடக்குவானா அல்லது பூனையைப் பிடிப்பானா

**சிவ. பாக்கியராஜா**
*(பொங்கு தமிழில்)*

இலைகள் பழுத்தால் நிலத்தில் விழும். பழம் பழுத்தால் வெளவால்கள் விழும் என்று ஊரில் சொல்வார்கள். இலைகள் பழுத்து நிலத்திலேதான் விழுகின்றன. சனங்கள் நொந்தும் கெட்டும் நிலத்திலேதான் வாழுகிறார்கள்.

ஆனால், அரசியல் வெளவால்கள் இப்போது கிடைத்திருக்கும் (பழம் பழுத்திருக்கும்) சூழலில் பாராளுமன்றம், ஜனாதிபதி மாளிகை, கட்சிகளின் தலைமைப் பீடங்கள், இந்தியத் தூதுவர்களுடன் சந்திப்பு.... என்று ஆலாய்ப் பறந்து விழுந்து கொண்டிருக்கின்றன.

தமிழ்க்கட்சிகளின் அரங்கம், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு. இந்த இரண்டுக்கும் இடையில் என்ன வேறுபாடுகள் உண்டு? இந்தக் கேள்வி பல நாட்களாக பலருடைய தலைக்குள் வலியை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

இந்த இரண்டு தரப்புகளிலும் பல கட்சிகள் இருக்கின்றன. இந்தக் கட்சிகளில் இருப்போரும் பல இயக்கங்களிலும் கட்சிகளிலும் இருந்தவர்கள். இவர்கள் அரசியலில் இருந்த காலத்தில் அல்லது இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட காலத்தில்தான் (கடந்த 30 ஆண்டுகளாக) பெரும் அனர்த்தங்கள் நடந்தன. இந்த அனர்த்தங்கள் என்பது ஏதோ சாதாரணமானதல்ல.

இதுவரை நடந்த அனர்த்தங்கள் - இழப்புகள் எல்லாவற்றுக்கும் இந்தத் தரப்புகள் ஏதோ வகையில் சம்மந்தப்பட்டுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆனால், இந்த அனர்த்தங்களைப் பற்றிய கவலைகளோ இந்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சனங்கள் இன்றும் அவல நிலையில் வாழ்வதைப் பற்றிய அக்கறைகளோ குற்றவுணர்ச்சிகளோ கூட இல்லாமல் 'பழம்' தின்னுகிறார்கள்.

'கேட்பதற்கு ஆள் இல்லை என்றால் தம்பி சண்டியன்தான்' என்கிற மாதிரியாக இவர்கள் அடிக்கிற கூத்துகளும் விடுகிற பம்மாத்துகளும் கொஞ்சமேயில்லை.

அரசியலில் தாங்கள்தான் 'பலே கில்லாடி' என்பதைப்போல விடுகிற அறிக்கைகள், எடுக்கிற தீர்மானங்கள், நடத்துகிற பத்திரிகையாளர் சந்திப்புகள், ஆதரவாளர் மட்டத்திலான அரசியல் விளக்கங்கள் எல்லாம் அதிரடிப் புரட்சிகள் நடக்கும் போலவே ஒரு தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இலங்கை அரசாங்கம் (மகிந்த ராஜபக்ஸ அரசாங்கம்) நிச்சயமாக அரசியல் தீர்வொன்றை வைக்கப் போவதில்லை என்று இவர்களுக்கு நன்றாகவே தெரியும். அப்படித் தெரிந்து கொண்டே இவர்கள் அரசாங்கத்தை அரசியற் தீர்வுக்காக வலியுறுத்துகிறார்கள்.

இதில் இன்னொரு வேடிக்கை இருக்கிறது. உண்மையாக இது வேடிக்கை இல்லை. துயரமான நிலைமை. அதையும் விடக் கொடுமை. அதையும் விட இது சுத்த பம்மாத்து.

எப்படியென்றால், அரசாங்கத்தை அரசியற் தீர்வுக்காக வலியுறுத்துவதற்கு முன்னர் அரசாங்கத்தினால் மிகச் சுலபமாகவே செய்யக் கூடிய வன்னிச் சனங்களுக்கான உதவிகள், போரிலே பாதிக்கப்பட்ட கணவனை இழந்த பெண்களுக்கான ஆதரவுப் பணிகள், அங்கவீனமாகியவர்களுக்கான ஏற்பாடுகள், மற்றும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் முழுமையான புனரமைப்பு, மக்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள், கைவிடப்பட்ட சொத்துகளை மீளப் பெறுதல், தொழில் செய்யும் பிரதேசங்களின் கட்டுப்பாடுகளை நீக்குதல் என்ற விசயங்களை முதற்கட்டமாக அரசாங்கத்தைக் கொண்டு செய்விக்கலாம்.

இவை அரசாங்கத்துக்கும் அதிக கடினமான விசயங்களல்ல. இவர்களுக்கும் கடினமான சங்கதிகளல்ல.

அடுத்த கட்டமாக இவர்கள் நீண்ட காலமாக அரசியற் கைதிகளாக இருப்போரின் விடுதலையைப் பற்றிக் கதைக்கலாம். அப்படியே தடுப்பிலுள்ள போராளிகளின் விரைவான விடுதலைக்காகவும் விடுவிக்கப்பட்ட போராளிகளின் இயல்பு வாழ்க்கைக்கும் உதவ முயற்சிக்கலாம்.

இதுவும் இவர்களுக்குக் கடினமல்ல. அரசாங்கத்துக்கும் இவை பிரச்சினையாக இருக்கப் போவதில்லை.

அப்படியே சனங்களை அவர்களுடைய இயல்பு வாழ்வில் வேரூன்ற வைக்கலாம். இதெல்லாம் முக்கியமான விசயங்கள். இதையெல்லாம் செய்ய வேண்டியது இன்று அவசரப் பணி. சனங்கள் அங்கும் இங்குமாக அலைவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்.

இவை சனங்களின் கண்ணீரையும் துக்கத்தையும் துடைப்பதற்கான முதலுதவிகள். காயங்களுக்குப் போடுகின்ற மருந்துகள்.

ஆனால், இதைப் பற்றியெல்லாம் இவர்கள் கவலைப்படவேயில்லை. வேண்டுமானால் ஒரு அறிக்கை. அல்லது இதைப் பற்றி அரசாங்கத்திற்கு ஒரு கண்டனப் பத்திரம். அல்லது பாராளுமன்றத்தில் ஒரு ஆவேசப் பேச்சு. பாராளுமன்றத்துக்குப் போகாதவர்கள்.... இருந்தாற்போல ஒரு பகிரங்கக் கடிதம் அல்லது அறிக்கை. (இதற்காக திரு. ஆனந்தசங்கரி அவர்கள் கோவிக்கத் தேவையில்லை).

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்றால் மக்களும் அதை நம்பத் தொடங்கி விடுவார்கள். நடக்காத - நடக்கவே நடக்காத ஒரு காரியத்தைப் பற்றிப் பேசியே காலத்தை ஓட்டிவிடலாம் என்பதே இந்தக் கட்சிகளின் நோக்கம்.

இப்படிச் செய்வதன் மூலமாக காலத்தை ஓட்டுவது மட்டுமல்ல தங்கள் பதவிகளையும் வசதிகளையும் பாதுகாத்துக் கொள்ளலாம். அடுத்த தேர்தல்கள் வரப்போகின்றன.

அதற்கும் இருக்கவே இருக்கின்றன 13 ஆவது திருத்தத்திற்குக் கீழ் தீர்வு. அல்லது 13 ஆவது திருத்தத்திற்கு மேலே தீர்வு. அல்லது மத்தியில் கூட்டு மாகாணத்தில் தனித்து. அல்லது மாநில சுயாட்சி. அல்லது சமஷ்டி.... அல்லது தமிழ்த்தேசியம்...

இப்படி ஏதோ ஒரு சரக்கை வைத்து மீண்டும் காலத்தைக் கடத்தும் நடவடிக்கைகள் நடக்கும்....

அதற்கிடையில், கூட்டங்கள்... சந்திப்புகள்.. ஆராய்வுகள்...., கலந்துரையாடல்கள்..... பத்திரிகை அறிக்கைகள்... பேட்டிகள்....

பிறகு பாராளுமன்றம்.... ஜனாதிபதி செயலகம்..... கட்சித் தலைமையகங்களில் சந்திப்புகள்..... குழுத்தெரிவுகள்..... கூட்டங்கள்.... ஆராய்வுகள்.....

போதாக் குறைக்கு இந்தியா - இலங்கை அரசு... என்ற இரண்டு அரசாங்கங்களையும் துணைக்கு அழைத்துக் கொள்வது.

இந்த இரண்டு அரசுகளாலும் தமிழ்பேசும் மக்களும் இலங்கையர்களும் (சிங்களவர்கள் உட்பட) விட்ட கண்ணீரும் சிந்திய இரத்தமும் கொஞ்சமல்ல.

ஆனால் இவர்கள் இந்த இரண்டு அரசாங்கங்களையும் எப்பொழுதும் எதற்கும் துணைக்கு அழைத்துக் கொள்வார்கள்.

இதுக்குக் காரணம் இவர்கள் ஒன்றில் இலங்கை அரசுக்கு வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இல்லையென்றால் இந்திய அரசுக்கு எடுபிடிகளாக இருக்க விரும்புகிறார்கள். இவர்களின் கடந்த காலமும் இப்படித்தான் எடுபிடிக்காலமாகவே இருந்திருக்கிறது.

இதுபோக

தமிழ்ச் சனங்களும் எத்தனையோ பேச்சு வார்த்தைகளைக்கண்டு களைத்துவிட்டார்கள். எத்தனையோ சந்திப்புகளைப் பார்த்து விட்டார்கள். எத்தனையோ சந்திப்புகளையும் குழுக்களையும் ஆராய்வுகளையும் பார்த்து அனுபவப்பட்டு விட்டார்கள்.

போதாதென்றால், அரசியல் உடன்படிக்கைகள் பலவற்றைக்கூட தங்கள் வாழ்விலும் வரலாற்றிலும் அறிந்தவர்கள். செல்வநாயகம் - பண்டாரநாயக்கா, செல்வநாயகம் - டட்லி சேனநாயக்க, பிறகு பெங்களூர்ப் பேச்சுவார்த்தை, இலங்கை இந்திய உடன்படிக்கை, புலிகள் - பிரேமதாஸ பேச்சுவார்த்தை, சந்திரிகாக , புலிகள் பேச்சுகள், 2002 புரிந்துணர்வு உடன்படிக்கை, புலிகள் - முஸ்லிம் கொங்கிரஸ் உடன்படிக்கை....

இதைவிட இன்னும் ஏராளம் உடன்படிக்கைகளும் பேச்சுகளும் வரலாற்றில் தாராளமாக இருக்கின்றன.

இப்போது இதே பாணியில் - மீண்டும் புதிய வேளாண்மைக்காரர்கள் - ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை என்ற மாதிரி களத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

இதைப் பார்த்த ஒருவர் சொல்கிறார், 'கூரை ஏறிக் கோழி பிடிக்க மாட்டாதவர்கள் வானம் ஏறி வைகுண்டம் போகப் போகிறார்களாம்....' என்று.

இதையெல்லாம் பார்த்து யாரும் கோவப்படவோ சிரிக்கவோ கூடாது. தமிழர்களின் தலைவிதி இப்படியா இருக்கிறது என்று கவலைப்படவும் தேவையில்லை.

மகிழ்ச்சியாகப் பொழுதைப் போக்குவதற்கு இந்தக் குழுக்களின் அல்லது அணிகளின் அதுவும் இல்லாவிட்டால் இந்த 'அரசியல் தலைவர்களின்' நாடகங்களைப் பார்த்து ரசிக்கலாம்.

இவர்கள் நகைச்சுவை நடிகர்களைப் போலவே இருக்கிறார்கள். ஆனால், இவர்கள் அடிக்கிற குத்துக்கரணங்களையும் கூத்துகளையும் கண்டு களிக்கும் நிலையிலேயே நாங்கள் இருக்கிறோம் என்று யாராவது கோவத்தோடு கேட்டால் நீங்கள் படு சீரிஸயாக இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

அதாவது உங்கள் நிலைமை சீரியஸாக இருககிறது என்றுதான் பொருள் படும். ஆனால், என்ன செய்வது உங்களைப் போல பலருடைய நிலைமை அல்லது தமிழ் பேசும் சமூகங்களின் நிலைமை படு சீரிஸாகத்தானிருக்கிறது என்று புரிகிறது.

ஆனால், என்ன செய்வது? அதைப் புரிந்து கொள்ளக் கூடிய 'தலை(வர்)கள்' தமிழர்களுக்கு இல்லையே!

வாய்ப்பந்தல் வீரர்கள், வாய்ப் புரட்சியாளர்கள், அறிக்கை மேதாவிகள், கண்டனப் பட்டியற்காரர்கள், நியாயப்படுத்துனர்கள் என்ற வகைப்பாட்டில் தலைவர்கள் உருவாகியிருக்கும் போது எப்படி சீரியஸான நிலைமைகளைப் பற்றிக் கவலைப்பட முடியும்?

உண்மையாக இந்தத் 'தலை(வர்)களை'ப் பற்றி தமிழர்கள் சந்தோசப்படுகிறார்களோ இல்லையோ, சிங்களத் தரப்பு சந்தோசப்படுகிறது.

இவர்கள் தொடர்ந்தும் தமிழர்களின் தலை(வர்)களாக இருந்தால், நிச்சயம் எப்போதும் சிக்ஸரைத் தாம் அடித்துக் கொள்ளலாம் என்று சிங்களத் தரப்பு சந்தோசப்பட்டுக் கொள்கிறது.

'ஆளைப் பார்த்தாலே தெரியுது ஆனையை மடக்குவானா அல்லது பூனையைப் பிடிப்பானா' என்று பகிடியாகச் சொல்லுவார்கள்.

இவர்களைப் பார்த்தாலே இந்த உண்மையை விளங்கிக் கொள்ளலாம். தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தையும் மதிப்பிட்டுக் கொள்ளவும் முடியும். ஆனால், ஒன்று கடந்த காலத்தின் 'பாவ புண்ணியங்களில்' இவர்களுக்கு நிச்சயம் பங்குண்டு.

அதற்கெல்லாம் பிராயச்சித்தம் தேடவில்லை என்றால், பாவ விமோசனம் தேடவில்லை என்றால் வரலாறு நிச்சயம் மன்னிக்காது. வரலாறு என்பது கண்டிப்பான ஒரு கிழவி.

கடைசியாக ஒன்றைச் சொல்லி முடிக்கலாம். அண்மையில் பேஸ்புக் (முகப் புத்தகத்தில்) ஒருவர் இந்த ஈனத்தமிழ் மன்னிக்கவும் ஈழத் தமிழ்த் தலைமைகளைப் பற்றி எழுதியிருந்த குறிப்பை இங்கே இணைத்து விடலாம் என்று யோசிக்கிறேன்.

இப்போது இலங்கையில் தமிழ் பேசும் சமூகத்தினருக்காக அரசியலில் ஈடுபடுகிற ஆட்கள் வயல் விதைத்தால் அல்லது கடலுக்குத் தொழிலுக்குப் போனால் ஏதாவது அரிசியோ மீனோ கிடைக்கலாம்.






# Proposal to scrap Tamil translation of National Anthem is of huge symbolic importance



By Tisaranee Gunasekara

**"The conquering hero who threatens to destroy the liberty of his-homeland belongs to history, not myth".** - *René Girard (Violence and the Sacred)*

The disturbingly inane proposal for a Sinhala-Only National Anthem has suffered (an ephemeral) setback, due to internal dissent. Still, it may return, as the proposal for presidential term-limit removal did (initially withdrawn due to internal opposition and subsequently reintroduced via the 18th Amendment). A resurrection is likely because the idea of a Sinhala-Only National Anthem is integral to the Ruling Family's nation-building project aimed at moulding a Sinhala- supremacist and a Rajapaksa-supremacist Sri Lanka.

The proposal to scrap the Tamil version of the national anthem is of huge symbolic importance; its historic equivalent would be the 1958 policy of using Sinhala letter 'Sri' in vehicle licence-plates. A Sinhala-Only National Anthem would be a divider rather than a unifier; it will widen the psychological gulf between the majority and the minorities and drive home the impression that minorities are not-so-welcome interlopers in a Sinhala-country. Consequently it will be a natural landmark in our journey to the past, to the time before India compelled us (via the Accord) to replace the post-1956 Sinhala supremacist vision of Sri Lanka with a more inclusivist and pluralist model.

Sri Lanka is not the only country with a bi-lingual national anthem. Canadian and Cameroonian national anthems are sung in English and French (O' Canada has an Inuktiut version too); Swiss national anthem is in German (the original), Italian, French and Romansh; New Zeeland's national anthem has English and Maori lyrics; post-Apartheid South Africa has a multi-lingual national anthem in Xhosa, Zulu, Sesotho, Afrikaans and English. Perhaps the President got his anti-factual information from Minister Wimal Weerawansa, who backed the 'Sinhala-Only' proposal vigorously, stating, as a clincher, that Indian national anthem is in Hindi! (This latest Weerawansa faux-pas is on par with his previous gems, such as Guy de Maupassant wrote The Old Man and the Sea and Angulimala hurled a boulder at Gautama Buddha!) That President Rajapaksa and Minister Weerawansa were unaware of India's national anthem being written by Rabindranath Tagore in Sanskritised Bengali is hardly outstanding. What is remarkable is that in a 60+ cabinet there wasn't a single minister with both the knowledge and the backbone to set them right. That lacuna says much about what we have become in this Era of Our High King.

A review of George W. Bush's memoir 'Decision Points', claims that "by Bush's own account, revenge is among his chief motives in sanctioning torture" (New Yorker – 29.11.2010). Was the proposal for a Sinhala-Only National Anthem a knee-jerk reaction by the President to the Oxford Debacle, a painful humiliation heaped on Lankan Tamils as a collective punishment for the anti-Rajapaksa protests by a segment of the Diaspora? Perhaps.

On the other hand, this proposal is no coup de foudre; it is very much in consonance with previous Rajapaksa measures such as reversion to a unitary-state model, abandonment of the homeland concept, unilateral-judicial de-merger of the North-East and reduction of the ethnic issue into a terrorist/Tiger problem (plus resumption of internal colonisations, mushrooming of Buddha statues in areas with no Buddhist-civilians and the arrest and 'blasphemy' trial of Islamic-convert Sarah Malani Perera).

These measures are reverting Sri Lanka into a Sinhala-First country in which the minorities are not citizens with equal and inalienable rights but guests living on sufferance (how they are treated depends on how the majority perceives their conduct; Tamils 'misbehaved' in London; ergo, the punishment).

The Sinhala-Only National Anthem proposal reeks of vindictiveness and ill-will. Can such measures which humiliate ethno-linguistic minorities promote national reconciliation? Surely there is a greater chance of inculcating a sense of Lankan patriotism in Tamil/Muslim children and youth if they can sing the national anthem in their own language rather than parrot it in a language they barely understand?

Incidentally, a Sinhala-Only National Anthem will neither hurt nor displease Tiger remnants and sympathisers; in fact they will use such measures as vindication of their past deeds and a green light for their future plans. It will be those Tamils who still believe in a Lankan future who will be dismayed, grieved and alienated by such mean-spirited and petty-minded measures.

The Sinhala-Only National Anthem idea fits in with the Rajapaksa strategy of peace-building not by winning-over the minorities but via repressive laws, militarisation and internal colonisation. The Defence Secretary recently stated that the "re-positioning of security forces in a post-war era was a costly business as new bases and cantonments were needed to accommodate troops in the Northern and Eastern Provinces. 'This is a very high priority. Unlike during the war, troops cannot be given make-shift shelter,' he said" (The Island – 8.12.2010).

Lankan Armed Forces would correctly regard the North as their country but they are unlikely to regard its ethnically and religiously different populace as their own people, especially with historical and recent memories redolent of suspicion and enmity. An army in a territory it considers its own, controlling a population it considers alien (and inimical) is a recipe for abuse and repression. For instance, in his latest letter to the President TULF leader V Anandasangaree (whose anti-Tiger credentials cannot be in doubt) states that "20 business persons from Jaffna had been summoned by the Army Intelligence to know about the contribution they made to the LTTE when they had certain areas under their control. I understand that this is going on for some time. At this rate there will be no end to the harassment the people will be subjected to" In the name of ensuring security the regime is busily creating a new vicious circle of hatred and violence.

The dominant Manichean mindset condemns as a terrorist/traitor anyone who is not totally subservient to the Rajapaksa project. This is the basis on which the regime interacts not just with the Tamil/Muslim North-East but also with the Sinhala South and the world.

Wherever there is difference of opinion, democratic dissent or peaceful opposition, the rulers see a mortal enemy 'who must be brought down before he brings us down'. The recent statement by President Rajapaska at the 11th National Convention of Samurdhi Officials about 'trade union leaders on foreign payroll' indicates that the winds of repression are wafting in a Southerly direction. Ere long, the regime may brand trade-unionists and workers, fishermen, doctors, nurses and teachers, students and public servants as 'traitors' and suppress their dissent with brutal efficacy.

Juxtapose the Presidential remark with the statement by a Presidential sibling that "Emergency Regulations couldn't be lifted due to clandestine activities of the TNA and JVP. Defence Secretary Rajapaksa alleged that the TNA and JVP had launched a campaign to destabilise Jaffna Peninsula…. the war veteran said that armed forces had paid a huge price to restore peace in the country, therefore politicians couldn't be allowed to jeopardise national security according to their whims and fancies" (The Island – 29.11.2010).

The composite picture is of an intolerant land in which democratic dissent is outlawed; and of a regime determined to utilise anything – from Sinhala extremism and xenophobia to repressive laws and extra-judicial deeds – and sacrifice everything to ensure its own longevity.

மிகக் குறைந்த செலவில்
உங்களுக்கு சேவை செய்யக்
காத்திருக்கிறோம்
அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த
நத்தார் வாழ்த்துக்கள்
▶ FREE COLLECTION WITHIN THE M25 AREA
▶ PAY ALL COLOMBO CHARGES CUSTOMS CLEARANCE AND DELIVERY IN THE UK. EXCEPT DUTIES AND TAXES
▶ ALL COLOMBO DELIVERIES WILL BE DONE WITHIN 24 HOURS OF CLEARANCE
▶ ALL CARGO OUTSIDE COLOMBO WILL BE DELIVERED WITHIN 48 HOURS OF CLEARANCE (EXCEPT JAFFNA)
PLEASE NOTE THAT FOR CUSTOMS CLEARANCE PURPOSE YOU STILL NEED TO GO TO THE TRICO UPB WAREHOUSE IN COLOMBO, GALLE AND KURUNEGALA, BUT NOTHING TO PAY EXCEPT TAXES!
CHENNAI 2XT/CHESTS ONLY £90.00
COCHIN 2XT/CHESTS ONLY £105.00
BANGALORE 2XT/CHESTS ONLY £110.00
MUMBAI 2XT/CHESTS ONLY £90.00
ONLY £10.0 T/CHEST TO SRI LANK
CALL US NOW : 020 8888 8787
TRICO T: 020 8888 8787 F: 020 8889 5
Email: info@tricofreight.co.uk
Web: www.tricofreight.co.uk
Trico Freight UK Ltd
555 Whitehart Lane, (Safehouse Storage Units)
London. N17 7RP

# "Imelda, Stop Dilly-Dally Dancing", *writes R. Jayadevan*



*Ms. Imelda Sugumar, the newly appointed government agent of Jaffna district, has turned out to be a propaganda agent of Mahinda government. In her recent interview to the Sri Lankan media, she has gone out of the remits of a civil servant and blamed the Tamil Diaspora for agitating against Rajapakse. We reproduce extracts of an open letter written by R. Jayadevan in Sri Lanka Guardian web site.*

"Your comments condemning the demonstrations by the Diaspora Tamils against the President Mahinda Rajapakse in London resulting in the cancellation of his speech at the prestigious Oxford Union and the abrupt ending of his visit is politically motivated and clearly reflects the decadent paramilitary mindset of the Minister, Douglas Devananda.

I consider your comments are part of your contractual or employment safeguarding obligation to satisfy your master's agenda to be in his payroll. I have read similar comments from the Tamils associated with the government and the calculated government sponsored protests marches in the Tamil areas too are part of the cynical campaign orchestrated by the government against the Tamil Diaspora.

The recent Wikileaks revelations rightly and adequately reflect the agenda of these unscrupulous marauders involved with the disparaging government who are thriving on the human sufferings and the ambitious family rule of the President. The government will use Douglas Devanandas and Karunas to degenerate our society into a prostituting class and the Tamil Diaspora is a valuable lot to stand up for the savaged minority's interests in Sri Lanka.

In your accusations, you castigated the Diaspora Tamils for disturbing the peace for their people in Sri Lanka. How did you measure the feelings of the Jaffna people to negatively slander the demonstrations in London as disturbing the peace of mind of your administration in Jaffna? Your comments are one and the same of the Minister and the ruthless paramilitary leader Douglas Devananda, who have proved to be the authoritative shadow government agent controlling the activities of the Jaffna Kachcheri, thus undermining your own mandate.

The Tamils living in the liberal democracies are exercising their individual liberties and rights such as the freedom of expression and assembly, freedom of religion, equality before the law, due process under rule of law etc accorded to them unlike their brethrens back home who have been subjugated by the military and the paramilitary forces. The very same freedom is enjoyed by the Sri Lankan Muslim and Sinhalese Diaspora brotherhood.

Some Diaspora Tamils only know to express their feelings by the show of the flags that is anathema to your masters. Beyond the wrongs or justifications of holding the flags, you must understand the psyche of these people who are the product of the age old marginalisation policy of Tamils in Sri Lanka and are the reflection of the three decades old war - a period in which they were ravaged by the brutalities inflicted on the Tamil society.

Instead of responding to your each and every cynical comments against the Diaspora Tamils, I rather ask you to take a mature approach to deal with the root causes of the problems that are making the Tamils to scream in the streets of the western world.

As a Government Agent, will you be able to tell us what the official policy of the government to find a peaceful and durable resolution to conflict in Sri Lanka? Presiding over the rule with the army and the nefarious paramilitary group in the north, you cannot sit in moral high grounds to pontificate to the Diaspora Tamils to shut up and put up with your narrow minded agenda to extend the game of the vested interests.

If you are not mandated to utter anything on the political line, will you let us know the siphoning of funds of the Jaffna Kachcheri by the EPDP paramilitary group and special treatment given to award contacts to questionable contractors like the Euroville Engineers and Constructors (PVT) Ltd are no longer practiced?

Will you tell us how much is collected by taxing building sand from the designated Kudathanai, Mankumpan and other places by the said paramilitary group?

Further, will you deny Minister Douglas Devananda is illegally collecting funds from those having dealings with the Government Agent's office for his private Late Maheswari Velautham Trust fund?

There is other maladministration in the Jaffna Kachcheri. Though we are living many thousands of miles away from our motherland, we are aware of them because of the bond we have with our people.

You must realise that the Diaspora Tamils are part and parcel of the body politics of Sri Lanka and will not be subdued for narrow minded agenda of individuals like you, who have learnt the skills to play the perfect fiddle to the tune of your master. Yes Sir! Yes Sir!! I will do it Sir!!! is your pathetic fiddle, so long as you are in payroll of your master and the dictates of the paramilitary EPDP.

We too have contacts with our people in Sri Lanka. What we hear from them and from those who escaped the ravages of the war to the Western World is painful experience and we will speak about them loudly and campaign for them fearlessly.

Therefore, I finally appeal to you to stop dilly-dally dancing and make absurd and nonsensical comments any more about the Diaspora Tamils. I am sure you do not wish to take a war path with Tamil Diaspora that is fully experienced of the might of the pen and freedom of speech to deal with the critical issues of your controversial and conditioned government representative job in Jaffna."


TrainingConnect

Tel: 0208 538 0248 WWW.TRAININGCONNECT.CO.UK

Centres across London - Hounslow, Wembley, Kenton, Whitechapel, Hackney, Holloway. Aldershot, Birmingham, Bedford, Leicester, Luton, Newcastle, Slough, Sheffield, Wolverhampton

Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow - TW4 6JQ

Our 100% Commitment "You Pay Only Once & We Train You until You Pass – No Retake Fee"

Have successfully trained over 20,000 students | Courses from £200 | Certificates within 20 days

We are an 'Accredited College' as per UKBA new rule.

**ESOL with Citizenship**

For All Those Applying for:

✓ Extension of Stay Visa

✓ Indefinite Leave to Remain (ILR)

✓ British Passport / Naturalisation

**OR**

✓ Those failed Life in the UK Test

✓ Below Entry Level 3 of English

**International ESOL Diploma**

For All Those Applying for:

✓ Tier 1 (Highly Skilled Migrants)

✓ Tier 2 (Skilled Migrants)

**Applicants Also Include**

* Religious Ministers *Engineers Chefs *Investors*Sports Persons *Entrepreneurs




Online ESOL Courses Available

Special Offer!!!

Your nearest centre in London:

Hounslow: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ

Kenton: 208 Kenton Road, Harrow HA3 8BX

Wembley: 116 Ealing Road, Wembley HA0 4TH

Holloway Road: 266 – 268 Holloway Rd, N7 6NE

Whitechapel: 4th Floor, 46-92 Whitechapel Rd, London, E1 1JX

Citizenship Courses from only £200

RAM

SALES LETTINGS MANAGEMENT MORTGAGES



"We are looking for all sorts of properties for our awaiting professional tenants"

LANDLORDS

"Are you looking for a professional agent who would be able to assist you with selling or renting your property?"



"We are currently looking for a properties in East London"

Call Us On: 020 8550 8788

E-Mail: contact@ramestateagent.com

Log on: www.ramestateagent.com

713 Cranbrook Road, Gants Hill, Ilford, Essex, IG2 6RJ

# KIDS பேப்பர்



## The Great Pyramids

The Great Pyramids were built between 2650-2500. It is said that they were a tomb of Khufu. They are located in Giza, Egypt. The largest pyramid is 756 feet long on each side and 450 feet high. It is made up of 2,300,000 blocks, that each weigh two and a half tons. It took 20 years for 100,000 slaves to build it. It required 112 men to lift each separate block.

Men that were great thieves wanted to get the hidden treasure that was hidden in the tomb. They found a small square room called the Queen's Chamber. It is a passageway. The Grand Gallery is another passageway to the King's Chamber. It is 34 feet long, 17 feet wide, and 19 feet tall. After not finding the treasure, the men got angry and tried to destroy the tomb but stopped after taking out 30 feet of stone.

No one knows what happened to King Khufu and his treasure.

Some people think that it was just an observatory, but we can't be quite sure because when people stated that, it was already over 2,000 years old. An astronomer observed a descending passageway above the Grand Gallery that could have been used for mapping the sky.

Now, except for parts of the Mausoleum and the Temple of Artemis, the Great Pyramids are the only things left standing of the 7 Ancient Wonders.

## Ant Jokes

What do you call an ant from overseas?
**Impartant!**

What medicine would you give an ill ant?
**Antibiotics!**

What is smaller than an ant's dinner?
**An ant's mouth!**

How many ants are needed to fill an apartment?
**Tenants**

What do you call an ant who likes to be alone?
**Independant**

What is the biggest ant in the world?
**Elephant**

What ant is even bigger than that?
**Giant**

## Colouring




Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.


The winner will be published in the next issue.

***Last issue winner is Kulaly Tharmaratnam (6 years)***








## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| D | E | L | J | E | U | A | R | S | M |
| P | R | D | V | F | A | M | M | I | T |
| A | N | T | G | E | Q | Y | Z | A | I |
| A | U | H | K | U | L | A | V | I | W |
| N | S | A | D | D | I | S | O | H | I |
| A | M | C | B | N | J | E | U | O | P |
| I | U | H | C | X | T | U | K | A | R |
| S | D | I | O | P | C | X | T | U | K |
| L | D | M | R | D | V | F | T | N | G |
| U | I | F | U | N | B | R | A | I | N |

**Hidden Words:**

**Subject: Tamil Cookery.**

SADDI, MUDDI, PAANAI, AMMI, KULAVI, THACHI

*Submitted by:*

***By: Anpuchelvi Ramakrishnan (Age 7) (Harrow)***

# Lycamobile


**Call the world for less**

**FREE Internet** up to 10mb per day

# India

## + Mobile

# 1p /min



# Sri Lanka + Mobile 9p /min

## Anytime, everyday

*Happy new year*

| Top-up | Lycamobile PLUS to Lycamobile PLUS* | |
|---|---|---|
| | FREE Minutes | FREE Texts |
| £30 | 2000 | 2000 |
| £20 | 1000 | 1000 |
| £10 | 500 | 500 |
| £5 | 200 | 200 |

## UK Landline 1p /min

**For your FREE Lycamobile PLUS SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322**

Buy and top up online or in over 115,000 stores

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

*2000 free minutes and 2000 free texts Lycamobile PLUS to Lycamobile PLUS when you top-up for £30. 1000 free minutes and 1000 free texts from Lycamobile PLUS to Lycamobile PLUS when you top-up for £20. 500 free minutes and 500 free texts from Lycamobile PLUS to Lycamobile PLUS when you top-up for £10. 200 free minutes and 200 free texts from Lycamobile PLUS to Lycamobile PLUS when you top-up for £5. The free minutes and texts are only valid during the promotional period and only for the first 2 top-ups in any calendar month. The free minutes are valid for 30 days from top-up. Once the free minutes and free texts have been used or if all the free minutes and free texts have expired, Lycamobile PLUS to Lycamobile PLUS calls will be charged at 10 pence per min and Lycamobile PLUS to Lycamobile PLUS texts will be charged at 9 pence per text. The offer may be withdrawn at any time in full or in part at the absolute discretion of Lycamobile UK Ltd. unless the offer is withdrawn. It is valid from 01.12.2010 until 31.01.2011. Top-up and calls to landlines in India + mobile are 1 pence per minute every day of the week, any time. Offer is valid from the 1st November to the 31st January 2011. No connection fees apply to national, international excluding Lycamobile World promotion texts and mobile calls to different operators.

**Lyca mobile**

Call the world for less

# யோகா செய்யும் நாய்கள்!



உதெல்லாம் நக்கத் தெரியாத நாயள், எங்கட நாயள் மகிந்தவிடமே போய் நக்குங்கள்...

# நத்தார் எனும் இனிய நாள் நெருங்கி வருகிறது

பாகம் 85

செத்தார் பலபேர்,
சீரழிந்து வன்னியிலே
உத்தரிப்போர் இன்று ஒரு
தொகைப் பேர் –
ஆனாலும்

நத்தார் எனும் இனிய
நாள் நெருங்கி வருகிறது.

பாவிகளை ரட்சிக்கப்
பாரில் அவதரித்து

ஆவிதுறந்து அதன் பிறகு புத்துயிர்த்து
வருத்தப் படுபவரை வாவென்றழைத்தவர்தம்
பாரத்தைத் தாங்கப் பரமபிதா தந்த

ஏசு சுதன் விண்ணின்றிறங்கி ஒரு
மானிடனாய்
ஓர் தாய் வயிற்றில் உருவாகி மண்வந்த
நத்தார் எனும்நாள் நமை நோக்கி வருகிறது.

நீதிபெறா வாழ்வு, நிலமிழந்த சோர்வு,
ஆதரிப்பாரில்லா அவலம் எனப் பலவாய்
ஏதிலிகளான எம்மினத்தின் வேதனைகள்
அத்தனையும் உள்ளத்தடக்கி அதன்
மேலாய்

நத்தார் எனும் இந்த நாளை வரவேற்போம்.

இந்த அலசுவாரம் பத்தியை விரும்பி வாசிப்பவர்களுக்கும் மற்றும் அனைத்து ஒரு பேப்பர் வாசகர்களுக்கும் முதற்கண் எனது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

நமக்கெல்லாம் கட்டாயம் தேவையான சமுதாயப் பிரக்ஞையோடு எமது இனத்தின் மிகவும் பிற்போக்குத்தனமான, இன்றைய உலகமயமாக்கற் காலகட்டத்திற்குக் கொஞ்சமும் ஒருப்படாத முறைமைகளைக் கவலையோடு நோக்க வேண்டியிருக்கிறது.

சாதி! அது எம்மைப் பீடித்த நாட்பட்ட வியாதி. சொஸ்தப்படுத்த முடியாததாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

சமீபத்தில் நண்பர் ஒருவர் தனது உறவுக்காரப் பிள்ளைக்கு மாப்பிள்ளை தேடிக் கொண்டிருந்தார். என்னிடமும் யாரையாவது தெரிந்திருந்தால் கூறுமாறு வேண்டினார். ஐயையோ நான் ஒரு கலியாண புரோக்கரல்ல தவறாக எண்ணிவிடாதீர்கள். ஏதோ என்னையும் பலருக்குத் தெரிந்திருக்கும் என்ற எண்ணம் தான் நண்பரை அப்படிக் கேட்க வைத்தது. நானோ மட்டைக்கிளப்பான் எனக்கு யாழ்ப்பாணத்தில் எல்லோருமே நண்பர்கள்தான். இந்தச் சிக்கலான விடயத்தில் தலையை நுழைக்குமளவுக்கு அறிவு போதாததால் சும்மா தலையை ஆட்டிவிட்டு பேசாமலிருந்து விட்டேன். நண்பரோ விடாக்கண்டராக இருந்தார். அந்தப் பிள்ளையை வேறு எனக்கு நன்கு தெரிந்திருந்தது. சரி கொஞ்சம் முயற்சி செய்துதான் பார்ப்போமேயென்று களத்தில் இறங்கினேன். எனக்கு முதலில் தென்பட்டகளம் கலியாண வெப்சைட்தான். வெப்சைட்டின் உள்ளே போனபிறகுதான் நிலைமையின் யதார்த்தம் தெரிந்தது. பொருத்தமான ஜோடியைத் தேடுபவர்களின் ஜாதிகளையெல்லாம் விரிவாகப் போட்டிருந்தார்கள். எவ்வளவோ தகுதியான ஆண்பெண்களெல்லாம் தங்கள் ஜாதிகளுக்குள் ஜோடிகளைத் தேடிக் கொண்டிருப்பதைப் பார்த்தபோது மிகவும் கவலையாக இருந்தது. என்ன செய்வது எமது இனத்தைக் காலங்காலமாகப் பிடித்து ஆட்டும் வியாதி இந்தச் சாதி. அது இந்த மிலேனியத்திலும் எம்மை விட்டு நீங்குவதாயில்லை.

காலாகாலத்தில் ஒரு கலியாணத்தைச் செய்துகொண்டு குடியும் குடித்தனமுமாக வாழவேண்டிய எத்தனையோ இளம் வயதுப் பிள்ளைகள சாதியென்ற ஒரே காரணத்துக்காக தங்களுக்கேற்ற தகுதியான வரன்கள் எத்தனையோ பேர் இருந்தும் திருமணம் செய்து கொள்ள முடியாமல் தங்கள் வாழ்வைப் பாழாக்கிவிட்டு காலம் முழுதும் கன்னிகளாகவும் காளையர்களாகவும் இருந்து விடுகிறார்கள்.

போதிய தொடர்புச் சாதனங்களில்லாத காலகட்டமொன்றிருந்தது. அக்காலத்தில் மக்களுக்குத் தங்கள் ஊரையும் சுற்றசொந்தங்களையும் விட்டால் வேறு இடங்களுடன் தொடர்பில்லை அதனால் இல்லற வாழ்க்கை கிடைத்தவர்கள் வாழ கிடைக்காதவர்கள் இருந்து விட்டுப் போனார்கள். ஆனால் இன்றைய தொடர்புச்சாதனங்களின் அபரிதமான வளர்ச்சியைக் கூடச் சரிவரப் பயன்படுத்த முடியாமல் எமது பாரம்பரியக் கட்டுக்கோப்புகள் தடை செய்கின்றனவே.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

எனக்குத் தெரிந்த இளைஞன், படித்தவன் பட்டம் பெற்றவன், நல்ல உத்தியோகம் பார்க்கிறான், எல்லாவற்றிற்கும் மேலாய் நல்ல பண்பாளன் அதை விடவும் மேலாய் நல்ல ஆஜானுபாகு, கவர்ச்சிகரமான தோற்றம் கொண்டவன். இதை விட ஓர் ஆண்மகனுக்கு என்ன வேண்டும்? விஸா வேண்டும். அதுகூட அவனிடமிருந்தது. அப்ப பிறகென்ன? அவனிடமே கேட்டேன். ஏன் இன்னும் நீ கல்யாணஞ் செய்யவில்லையென்று. அவன் சொன்னான், தனது சாதிக்குள் பொருத்தமான ஆள் கிடைக்கவில்லையாம். என்னால் அவனைக் கண்டிக்கவோ விமர்சிக்கவோ முடியவில்லை. காரணம் அவன் தாழ்த்தப்பட்டவன். சாதியைத் தூக்கியெறிந்துவிட்டு அவன் வந்தாலும் அவனை வரவேற்க யாரிருக்கிறார்கள்?

ஆனால் யதார்த்தத்தில் என்ன நடக்கிறது? ஒரு மாப்பிள்ளை வீணாய்ப் போகிறான். ஒரு பெண் நல்லதொரு இல்வாழ்க்கையைப் பெறக் கூடிய சந்தர்ப்பம் இல்லாமற் போகிறது. நமது சமூகம் இதனால் ஒரு நேர்த்தியான குடும்பமென்னும் தனது அடிப்படை அலகொன்றை இழக்கிறது. முடிவில் அது இனத்தினது அபிவிருத்தியையே பாதிப்படையச் செய்கிறது. சாதியால் மொத்த இனமும் அடையும் அவலங்களில் ஒரு முக்கிய பகுதியாக இது இருக்கிறது. பெரிதாக எமது பண்பாட்டு விழுமியங்களைப் பற்றிப் பீற்றிக் கொள்ளும் நாம் இந்த மிலேனியத்தின் முதலாவது தசாப்தம் முடிவடைந்து அடுத்த தசாப்தத்தை நோக்கிக் காலடி வைக்கும் இந்தக் காலகட்டத்திலாவது கருத்தற்ற சாதி மதபேதங்களை ஓரளவுக்காவது விட்டு விடமாட்டோமா? என்று அங்கலாய்க்க வேண்டியிருக்கிறது.

சாதிக்கு அடுத்தபடியாக இளைஞர்களின் வாழ்க்கையோடு சாத்திரமும் விளையாடுகிறது. சோதிடம், நியுமரோலஜி எனப்படுகின்ற அதிஷ்ட எண் சாத்திரம், கைரேகை முதற்கொண்டு கடற்கரைகளில் பொறுக்கி உருட்டும் சோகிச் சாத்திரம், குருவிச் சாத்திரம் வரை எல்லாமே மனிதரின் தலைவிதியையும் வாழ்க்கைத் துணைகளுக்கான பொருத்தங்களையும் எடுத்தியம்புவதில் முன்னிற்கின்றன.

கூரையில் இருந்து நற் குறியினைச்
சொல்லிக்
கூழினுள் விழுந்து தன் உயிர்விடும் பல்லி

இப்படித்தான் இன்றைய சாத்திரிமார்களின் நிலையும் இருக்கிறது. நான் சில மாதங்களின் முன் இந்தியா போனபோது நண்பனொருவன் தன் பிள்ளைகளின் இரண்டு சாதகங்களையும் பார்த்து வருமாறு என்னை வேண்டினான். கடனேயென்று நண்பனுக்காக ஓர் சாத்திரியைப் போய்ப் பார்க்க வேண்டியேற்பட்டது. குறிப்பில் பிறந்த இடம் லண்டனென்று இருப்பதைக் கண்டவுடன் சாத்திரி பணத்தை இருமடங்காக்கிவிட்டான். ஏனையவர்களிடம் பின்னர் விசாரித்தபோது அவன் அனியாயமாய்க் காசுபறித்தது தெரியவந்தது. பெரிதாகத் தெய்வங்களின் படங்களை மாட்டிக்கொண்டு நெற்றியில் திருநீறு சந்தனம் குங்குமம் எல்லாம் இட்டபடி ஆசார சீலர்களைப்போல இருக்கும் இத்தகையோர் படுபோக்கிரிகளாக இருக்கிறார்கள். சாத்திரம் சொல்கிறோமென்று படு பொய்களைச் சொல்லிக்கொண்டு, கிரகதோசத்திற்கு நிவர்த்தி செய்யச் சொல்லி அதிலும் பணம் பறிக்கிறார்கள். பாவம் வயிற்றுப் பிழைப்பு என்று மன்னிக்க முடியவில்லை.

வருகின்ற இனிய நத்தாரோடு பிறக்க விருக்கும் புத்தாண்டு தமிழர் வாழ்வில் புத்துணர்ச்சியையும் புதுவாழ்வையும் பிறப்பிக்க இறைவனை வேண்டுவோம்.


அனைவருக்கும் எங்கள் நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்!

30% DISCOUNT



Model 09 Wall Unit
Overall Size : 18"L x 10"W x 30"H



Model 09 Wall Unit + Door
Overall Size : 18"L x 10"W x 33"H



Model 015m + Door
Overall Size : 42"L x 24"W x 79"H



Model 3344 m
Overall Size : 48"L x 24"W x 79"H

DIVINE HOME

Akilan Enterprises
274.High Street North, Manor Park,
London, E12 6SA Tel: 0208 548 0033

CHRISTMAS & NEW YEAR OFFER
Free delivery and Free installation inside London

# கலாநிகேதம் கலை விழா



















கலாநிகேதம் கவின் கலைக் கல்லூரியின் கலை விழா டிசெம்பர் 11ஆம் திகதி குறொய்டன் லான்பிராங்க் பாடசாலை மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கலாநிகேதம் கவின் கலைக் கல்லூரியின் மாணவ மாணவியரின் வாய்ப்பாட்டு, வயலின், நடன நிகழ்ச்சிகள் அங்கு திரண்டிருந்த மக்களை மகிழ்வித்தன. கலாநிகேதம் கவின் கலைக் கல்லூரியின் தலைமை ஆசிரியை திருமதி விநோதினி பரதன் அவர்களின் நெறிப்படுத்தலுடனும் முதன்மை மாணவிகளான நாட்டிய கலாஜோதி சர்ப்பதனா நாகேஷ்வரன், நாட்டிய கலாஜோதி பார்க்கவி பரதன் ஆகியோரின் உதவியுடனும் நிகழ்ச்சிகள் சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

இசைக் கலாஜோதி வெரோனிகா பிரியாலினி சொலமன், இசைக் கலாஜோதி கபித்தா இரவீந்திரன் ஆகிய மாணவிகள் பக்க வாத்தியம் வாசித்தனர். இவர்களுடன் பிரபல மிருதங்க வித்துவான் திரு ஸ்ரீநிவாசன் அவர்களின் மிருதங்கமும், செல்வன் பிரவீன் அவர்களின் புல்லாங்குழலும் நிகழ்ச்சிகளுக்கு மெருகு சேர்த்தன.

மாணவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி மகாலஷ்மி லிங்கநாதபிள்ளை அவர்களும், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி இராமலிங்கம் அவர்களும் வழங்கினர். நிகழ்ச்சிகளை பிரபல அறிவிப்பாளர் திரு விக்னராஜா அவர்கள் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

# கிழட்டுப் பயல் கருநாய் நிதி!

கிழட்டுப் பயலே கருநாய்நிதி!
இன்னும் உன் பதவி ஆசை
தீரவில்லையா? - பொட்டியில்
போகும் வயதில் உனக்கு நாற்காலி
ஆசை ஏன்?

என்ன சாதித்தாய் நீ? - எம் இனம்
படுகொலை செய்யப்படுவதை
கைக்கட்டி வாய்பொத்தி
இரசித்தவன் தானே !
உன்னை எவனடா தமிழனத்
தலைவன் என்று சொன்னது?

போராடு இல்லையே செத்துமடி
நாற்காலிக்காக மேடை போட்டு
கூவும் நீ எம்மினம் அழிக்கப்படும்
போது அறிக்கை விட்டு படம்
காட்டினாயா?

செம்மொழி மாநாடு
கொண்டாடினால் சரித்திரம்
உன்னைப் புகழும் என்று கனவு
கண்டாயோ ? - இனத்தை அழித்த
பழியும் பாவமும் உன்னை ஏழேழு
ஜென்மமும் தொடர்ந்து வருமடா!

தமிழ் அறிஞன் என்று உன்னை
மதித்திருந்தேன் பின்புதான்
அறிந்தேன் நீ கொலைஞன்
என்பதை! நீயும் உன் பரம்பரையும்
ஆள்வதற்கு எம்மினம் பலிக்காடா?

ராஜபக்சே நரிக்கு சிவப்புக்
கம்பள வரவேற்பு எம் தலைவன்
சீமானுக்கு சிறைக்கம்பிகளா?
கேட்பதற்கு ஆளில்லை என்று
ஆடித் திரிகிறாயோ?
சாகும் வயதிலும் நன்றாய்
நடிக்கிறாய் நாடகம்

உனது முதலைக் கண்ணீரை
நம்புவதற்கு நாங்கள் ஒன்றும்
முட்டாள்கள் அல்ல
வயதுக்கு ஏற்ற நடத்தை உன்னிடம்
இல்லை தலைவன் என்பவனின்
தகுதி அறவே இல்லை!

உன் குடும்ப அரசியலும் குப்பைத்
தொட்டி கட்சியும் தந்திரக்காரி
சோனியாவின் குச்சுப்புடி
ஆட்டத்திற்கு தாளம் போட்டு
மேளம் கொட்டுவதை- நாங்கள்
அமைதியாய் இரசிப்போம் என்று
நினைத்தாயோ?
நீ உண்மையில் மனிதன்தானா?
மலைபோல் உன்னைத்தானே
நம்பியிருந்தார்கள்
கத்தினார்கள் கதறினார்கள்- எம்
சகோதரிகள் கற்பிழந்தார்கள்!

நீயோ பெட்டையின் பாவாடையில்
பொட்டைப் போல் ஒளிந்துக்
கொண்டாய் பின்பு அனுதாப
அறிக்கை விட்டு படம் காட்டினாய்!

உனது அரசியல் இலாபத்திற்காக
சொந்த இனத்தையே பலி
கொடுத்தாய் உனக்கெல்லாம்
எதற்கடா முதல்வர் பதவி ?
எமது தலைவன் பிரபாகரனின்
மூ*#-# நீ குடி!

இன்னமும் அடங்கவில்லை எமது
ஆத்திரம்! கண்டாயா சிங்களவனின்
போர்க்குற்றங்களை? - பார்!
உன் கறுப்புக் கண்ணாடியைத்
துடைத்துவிட்டு தெளிவாகப் பார்
பார்த்து சந்தோஷப்படு!

சந்தோஷத்தில் மதிமயங்கிவிடாதே
ஜெயாவோடு மேடைச் சண்டை
போடவேண்டுமே?
தூற்றுவதற்கு வார்த்தைகள் தேட
நேரம் தேவைப்படும் உனது
குடும்ப அரசியலுக்கு அதிக நேரம்
தேவை!

கிழட்டுநாயே எப்போது சாவாய் ?
உன் பெயரைக் கேட்டாலே
காறித் துப்ப வேண்டும் போல்
இருக்கிறது! நீ இருப்பதை விட
இறப்பதே மேல்!

உனக்கு மான ரோஷம்
கிடையாதா? எவ்வளவு கேட்டாலும்
உன் பின் பக்கத்தை
நாற்காலியோடு
ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறாய்
எந்த நேரத்தில் பிறந்தாயடா நீ?

'தலைவன்' என்ற பதவிக்கும்
'தமிழன்' என்ற பெருமைக்கும்
இழுக்கு சேர்க்கும் நீ பிறக்கவே
கூடாதா ஓர் ஈனப் பிறவி!!

-து.பவனேஸ்வரி.
(கோலாலம்பூர் - மலேசியா)



அனைவருக்கும் நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!!

- ✓ Accountancy & Auditing
- ✓ Business Start up Advice
- ✓ Business Plans & Cash Flow Forecasts
- ✓ Personal tax Affairs & Self Assesment
- ✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- ✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
- ✓ Company Formation
- ✓ Attending VAT & PAYE visits
- ✓ Tax Investigations
- ✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

## பொலிவூட் "மடம் ருசாட்டில்"



பிரித்தானியாவின் புகழ்பெற்ற 'மடம் ருசோட்ஸ்' கண்காட்சியகத்தில் வரும் மாதம் (ஜனவரி) 20ந் திகதி பொலிவூட்டின் பிரபல நடிகர் ஹிறித்திக் றோஷனின் மெழுகிலாலான உருவச்சிலை திறந்து வைக்கப்பட உள்ளது. 'மடம் ருசோட்ஸ்' கண்காட்சியகத்தில் பிரபலங்கள் பலரின் உருவச் சிலைகள் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. இப்படியாக அரச குடும்பத்தினரிலிருந்து அரசியல்வாதிகள் வரையிலானவர் மத்தியில் தமது உருவச் சிலையும் இடம் பெறுவதை சிலர் பெருமையாகக் கருதுகிறார்கள். இவ்வுருவச் சிலைகளை உலகின் பல பாகங்களில் இருந்து பிரித்தானியாவிற்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் மிகுந்த ஆவலுடன் கண்டுகளிக்கின்றனர்.

### Chak Dhoom Dhoom Competition

இந்தியாவின் பிரபல நடன நிகழ்ச்சியாக பல்லாயிரக் கணக்கான தொலைக்காட்சி ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட 'சாக் டூம் டூம்' இப்போது பிரித்தானியாவிலும் போட்டியாளர்களைத் தேடுகிறது. தனிப்பட்ட போட்டியாளர்களிடையே இந்தியாவில் நடைபெற்ற இப்போட்டி இப்போது குழுக்களிடையே நடைபெற உள்ளது. இதில் பங்கு பெறுவதற்கு வயது வரம்பு கிடையாது. ஆனால் குழுக்களாக மாத்திரமே பங்குபற்ற முடியும். ' நடனக்குழுத் தேர்வுகள் இம்மாதம் 20ந் திகதி மேற்கு இலண்டனில் உள்ள 'ஹீத்றோ திசிள்' ஹோட்டலில் நடைபெற்றது.

## இறுதி வணக்கம்!

கடந்த திங்களன்று (20.12.2010) கொழும்பில் தனது தொண்ணூற்றாறாவது வயதில் காலமான காவலூர் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழறிஞருமான பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவரகளுக்கு ஒரு பேப்பர் தனது இறுதி வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறது.

## இறுதி வணக்கம்!

### கலாநிதி ஈழத்துப் பூராடனார் அவர்கள் காலமானார்.

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும் கனடாவில் வாழ்ந்து வந்தவருமாகிய எமது மதிப்பிற்குரிய திரு செல்வராஜ கோபால் என்று எல்லோராலும் அறியப்பட்ட மூதறிஞர் கலாநிதி ஈழத்துப் பூராடனார் அவர்கள் காலமானார்.

அன்னார் பல நூற்றுக்கணக்கான நூல்களை எழுதிய பேரறிஞராவார் இவரது அறிவுத் திறமையை பாராட்டி கிழக்குப் பல்கலைக்கழகம் இவருக்கு கலாநிதி பட்டமளித்து கௌரவித்தது யாவரும் அறிந்ததே சுவாமி விபுலாநந்தருக்கு அடுத்ததாகப் போற்றப்பட்ட ஒருவரை இழந்திருப்பது தமிழ்கூறும் நல்லுலகுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரது ஈமக் கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்

தொடர்புகளுக்கு: சந்திரா 416 840 4174
தகவல் : பாபு 416 998 2284

## எங்கள் பிதாவே!



நூற்றாண்டுகள் என்ன....
புத்தாயிரம் கடந்தும்
புதுப்பிக்கப்படுகிறது உனது
பிறப்பு!
அனைத்து இனத்துக்கும்
பொதுவானதாய் . . .
குதூகலிக்கப்படுகிறது உனது
வருகை!

பாலன் பிறப்பை பரபரப்பாய்
கொண்டாடும்
பேருலகே! இதன் பொருளென்ன
கூறுகிறீர்?
பிறர் துன்பம் சுமக்க
நாமும் துணிந்தவர் என்கிறீரா?
கொடுமை கண்டால்--அவன
நாடாளும் கோனாகிலும்
தலை நிமிர்த்தி நீதி கேட்கும்
தைரியம் நமக்குண்டு என்கிறீரா?

துன்பப்படுபவன் பாக்கியவான்
என்று
உமக்காய் வலிசுமந்த பிதா
சொன்னதை –
உமக்குச் சாதகமாக்கிக்
கொண்டவரே!
மனித வர்க்கத்திற்கு
இன்னலை சுமத்திக்கொண்டும் –
உங்கள் நலனுக்காய்
உலகெங்கும் பரந்து,
சச்சரவை வளர்ப்பீர் –
சமாதானத் தூதுவராய் நடிப்பீர்
தடை ஆயுதம் கொடுத்தும்
மக்கள் தலைகளில் தீ வைப்பீர்
மூலை முடுக்கெல்லாம் ரத்த
ஆறுபாயவிட்டு,
பொன் விளையும் நிலங்களை
புதைகுழிகளாக்கிக் கொள்வீர் –
மனிதக் கூடுகளைத் தோண்டி
ஆய்வுப் பொருளாக்கிவிட்டு,
உலக ரட்சகர்போல் நீரே அனுத்
தகராறுகளுக்கும்
வழிமுறை சொல்லிக்
கொண்டிருப்பீர்!

எங்கள் பிதாவே!
எதுவுமறியாப் பாமரராய்
இருந்தோம்
எங்களுக்காய் ரத்தம் சிந்தினீர்!
இன்றோ,
எமக்காய் நாமே ரத்தம்
இறைக்கின்றோம்
எதுவும் அறியாதது போல்
இருக்கிறது பரந்த உலகம்!

- ஹேமராஜ், லண்டன்.


உங்கள் உடனடித் தேவைக்கு கையில் பணம் இல்லை என்ற கவலையா?



உங்களுக்கு கிடைக்கும்

- Benefit Cheques
- Inland Revenue
- Insurance Refund
- Wages
- Commissions
- Lottery Winning Cheques
- A/C payee

இவற்றை 4% - 6% வரையான கட்டணத்துடன் உடனே பணமாக்கிக் கொள்ள அழையுங்கள்.

நாங்கள் இருக்கும் போது நீங்கள் இப்படி தலையைப் பிய்க்க வேண்டிய அவசியமில்லை.

020 7243 1417

முகவர்கள் தேவை

பிரித்தானியாவின் எந்த மூலையில் நீங்கள் வர்த்தக நிறுவனம் வைத்திருந்தாலும் நீங்களும் முகவர் ஆகலாம்.

உடன் தொடர்பு கொள்ளவும்

020 7243 1417



Cheque Line
31, Queens Way, London, W2 4QJ.

# யாழ்ப்பாணம் போனேனடி....




## தம்பி இரத்தினம்

*(யாழ் நகரிலிருந்து)*

லண்டனிலிருந்து கொழும்பிற்கு சென்ற அன்றே இரவு யாழ்ப்பாணம் செல்வதற்கான ஒழுங்கு ஏற்பாடாகியிருந்தது. இங்கிலாந்து snow விலிருந்து தப்பிவந்து விட்டேன் என்ற குதூகலத்தில் சாதாரண summer உடுப்புடன் AC வண்டியில் வந்து ஏறிவிட்டேன். அப்பப்பா அந்த AC வண்டியில் குளிர் தாங்க முடிய வில்லை அத்துடன் அந்த குளிரின் மூலம் அதிகரித்த சிறு நீரை அகற்றுவது எப்போ என்று தவித்துக் கொண்ட வேளையில் வண்டி நீர்கொழும்பு சிற்றுண்டிச் சாலையில் நின்றது. கழிவு இடத்தை நோக்கிச் சென்றோரின் வரிசையில் நின்றேன். அதன் துப்பரவைக் காணும் போது வேண்டாம் என்று எண்ணி தெரு ஓரத்தில் அடித்து விட்டு ஒருவித நிம்மதி அடைந்தேன். சிற்றுண்டிச் சாலையின் சுகாதார நிலையக் கண்டவுடன் லண்டனில் தந்த travel advice ஞாபகத்திற்கு வரவே துப்பரவற்ற சிற்றுண்டிச் சாலையில் சாப்பிடுவதையும் தேநீர் அருந்துவதையும் தவிர்த்துக் கொண்டேன். வண்டி புத்தளம் ஊடாகச் சென்று கொண்டிருந்தது. இரவு வேளையிலும் நித்திரையிலும் வெளியில் ஒன்றையும் கவனிக்க முடியவில்லை.

ஓமந்தை அடைந்தவுடன் எல்லோரும் I.Cஐக் காட்டவும் என்று ஒரு சிங்கள சிப்பாய் ஒருவர் வந்தார். என்னைப் போன்று I.C இல்லாதவர்கள் தத்தம் வெளிநாட்டுக் கடவுச் சீட்டுடன் வெளியே சென்று பதிவு செய்தோம். அதன் பின்னர் ஓமந்தை தாண்டிய பின்னர் வண்டி குலுக்கமும் ஆட்டமும்தான். அத்துடன் தொடர் மழை காரணமாக A9 வீதி பூராக பள்ளமும் வெள்ளமும் தான். ஆனையிறவு அடைந்த பின்னர் தான் விடியத் தொடங்கிய படியால் வெளியில் என்ன நடந்ததுள்ளது என்று நோட்டம் விடக் கூடியதாக இருந்தது. Army யின் நடமாட்டமும் Sentry Pointம் ஆங்காங்கு காணக் கூடியதாக இருந்தது. A9யின் வீதி விஸ்தரிப்பதற்கான அறிகுறிகள் காணப்பட்டாலும் தெருக்கள் யாவும் ஒடுக்க மாகவும் மோட்டார் வண்டி பாவனைக்கு உகந்தாகவும் காணப்படவில்லை போர் முடிவுக்கு வந்தாலும் வடபகுதி மக்கள் தொடர்ந் தும் போரின் பாதிப்பை அனுபவிக்கட்டும் என அரசாங்கம் எதிர்பார்ப்பது போல் தோன் றுகிறது. ஆனால் 'ஒரு நாடு ஒரு மக்கள்' (One Country One Nation) என்று கொட்டை எழுத்தில் விளம்பரம் செய்யப்பட்டிருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது தெருவோரங்கள் எங்கும் மக்கள் பாவனையைக் கவரும் வண்ணம் விதம் விதமாக பெரிதாளவாக Bill Boards காணப்பட்டது. அதில் ஒன்று 'யாழ்ப்பாணம் வரவேற்கின்றது' என்று காணப் பட்டது மனதுக்குச் சந்தோசமாக இருந்தது.

போர்ச் சூழலிலிருந்த யாழ் நகர் கட்டமைப் புக்கும் போர் முடிந்த பின்னர் உள்ள குறிப் பிடத்தக்க கட்டமைப்புக்கும் மாற்றம் காணப் படாதது மிகவும் வேதனையாக இருந்தது. உதாரணமாக யாழ் மாகர சபை போன்ற பிரசித்தியுள்ள கட்டடங்களில் எந்த மாற்றமும் காணப்படவில்லை

யாழ்ப்பாண பிரதான வைத்தியசாலைக்கு முன்னர் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் போன்ற வர்த்தக ஸ்தாபனங் களும் அப்படியே போர்ச் சூழலை ஞாபகப் படுத்துகின்றன. அவை யாவும் செடிகளாலும், பற்றைகளாலும் சூழப் பெற்று அனாதர வாகக் காணப்பட்டன. அப்படியே தனியார் வீடுகளும் ஆங்காங்கு தேடுவார் அற்று காணப் பட்டன. இவை அனேகமாக வெளிநாட்டுக்கு இடம் பெயர்ந்து 'நாங்கள் தப்பிட்டோம், அங்குள்ளவர்கள் எக்கேடு பட்டாலும் பரவாயில்லை' என்ற மனப்பான்மையுடையவர் களுடைய சொத்தாக இருக்கலாம் என்று எண்ணுகின்றேன்.

அரசாங்கமும் இப்படியான காணிகளை அபகரிப்பதற்கான திட்டங்களுடன் செயற் படுவதாக அயலவர்கள் மூலம் அறியக் கூடிய தாக இருக்கின்றது. எனவே இக் காணிகளுக் குச் சொந்தக்காரர்கள் தாயகம் போக விருப்ப மில்லாதவர்களாக இருந்தால் ஒரு சிறு முதலீடு செய்து வீடு, வளவுகளைத் திருத்தி தமது சொந்தக் காரருக்கு, அல்லது அயலவருக்கு விற்பது புத்திசாலித்தனமானது என்று கருதுகின்றேன்.

அரசாங்கம் அனாதரவாகக் காணப்படும் தனியார் சொத்துக்களை சுகாதாரம் காரணமாக அபகரிக்கும் நோக்கம் இருந்தாலும் நகர்ப் புறத்தில் உள்ள சுகாதாரத்தில் அவ்வளவு அக்கறை எடுப்பதாகக் காணப்படவில்லை உதாரணமாக சாக்கடை நீர் பாய்ந்து ஓடுவ தற்கான ஒழுங்குகள் செய்யப்படவில்லை. குறிப்பாக யாழ்ப்பாண வைத்தியசாலையைச் சுற்றி சாக்கடை நீர் தேங்கிய வண்ணம் இருக்கின்றது. அதுவும் அடை மழை காரண மாக நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகின்றது. மற்றும் தெருவோரங்களில் செடிகள் பற்றையும் ஆங்காங்கே தேவையற்ற Plastic போத்தல் களும், பொலித்தீன் பைகளும் நகர்ப்புறத்தை அசுத்தப்படுத்திய வண்ணம் இருக்கின்றன.

அத்துடன் தனியாருடைய கழிவுப் பொருட் களும் வீதி ஓரங்களில் காணப்படுகின்றது. இவற்றுக்கெல்லாம் மாநகர சபையில் பொறுப் பில் உள்ள அதிகாரிகள் எவரும் கவனம் எடுப்பதாகக் காணப்படவில்லை. மாநகர சபை முதல்வர், திருமதி யோகேஸ்வரி பற்குண ராஜா புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட போது, யாழ் நகரை சிங்கப்பூர் போன்று சொர்க்க பூமியாக மாற்றப் போவதாக சூழ் உரைத்தது காற்றோடு பறந்து விட்டதா என்று எண்ணத் தோன்றுகின்றது.




வெளிநாடுகளில் இருந்து தாயகம் செல் வோர் அங்கு இயல்பு வாழ்க்கை நடைபெறு வதாகவும் மக்கள் சந்தோசமாக இருப்பதாக வும் சொல்வதைக் கேட்க என்னால் நம்ப முடியவில்லை. பொது மக்களைப் பொறுத்த மட்டில் அரசாங்கத்திற்கு எதிராக எதுவும் தெரிவிப்பதற்கு அஞ்சுகிறார்கள் என்றே நான் நம்புகின்றேன். எதுவாக இருந்தாலும் வெடிச் சத்தம் இல்லாமல், உயிர் ஆபத்து இல்லாமலும் அன்றாட வாழ்க்கையை நடாத்தக் கூடிய தாக இருக்கின்றது என்று ஓரளவு சந்தோசமும், நிம்மதியும் அடைகின்றார்கள். தத்தம் சொத்துக்கள், உடமைகளை இழந்து மாறி மாறி இடம் பெயர்ந்து நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வெறுத்துப் போய் விட்டது என்று அலுத்துக் கொள்பவர்களும் உளர். மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் என்று இன்னமும் தங்கள் சொந்த வீடுகளில் வாழ முடியாமல் வாடகை வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் கள். உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் பிரவேசி க்க என்னைப் போல் வெளிநாட்டு கடவுச் சீட்டு வைத்திருப்பவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

Army check point அகற்றப்பட்டு, மக்கள் சுதந்திரமாக நடமாடக் கூடியதாக இருந்தாலும் மக்களுடைய நடமாற்றத்தை தொடர்ந்தும் கண்காணித்தும் கொண்டே இருக்கின்றார்கள். அத்துடன் வடக்கில் உள்ள சிப்பாய்கள், விடு தலைப் புலிகளின் உயிர் ஆபத்து இன்றி, சந்தோசமாகவும், சுதந்திரமாகவும் இருக் கின்றனர். மொத்தத்தில் 'வடக்கில் வசந்தம்' என்பது அவர்களுக்கே பொருத்தமாகும் என்று எண்ணுகின்றேன். எனினும் ஒரு சிலர் 'எங்களை யெல்லாம் இவ்வளவு கஸ்ரத்தில் தள்ளி விட்டு அவர் போய் விட்டார்' என்று குறை கூறு வாரும் உளர்.

அதே வேளையில் எனது நண்பர் ஒருவர் தற்போதைய மாநகர சபை அரசாங் கத்துக்கு வக்காலத்து வாங்குவதாகவும் மாநகர சபை சேவைகள் ஒழுங்காக் நடை பெறுவதில்லை என்றும் 'பொடியள்' இருக்கும் போது நியாயம் நீதியாக நடை பெற்றது என்றும் சொல்வதையும் கேட்டேன். அதே வேளையில் புலிகள் சந்தர்ப்பத்தை இழந்து விட்டார்கள், என்றும் தமிழர்கள் தலை குனிந்து நிற்க வேண்டி இருக்கின்றது என்று கவலைப்படுகின்றவர்களும் உளர். மற்றும் எனது நண்பர் ஒருவர் என்னிடம் 'லண்டன் தமிழர்கள் கொட்டும் பனியிலும் ஜனாதிபதிக் குத் தகுந்த பாடம் புகட்டியுள்ளார்கள்' என்று மெச்சியதும் ஆறுதலாக இருந்தது என்னைப் பொறுத்தளவில்' புலிகள் இருக்கும் போது முறிகண்டியில் ஓரளவு சுகாதார முறையில் மலசலம் கழிக்கக் கூடிய வசதிகளைச் செய்து தந்தார்கள்' என்று சொல்லத் தோன்றுகின்றது! யாழ் நகரில் உள்ள தெருக்களெல்லாம்

அச்சம் ஒழிந்த நாட்டிலே
சூரிய சந்திரன் நாயகனே
மெச்சும் வளமிகு நாளையிலே
ஜனாதிபதியும் நீங்களே!
நீடூழி வாழ்க!

என்று ஜனாதிபதியின் படத்துடன் விளம் பரம் செய்யப்பட்டு பரவலாகக் காணப்படு கின்றது. ஏதோ பயங்கரவாதம் தான் தமிழ் மக்களுடைய பிரதான பிரச்சினையாக இருந் தது போன்று விளம்பரம் செய்வதை எண்ணி அழுவதா, சிரிப்பதா என்று நினைக்கின்றேன் அத்துடன் பொதுத் தேர்தலின் போது EPDPக்கு வாக்கு அளிக்கும் வண்ணம் தனியார் மதில்களிலும், தெருக்களிலும் வெற்றிலைச் சின்னத்துடன் டக்ளஸ் தேவானந்தா, நீகன் 9x8x12 என்ற விளம்பரங்களும் பரவலாகக் காணப்படுகின்றன. அவருடன் சேர்ந்து லாபம் அடையும் கும்பல்கள் பெருமளவில் காணக் கூடியதாக இருக்கின்றது எனவே எதையும் சுதந்திரமாகக் கதைக்கக் கூடியதாக இல்லை. எனக்குத் தோன்றிய யாவற்றையும் ஒரு பேருக்காக எழுதி அவசர அவசரமாக எழுதி அனுப்புகின்றேன்.



# கையாலாகாத காவல்துறை.

குளிரோ, வெயிலோ காலையில் 4 மணிக்கு நித்திரையைவிட்டு எழும்பிவிட்டால் 6 மணிக்கு ஆரம்பமாகும் வேலைக்கு சென்றடைய முடியாது. இதுதான் வீட்டிலிருந்து வேலைக்குச் செல்லும் தூரம் அதிகமாக இருக்கும் பட்சத்தில் வேலைக்குச் செல்பவர்கள் முகம் கொடுக்கும் அன்றாடப்பிரச்சினை. பொதுசன போக்குவரத்துச் சாதனங்களைப் பயன்படுத்தினால், இந்தப் பிரயாண நேரம் இன்னமும் அதிகமாகக்கூடும். எனவே விரும்பியோ விரும்பாமலோ வேலைக்குச் செல்பவர்கள் கார் வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது. லண்டனில் கார் ஒரு ஆடம்பரச் செலவாகக் கருதுவதைவிட போக்குவரத்துக்குதவும் தோழனாக சேர்த்துக் கொள்ளப்படுகிறது. காரை வைத்திருப்பதில் ஏற்படும் அன்றாடச் செலவை விட வீதிகளில் வைத்திருக்கும் கமராக்களில் சிக்காமலும், நிறுத்தும் இடங்களின் பாதுகாப்பிலும் கண்ணுக்குள் எண்ணெய் தடவியபடியே இருக்க வேண்டும். அனேக நகரங்களில் கார் நிறுத்தும் அனைத்து இடங்களிலும் முன்கூட்டியே பணம் செலுத்தி அனுமதிச் சீட்டுக்களை முன் கண்ணாடியில் ஒட்டிவிட்டே நிறுத்த வேண்டும். 8 மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டிய இடத்தில், கார் நிறுத்த கட்டணம் செலுத்துவதானால் உழைக்கும் ஊதியத்தில் எவ்வளவுதான் மிஞ்சும்.

எனக்கு தெரிந்த நண்பர், குடும்பஸ்தர், பொறுப்புள்ள உழைப்பாழி, தனக்கென்று வாழாமல் தன்னைச்சார்ந்த பெற்றோர்கள், சகோதரர்கள், மனைவியின் குடும்ப அங்கத்தவர்கள் என்று பேதமே இல்லாமல் உதவி செய்பவர். இவரது நற்குணத்துக்கு தேவைப்பட்டது கடும் உழைப்பு. இரண்டு இடங்களில் ஓடி ஓடி வேலை செய்ய அவருக்கு தேவைப்பட்டது ஒரு நல்ல கார் மாத்திரமே. கார் நிறுத்த கட்டணம் செலுத்த கட்டுப்படியாகாத காரணத்தினால் பாதுகாப்பான இடமென்று கருதி, இவரைப்போல வேறு ஆட்களும் நிறுத்தி வைக்கும் ஒதுக்குப்புறத்தில் தனது காரை நிறுத்தி வைப்பது இவரது வழக்கம். அன்றய தினம் வழக்கம் போல காலையில் காரை நிறுத்திவிட்டு, வேலை முடித்து கார் நிறுத்தி வைத்திருந்த இடத்திற்கு வந்தால், காரைக் காணவே இல்லை. நித்திரை அலுப்பில் வேறு இடத்தில் நிறுத்தி விட்டோமோ என்று ஓடி ஓடித் தேடினார். காரைக் காணவே இல்லை. இவர் படும் குழப்பத்தை அவதானித்து அங்கு வந்த அறிமுகமான ஒரு பேருந்துச் சாரதி, இதற்கு முன்பும் இதேபோல கார் களவு போனதெனத் தெரிவித்தான். காரைக் கடத்துனர்கள் கையாழும் புதிய தந்திரமாக, பழுதடைந்த கார்களை தூக்கிச் செல்லும் வாகனத்தில் லபக்கென்று தூக்கிச் செல்வதால், எவர் சந்தேகமும் இவர்கள் மீது விழுவதில்லை.

வீதிக்குவீதி கமராக்களும், பேருந்துகளில் கமராக்களும், ஒரு விசையைக் கணணியில் தட்டியவுடன் சகல விபரங்களையும் அறியக் கூடிய நவீன வசதிகளையும் கொண்ட காவல் துறை, பட்டப்பகலில் பலர் முன்னிலையில் தூக்கிச் செல்லப்பட்ட ஒரு காரை இன்னமும் கண்டுபிடிக்க முடியாதது கையாலாகாத்தனமா அல்லது அசட்டையீனமா? முடிவு செய்யுங்கள். கவனம் கார்கள் பத்திரம்.

# நாக்கின் அசைவில் நடமாடும் நாற்காலி.

நாக்கின் அசைவுகளால் ஏற்படும் சப்தத்தை வைத்தே ஒருவருக்கொருவர் தமது செய்திகளைப் பரிமாறும் பழக்கத்தை இன்றும் தென் ஆப்பிரிக்க மக்களில் சில பகுதியினர் வழக்கத்தில் வைத்திருப்பதாக அறிகிறோம். இதன் அடிப்படையில் ஆரம்பித்த ஆராய்ச்சி கை, கால்கள் முடங்கி பாரிசவாத நோயினால் கட்டுண்டு கிடக்கும் நோயாளிகளுக்கு ஒரு மிகப்பெரிய ஆறுதல் தரும் அதிசய கண்டுபிடிப்பைத் தந்துள்ளது.

நடமாடும் நாற்காலிகளைப் பாவிக்கும் நோயாளர்கள், தமது நாற்காலிகளை இயக்க, வாய்க்குள் மேற்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கருவியின் விசைகளை நாக்கினால் அழுக்கியே, தமது நாற்காலிகளை இயக்கக்கூடிய வசதி தற்சமயம் நடைமுறையில் காணமுடியும். இக்கருவிகளைப் பாவிப்பவர்கள், உண்பதிலும், உரையாடுவதிலும் மிகவும் சிரமப்படுவதாக அனுபவங்கள் மூலம் அறிய முடிகிறது. கூடுதலாக இக்கருவிகள் சுகாதார சீர்கேடுகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பும் இருப்பதாகத் தெரிகிறது. எனவே காதுகளில் பொருத்தக் கூடிய ஒரு கருவியைக் கண்டுபிடித்தால், இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியுமென Bristol பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரவி வைத்திய நாதன் அவர்கள் சிந்தித்தார்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

ரவி வைத்தியநாதன் அவர்களும், குழுவினரும் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் பலனாக, காதில் பொருத்தக்கூடிய ஒரு கருவியைக் கண்டு பிடித்துள்ளனர். இக்கருவி அனேகமாக காதுவழியாக இசை கேட்கும் சிறிய மொட்டளவு தோற்றத்தில் இருப்பதாகக் கூறுகிறார்கள். நான்கு விதமான சப்தத்தை நாக்கின் அசைவுகளால் உண்டாக்கும் போது காதில் பொருத்தப்பட்டிருக்கும் மின் ஒலிவாங்கி இச்சப்தங்களை உள்வாங்கி நாற்காலியைச் செயல்பட உதவும் கட்டளைக் கருவிக்கு உத்தரவுகளை பிறப்பிக்கின்றது. இவர்களுடைய ஆராய்ச்சியில், தற்சமயம் நாக்கினால் எழுப்பப்படும் நான்குவிதமான சப்தங்களுக்கு மாத்திரம் நாற்காலிகளைச்செயல்பட வைத்துள்ளனர். கூடுதலான கட்டளைகளை பிறப்பிக்கக்கூடிய ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். பரிசோதனை செய்யப்பட்ட இக்கருவி வெற்றியளித்துள்ளதால் விரைவில் விற்பனைக்கு வரப்போவதை, Lausanneவிலுள்ள, Swiss Federal Institute Of Technologyயைச் சேர்ந்த Jose Del R.Millan அவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்.

பாரிசவாத நோயினால் முடங்கிக் கிடக்கும் நோயாளர்கள், இப்புதிய கருவியினால் பயனடையப் போவது நிச்சயமென நம்பலாம். இதற்கு வேண்டிய பயிற்சியை இரண்டு மணித்தியாலங்களிலேயை அறிந்து கொள்ள முடியுமென ஆராய்சியாளர்கள் தெரிவிப்பதால், வலுவிளந்த மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாக நாமும் வரவேற்போம்.

# கொடிய மலேரியாவைக் கொல்வதற்கு வழி.

நுளம்புகளினால் பரவும் மலேரியாவைத் தடுக்க பரவலாகப் பாவிக்கப்படும் D.D.T நுளம்புக்கொல்லி மருந்து, பறவைகள் இனத்தை வெகுவாகப் பாதித்துள்ளதாக புதிய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளது. D.D.Tக்கு பதிலாக மலேரியாவை ஒழிக்க வேறு மார்க்கமே கிடையாதா என்று 1980லிருந்து ஆரம்பித்த ஆராய்ச்சி, ஒரு வழியாக மிக அற்புதமான கண்டுபிடிப்பை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

எந்த நுளம்புகளால் மலேரியா பரவி ஆட்களை அழித்ததோ, அதே நுளம்புகளை வைத்தே மலேரியாவை ஒழித்துக் கட்ட, தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்த Regina Robinovich அவர்கள் நோபல் பரிசுபெறும் தகுதியை எட்டியுள்ளதாக, பிரசித்தி பெற்ற மருத்துவ விஞ்ஞானி Joe Cohen பாராட்டத் தவறவில்லை. குறிப்பிட்ட இந்தத் தடுப்பு மருந்து, ஊசி மூலம் உடலில் செலுத்தப்படும். 6 தொடக்கம் 12 வாரம் நிரம்பிய குழந்தைகளுக்குத் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மலேரியாக் காய்ச்சலின் கொடிய பிடியிலிருந்து, சரிபாதி மக்களாவது காப்பாற்றப்படப்போவது நிச்சயமென Joe Cohen அவர்கள் நம்புகின்றார். 2015ம் ஆண்டளவில், தென் ஆப்பிரிக்காவில் வாழப்போகும் இளஞ்சந்ததியினரிடம், இப்புதிய தடுப்பு மருந்து பாவனைக்கு வருவதை யார்தான் தடுப்பார்கள்.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்
ஒரு பேப்பர்



நீங்கள் இரத்தம் சிந்தி உழைக்கிறீர்கள் என்பது எமக்குத் தெரியும்

உழைத்தவற்றை ஊருக்கும் உறவுக்கும் கொடுத்து களைத்தீர்கள் என்பதும் எமக்குத் தெரியும்

ஒரு நாளில் உங்களுக்கு ஓய்வாகக் கிடைப்பது ஒண்டு ரெண்டு மணித்தியாலங்களே!

இதற்கு அதிகம் செலவழித்து தமிழ்த் தொலைக்காட்சிகளை பார்க்க முடியாது என்பதும் தெரியும்.

ஒரே ஒரு வழிதான் உங்களுக்கு உண்டு

சீவியம் முழுக்க உங்களால் பார்க்க முடிந்த தொலைக்காட்சிகளை பார்த்து மகிழ்ந்திட

அழையுங்கள்

# 020 7183 0367






**புதிய சட்டிலைட்**
**இணைப்புகளுக்கும் அழையுங்கள்**

இந்தப் பொட்டியின் தார்ப்பரியத்தை ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் உங்கள் உறவினர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

http://www.nallatv.com

இது ஒரு தமிழ் பெடியங்களின் தயாரிப்பு

# ஏலோர் எம்பாவாய்



இங்கிலாந்து எங்கும் குளிர் கால கோரம். தொடர்ந்து ஆகாயம் தூவிய பனிப்பூக்கள் பார்க்கும் இடமெங்கும் பனிப்படலங்களாக அப்பிக்கிடக்கின்றன. சாலை ஓரம் எங்கும் கடும் பனிச்சேறு. காலநிலையை எதிர்கொள்ள வேண்டிய தேவை இதற்கு முன்னர் இல்லாத நிலமை ரயில், விமானம், நெடுஞ்சாலையென ஆகாய தரைமார்க்க பயணங்களை ஸ்தம்பிக்கச் செய்துள்ளது. தண்ணீர், விறகு, நெருப்பு, காற்றுக்கெல்லாம் தா காசு என்று கேட்காத தாய் மண்ணைவிட்டுநீங்கிபுலம்பெயர்ந்தோம். குருதியை உறைய வைக்கும் குளிரைப் போக்க வீட்டுச் சூடாக்கிகளுக்கு மட்டுமே பலநூறுக் கணக்கான பவுண்களை மாதாந்தம் செலுத்துகின்றோம்.

குளிரை கொப்பளிக்கும் இங்குள்ள இன்றைய இயற்கைச் சூழல் தாய்நாட்டு தாகத்தை பிரிந்த ஏக்கத்தை நெஞ்சில் தேக்கும் இன்னொரு காரணியாக அமைகின்றது. மழை வாரிப் பொழியும் மாரியிலும் கூட எங்கள் ஊர் இப்படியா இருக்கும்? பிள்ளையார் பெருங்கதை விரதம், திருவெம்பாவை, கிறிஸ்மஸ் கொண்டாட்டம் என்று கலகலப்போடு காணப்படும். வெள்ளம் நிரம்புவதும, வயல்கள் வாய்க்கால்கள் உடைப்படுவதும், பயிர்கள் அழிவதும் கூட மாரிகாலத்தின் தாக்கம்தான், ஆனால் தை பிறந்ததுமே சூரியனைக் கண்ட பனி போல கவலைகள் அகல்வதும், மீண்டும் தொடங்கும் மிடுக்கோடு அடுத்த பயிர்ச்செய்கைக்கு ஆரம்பவேலைகள் தொடங்குவதும் ஊரின் வழமை.

பெரும்பாலான கோயில்களில், வீடுகளில் மாரிகால பிள்ளையார் விரதம் கோலமாக முற்றத்து முன்று வட்ட சுற்று அடுக்கில் சாணக பூச்சு மேடையில் அன்றாடம் அறுகம்புல் சாணக பிள்ளையார் புதிது புதிதாக அமைக்கப்படுவார். பூ அலங்கார வழிபாடு முற்றத்தில் இடம்பெறும். ஆலயங்கள் தோறும் பிள்ளையார் பெருங்கதைப் படிப்பு. இருபத்தொரு நாட்கள் தொடரும் இந்த விரதத்துக்கு முடிவில் பிள்ளையாருக்கு மோதகம் போன்ற பண்டப் படையலுடன் பூசை நிறைவுக்கு வரும். பெருங்கதை படிப்புக்கு பக்தர்கள் ஓரிருவரே இருந்தாலும் படிப்பு நித்தம் தவறாமல் கோயில்களில் நடக்கும்.

தொடர்வது திருவெம்பாவை. பத்து நாள் விரதம். அசுத்த ஆவிகள், பில்லி சூனியப் பேய்கள் ஊரிலிருந்து விலக ஊரைக் காக்கும் சிவனுக்குரிய விரதமென்பது இந்த திருவெம்பாவை குறித்த ஐதீகம். ஆலயங்கள் தோறும் அதிகாலைப் பூசையை திருவெம்பாவைக் காலத்தில் பார்க்க முடியும். இங்கு திருவாசகம் ஓதுதலும் இடம்பெறும். மாணிக்கவாசகரின் திருவெம்பாவை பாடல்கள் ஒவ்வொரு ஆலயங்களிலும் வீதிகளிலும் கூட ஒலிப்பதும் இதன் இன்னொரு சிறப்பு. அதிகாலை குளத்துக்கு நீராட செல்லும் தோழியர்கள் இடுப்பிலே குடம் கொண்டு, இறைவனை மனத்தில் கொண்டு இயங்குவதை கருக்கருத்தாக கொண்ட திருவெம்பாவைபாடல்கள். குளிர் காலம் என்றாலே ஆலய விஜயத்துக்காக அதிகாலை குளிப்பும் உடம்புக்கு நாள் முழுவதும் உற்சாகத்தை ஏற்றி வைக்கும். மாரி மழையால் முட்டி நிற்கும் கிணறு துலாக்கொடி இல்லாமலே கிணற்று நீரை எட்டி வாரி அள்ளத்தக்கதாக நீர்மட்டம் உயர்ந்திருக்கும்.

ஒழுங்கை தெருக்கள் எல்லாமே திருவெம்பாவை பாடல்களோடு பஜனைக்கோஷ்டி அந்த அதிகாலை நிசப்தத்தை கிழித்துக் கொண்டு இருபது திருவெம்பாவை பாடல்களும் தெருத் தெருவாக ஒலிக்கும். பெற்றோல் மாக்ஸ் விளக்கு ஒளியிலே வரும் பஜனைக் கோஷ்டிக்கு நாளுக்கு ஓரிரு வீடுகள் என்று கோப்பி பானம் வழங்கி உபசரிப்பதும் ஒரு வழமையான பண்பாடாக தொடர்ந்தது. ஒவ்வொரு பாடலும் ஏலோரம் பாவாய் என முடிய சங்கு, சேமம், மணி என முடிய ஒவ்வொரு ஒலியும் எவரையும் நித்திரையால் எழுப்பிவிடும். ஊர்நாய்களுக்கும் பஜனை கோஷ்டிக்கு ஒரு மரியாதை. கோஷ்டி சேர்ந்து குரைப்பது, ஓடஓட கலைப்பது என்ற நடப்புகள் அரிது.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

திருவெம்பாவை என்றாலே நினைவில் எனக்குள் நிலைத்த ஒருவர் சிதம்பரப்பிள்ளை ஐயா. ஆதிசைவம் அவர். ஒரு உடுக்கு இசைக் கலைஞரும் கூட. அம்பரை மகாஜனக் கல்லூரியின் எல்லை வீதியோரமாக அமைந்த வைரவர் கோயில் பூசகர். அகன்ற முகத்தை அலங்கரிக்கும் தீட்சைக்குறிகள். பெரிய குங்குமப்பொட்டு. பருத்த சரீரம். நூல் நாலு முழ வேட்டி என காட்சியளிக்கும் சிதம்பரப்பிள்ளை ஐயா சுற்றாடல் வீதிகளை திருவெம்பாவை தோறும் வைகறையில் சங்கு ஒலி தேவாரம் சகிதம் வீதிகளைச் சுற்றி வருவார். துணைக்கு ஒருவர் மணி ஒலித்தபடி. வெளிச்சம் கொடுக்கும் அரிக்கன் லாம்பை பிடித்தபடி வர அவரது கம்பீரமான குரலில் திருவெம்பாவை அந்தக் குளிரை ஊடறுத்துக் கொண்டு ஒலிக்கும். அம்பரை கலைப்பெருமன்றம் ஒரு நாளுக்கு ஒருவரின் சொற்பொழிவு என்ற ஏற்பாடுகளொடு அதிகாலை தோறும் திருவெம்பாவை இந்த வைரவர் கோயிலில் நடத்தியதும் நினைவில் மிதக்கும் ஒரு நல்ல நிகழ்வு.

கிறிஸ்தவத்தை இலங்கைக்கு பரப்பிய அன்னிய ஏகாதிபத்திய ஜரோப்பிய நாடுகளோடு ஒப்பிடும் போது கிறிஸ்தவ மதத்தை கடைப்பிடிக்கும் சமயபக்தி எம் நாட்டில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு அதிகம் எனலாம். கிறிஸ்மஸ் நாளில் கூட வருடத்திற்கு ஒரு முறையேனும் தேவாலயம் செல்லாத பல்லாயிரக்கணக்கான ஐரோப்பியர்களை பார்க்கிறோம். ஆனால் தாயத்திலோ கிறிஸ்தவர்களின் இறை பக்தி சிரத்தையோடு நித்தமும் தேவாலயத்துக்கு செல்லும் தன்மைகளை ஞாயிறு வழிபாட்டிற்கு தவறாமல் செல்கின்ற பழக்கத்தை கொண்டவர்களை அதிகளவிலே பார்க்கலாம். தாயகத்திலே கிறிஸ்தவர்களின் பக்திசிரத்தையான வழிபாட்டு முறைகளோடும், கொண்டாட்டங்களோடும், இந்த இயேசு பிறந்த நாளான கிறிஸ்தவ தினம் கொண்டாடப் படுவது தாயக சிறப்புகளில் இன்னொரு அம்சம். மாரி மாதந்தோறும் மகிழ்வைத் தருகின்ற இன்னொரு விடயமாகக் கூட இதனைக் கொள்ளலாம். போர் அவலங்களுக்கு இடையிலேயும் கூட இவ்வாறாய நடைமுறைகள் காலாகாலமாக தொடர்வது ஊரின் சிறப்பு.

எந்த ஊரு என்றாலும் எம்ம ஊரு போல வருமா? நம்ம நாடு போல வருமா? என்ற கேள்விக்குறிதான் இந்த நேரத்திலும் நெஞ்சிலே ஒலிக்கின்றது.

### இப்போது ஊர்...

மலர்களிலே குருதி மணக்கிறது,
நாளை அவைகள் குண்டுகள்
காய்க்கலாம் வண்டுகள்
இப்பொழுதெல்லாம்
தேன் குடிப்பதில்லை – அவை
குருதி குடிக்கப் பழகியதால்
துப்பாக்கிகளையல்லவா காதலிக்கின்றன.
காற்றில் உயிர்கள் மிதக்கின்றன – அவை
பலாத்காரமாக பறிக்கப் பட்டதனால்
உரிய இடம் சேராமல் காற்றில் மிதந்து
அலைகின்றன நாளைகளில்......
ஊர்கள் இருக்கும் புல் பூண்டு, மிருகம்,
பறவைகள் எல்லாமே இருக்கும்.
மனிதனைத் தவிர...!


சகல விதமான மோட்டார் வாகன திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய இடம்!


**TR AUTOS**

£15 Offer
MOT Charge
Class 4 Car: £54.85
Class 7 Car: £58.60

- MOT
- SERVICE
- REPAIRS
- TYRES
- EXHAUSTS
- PRIVATE CARS
- TAXIS
- COMMERCIALS
- ACCIDENT & BODYWORK

For MOT:
Please Call **Mr. Tharma**
**020 8540 6537**
**020 7252 4438**





Unit 23, Riverside Business Park
Lyon Road, South Wimbledon, SW19 2RL
Fax: 0207 358 2524
Email: trautos@gmail.com

Elephant & Castle ல்
Complete automotive service and repairs
by fully licenced mechanics

111 – 113 Elephant Road
London, SE17 1LB

## பேராசிரியர், முனைவர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

# கா.பொ.இரத்தினம்

## அவர்களின் மறைவையொட்டி அவர் வாழ் நாட்களில் சில சிந்தனைகள்



தமிழ்த்தாயின் தவப்புதல்வன் கா.பொ.இரத்தினம் 10-03-1914 ஆண்டு அவதரித்து தனது 97 ஆவது வயது வரை தமிழுக்காக, தமிழ் மொழிக்காக குரல்கொடுத்து 20-12-2010 அன்று விழிமூடி விட்டார்.

பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராக, தலைமை ஆசிரியராக, வாய்மைவழி செல்லும் ஆசானாக, கலாசாலை விரிவுரையாளராக, அரச கரும மொழித் திணைக்கள தலைமைப் பணியாளராக எல்லாம் கடமையாற்றி தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் ஆற்றிய பணி எண்ணிலங்கடா. 'கீழோர்க்கு அஞ்சேல்' என்னும் பாரதி வாக்கிற்கு அமைய 'தமிழ் உண்டு, தமிழ் மக்கள் உண்டு தமிழுக்கு நாளும் செய்வோம், நல்ல தொண்டு' என்று தமிழுக்காக தன்னை அர்ப்பணித்ததோடு மட்டுமன்றி சிங்கள தேசத்திற்கு பெரும் தலையிடியாக பாராளுமன்ற பதவிக்காலத்தில் வாழ்ந்தும் காட்டியிருந்தார்.

வள்ளுவர் வகுத்த பாதையில் அரசியலையும், தன் வாழ் நாளையும் வாழ்ந்து காட்டியவர். 'சொல்லுதல் யாவருக்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்பது பொய்யாமொழி. சொல்வதோடு அமையாது செயல்வீரராகவும், வாழ்ந்தவர். தமிழ்மறைக் கழகம் என்ற அமைப்பை நிறுவி, அதனூடாக தமிழையும் திருக்குறளையும் வளர்த்தெடுத்தவர். 1953 இல் ஆரம்பித்த கழகம் 1983 வரை 24 மகாநாடுகளை நடத்திய சிறப்புடையது. 1993 மார்கழித் திங்கள் 8ம் நாளில் 26வது திருவள்ளுவர் மகாநாடு சென்னையில் நடத்தினார். அதுமட்டுமன்றி ஆறுமுகநாவலர் மேல் கொண்ட ஈடிணையற்ற அன்பினால் நாவலர் நினைவுநாளான கார்த்திகைத் திங்கள் மக நட்சத்திர நாளில் விழாவாக நடத்துவதற்கு சென்னை சைவ சித்தாந்த பெருமன்றத்தில் ஒரு அறக்கட்டளையை இவர் நிறுவியுள்ளார்.

தவத்திரு தணிநாயகம் அடிகளாருடன் சேர்ந்து உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினை கோலாலம்பூரில் 1963 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் நிறுவினார். 1966ஆம் ஆண்டிற்கும் 1987ஆம் ஆண்டிற்கும் இடையில் ஆறு ஆராய்ச்சி மகாநாடுகளை நடத்திய பெருமையுடையவர்.

யாழ்ப்பாணத்தில் 1974ஆம் ஆண்டு நடைபெற்ற 4வது தமிழாராய்ச்சி மகாநாடு ஈழத்தமிழர் தம் வரலாற்றில் துயர் தோய்ந்த தொன்றாக இன்றும் நினைவு கூருகின்றோம். 1986 ஆம் ஆண்டு முனைவர் கா.பொ இரத்தினம் அவர்களது விருப்பத்திற்காக முதலமைச்சர் M.G இராமச்சந்திரன் அவர்கள் உலக தமிழ்ச் சங்கத்தை அமைத்து விழா எடுத்தார். கா.பொ இரத்தினம் அவர்களது வாழ்நாள் கனவாக இருந்த தமிழ்மறைக் கோட்டம் (நூலகம்) வள்ளுவர் பெருமானது சிலைக்கருகில் வி.சி சந்தோசம் அவர்கள் முயற்சியால் 1993இல் நனவாகியது. கட்டடத்தை பேராசிரியர் அன்பழகன் திறந்து வைக்க பண்டிதர் அவர்கள் கலந்து கொண்டு வி.சி சந்தோசம் அவர்களைப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் வாழ்வில் 'தாயின் மேல் ஆணை! எம் தந்தை மேல் ஆணை! தமிழரின் ஆட்சி எம் நாட்டில்' என வரித்துக் கொண்டவர். 1965 இல் கிளிநொச்சித் தொகுதியில் பாராளுமன்ற வேட்பாளராக நின்று தமிழரசுக்கட்சியில் சார்பில் அமோக வெற்றியீட்டியவர். 1965இல் தமிழரசுக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியோடு சேர்ந்து அரசு அமைத்த வேளை மாவட்டசபை முன்வரைபை ஆக்குவதற்கு அன்று உள்ளூராட்சி அமைச்சராக இருந்த திரு திருச்செல்வம் செயல்பட்டமையைச் சுட்டிக்காட்டி தமிழ் இனத்திற்கு செய்யும் மாபெரும் துரோகம் என பண்டிதர் கூறி வெளிநடப்புச் செய்தமையையும் அதன் உள்வாங்கலுக்காக இறுதிவரை போராடிய பெருந்தகை 'தமிழரே தமிழ் இனத்திற்கும் தமிழ் மொழிக்கும் கேடு விளைவிக்கின்றனர்' என தனது நினைவுத் தாரைகள் என்ற சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். அதுபோல் மொழிச் சிக்கலை தீர்ப்பதற்கு அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்கள் உருவாக்கிய மும்மொழித்திட்டத்தையும் முனைவர் அவர்கள் காரசாரமாக எதிர்த்தார். இத்திட்டம் தமிழரசுக் கட்சியின் ஒப்புதலுடன் நிறைவேறியது குறிப்பிடத்தக்கது.

1970-1977 களில் நடைபெற்ற தேர்தல்களில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் அமோக வாக்குகளுடன் வெற்றிபெற்று 18 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்.1983 ஆண்டு ஆடித்திங்கள் 25இல் பாராளுமன்றில் இவர் தனது கடைசி உரையை நிகழ்த்தினார். அவ்வுரையில் தமிழ் ஈழம் உருவாகுவது திண்ணம், அதற்குப் புலிவீரம் துணைபோகும் எனவும் புலிவீரர்கள் மத்தியில் தற்கொலையாளிகள் உருவாகுவர் எனவும் சூழுரைத்தார்.

'புலிவீரம் பேசும் கவிதை
அழிக்கும் தொழில்கள் அனைத்தும் செய்யும்
சிங்களப் படையைச் சீறி எழுந்து
சிறுசுடர் முன்னாப் பேரிருள் இரிதல்
போல ஓட்டிப் பொங்கிக் கனன்று
இழந்தநாடாம் ஈழத்தாயகம்
தன்னை மீட்கத் தங்கள் உயிரைக்
கொடுத்து போராடும் கொல்புலி போன்ற
மறத்தமிழ் இளைஞர் மாபெரும் வீரர்'

என்று புகழாரம் புகன்றமை நினைவோங்கி நிற்கின்றது.

தமிழ் நூல்கள், கவிதைநூல்கள், திருக்குறள் விளக்கவுரைகள் என நூற்றுக்கணக்கான படைப்புக்களை தமிழுக்குத் தந்தவர். தமிழ்ப் பணிக்காக இவர் சென்ற நாடுகள் ஏராளம். பெற்ற விருதுகள் ஏராளம். 1995இல் தமிழ்நாடு அரசு 'திரு வி.க' விருதினையும் உலகத் தமிழர் பேரமைப்பு 'உலகப் பெரும் தமிழர்' எனும் விருதினையும் 05-07-2003 இல் வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

அடியேன் கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் அவரது உதவியாளராக பணியாற்றியகாலத்தைப் பொற்காலமாகக் காண்கின்றேன். பன்முக வரவுசெலவுத் திட்ட நிதியினை எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் பயன்படுத்தாத அளவில் பயன்படுத்தியது மட்டுமன்றி தனது பேச்சாற்றலால் அமைச்சு நிதியில் இருந்தும், மற்றைய தொகுதி நிதியில் இருந்தும் தன் தொகுதியின் மூலை முடுக்கெல்லாம் மின் விளக்குகளால், அலுவலகங்களால் என அலங்கரித்த பெருமை எங்கள் பாராளுமன்ற உறுப்பினர் கா.பொ. இரத்தினம் அவர்கட்கே உரித்தாகும்.

கடந்த செப்டெம்பர் 2010 இல் அவரோடு இறுதியாக உறவாட திருவருள் கைகூடியமையை எண்ணி அகமகிழ்கின்றேன். பலவற்றையெல்லாம் நாம் பகிர்ந்து கொண்டாலும் 'ஆயிரக் கணக்காக என்னிடமிருந்த நூல்களெல்லாம் சிதறுண்டு விட்டனவே' என்றும் 'வேலணை வங்களாவடியில் ஊர்காவற்றுறை மக்கள் அனைவரும் பயன்கொள்ளக் கூடியதாக நூலகம் ஒன்று அமைய வேண்டும் அது தான் என்னுடைய சிந்தனையாக இருக்கின்றது' என எடுத்தியம்பினார். அவரது எண்ணம் ஈடேற திருவருள் நிச்சயம் கைகூடும்.

அவரது ஆத்மா சாந்தியடைய அவர் நேசித்த தமிழ் உலகம் பிரார்த்திக்கட்டும்.

*- தா.யோகநாதன்*

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஐ.நா. சபைக்கு அனுப்பிய ஆவணம்!

கேணல் ரமேஸ் அவர்களின் இறுதித் தொடர்பு சம்பந்தமான அவரது மனைவியின் வாக்குமூலமும், வெள்ளைக் கொடியுடன் சென்ற திரு நடேசன் அவர்களின் இறுதிக் கணம் தொடர்பான அவரது மகனின் வாக்குமூலமும், மாவீரர் துயிலுமில்லங்களின் அழிப்பும் இவ் ஆவணத்தில் அடங்கும்.

சிறிலங்காவில் யுத்தக் குற்றங்கள் நடைபெற்றதா என ஐ.நா. ஆலோசனைக் குழுவிற்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சகல விபரங்களும் அடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட ஒரு ஆவணத்தை அனுப்பியுள்ளது. அந்த ஆவணத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட படுகொலைகளின் விபரங்கள் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. 2009ம் ஆண்டு மே மாதம் முடிவடைந்த யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் 60,000 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனை வழங்குவதற்காக 'செயலாளர் நாயகத்தின் சிறிலங்கா தொடர்பான ஆலோசனைக் குழு' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ள இந்தக் குழு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்களினால் நியமிக்கப்பட்டது.

வெள்ளைக் கொடியுடன் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.நடேசன் அவர்களும், சமாதானச் செயலகப் பொறுப்பாளர் திரு. புலித்தேவன் அவர்களும் சிறிலங்கா இராணுவத்திடம் சரணடையச் சென்றபோது இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.நடேசனுடைய மகன் வழங்கிய வாக்குமூலமும், கேணல் ரமேஸ் அவர்களின் இறுதிக்கட்ட தொடர்புகள் பற்றி அவருடைய மனைவி வழங்கிய வாக்குமூலமும் இந்த ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மாவீரர் துயிலுமில்லங்களின் அழிப்பும் இவ் ஆவணத்தில் அடங்கும்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் ஐ.நா. குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ள இந்த ஆவணத்தில் சிறிலங்கா அரசாங்கம் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரிந்த இனப்படுகொலையுடன் சம்பந்தப்பட்ட சகல விதமான குற்றங்களும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. நடைபெற்ற யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்ற கொடூரமான சம்பவங்களை சிறிலங்காவின் அரசியல் சரித்திரத்துடன் இணைத்துப் பார்க்குமாறும் ஐ.நா. குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது. சிறிலங்கா இராணுவம் 99 வீதமான சிங்களவர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள விடயமும் பாதிக்கப்பட்ட அத்தனை மக்களும் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் விபரமும் இந்த ஆவணத்தின் மூலம் ஐ.நா. குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'வன்னியில் நடைபெற்ற கொடுமைகள் யாவும் கடந்த 30 ஆண்டுகளாக சிறிலங்கா அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்டு வந்த இனஅழிப்பு நடவடிக்கைகளின் தொடர்ச்சியே' எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இனப்படுகொலை, யுத்தக் குற்றங்கள், மானிடத்திற்கு எதிரான குற்றங்களுக்கான அமைச்சு

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்
தொடர்புகளுக்கு: அமைச்சர்
டிலக்ஷன் மொறிஸ் 0044 7940 020 758

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from **concept to design**

# இது காலத்தின் குரல்

வரும் ஜனவரி மாதமளவில் கொழும்பில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. இம்மாநாட்டை நடத்த முன்வந்திருக்கும் எழுத்தாளர் ஒருவர் கூட தமிழ் தேசியத்தையோ அல்லது அதன் இறைமையையோ ஏற்றுக்கொள்ளாதவர்கள். அப்படி ஏற்றுக் கொண்ட எவரும் இத்தகைய மாநாட்டில் பங்குபெற்றப் போவதில்லை. இம்மாநாடு எதற்கு நடத்தப்படுகிறது என்பது தெள்ளத் தெளிவானது. சிங்களம் தன் கோர முகத்தை மறைத்தவாறு, இரத்தக்கறை படிந்த கரங்களை ஒழித்தவாறு தமிழர்களுக்குத் தான் உரிமைகளை வழங்கியுள்ளேன் என்று வெளியில் வேஷம் போடுவதற்காக சில நக்குண்டவர்களை உசுப்பேத்தி விட்டிருக்கின்றது. அவர்கள் தமிழ் பேசுபவர்களாக இருப்பதுதான் என் கோபம்.

இம்மாநாட்டில் அரசியல் பேசக்கூடாது என்கின்றனர் சில நக்குண்டவர்கள். அரசியல் பேசக்கூடாது என்பதே ஓர் அரசியல் என்று இந்த மரமண்டைகளுக்கு ஏன் புரியவில்லை? மரமண்டைகளாக இருப்பதுதான் காரணமோ அல்லது நக்குண்டதால் நாவிழந்து விட்டார்களோ?

இப்பொழுது பேசப்பட வேண்டிய அடிப்படை அரசியல் என்ன? தமிழர் தம் நிலத்தில் தாம் வாழ வேண்டும். தமிழர் நிலம் மீதான சிங்களக் குடியேற்றம், சிங்கள கலாசார பரம்பல் நிறுத்தப்பட வேண்டும். தமிழர்களுக்கான உரிமை வழங்கப்பட வேண்டும். இவைதான் அடிப்படை அரசியல். அரசியல் பேசக்கூடாது என்பதினூடாக யாருடைய வாய் பொத்தப்படுகின்றது ஒடுக்கப்படுகின்ற மக்களின் வாய்தான்.

இம்மாநாட்டை நடாத்துகின்ற எழுத்தாளர்களின் இலக்கிய நோக்கம் யாது? 'கலை இலக்கியம் யாவும் மக்களுக்காகவே' யார் அந்த மக்கள்? மேட்டுக்கூடு மக்களா? அறுபதுகளிலிருந்து இலக்கியத்தில் சோசலிச யதார்தவாதம் என்ற கோட்பாட்டை உயர்த்திப் பிடிக்கும் இந்த முற்போக்கு முகாமில் உள்ளோர்க்கு மக்கள் என்பவர் யார் என்று புரிதல் கடினமானது அல்ல. அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம் என்பதுதான் கொமியூசனத்தின் கோஷம். ஆனாலும் ஏற்கனவே இக்கொமியூனிஸ்ற்றுக்கள் மக்கள் என்று யாரை கருதுகிறார்கள்?

இம்மாநாட்டை நடாத்துவோரிடமும் அவர்களுக்கு முன்பு கொடுப்போரிடமும் சில கேள்விகள். உங்களுக்கு வெட்கமில்லையா? மானம் ரோசம் என்று எதும் இல்லையா? ஒடுக்கப்பட்ட மக்களின் சிறு முனகல் கூட கேட்கவில்லையா?

அதிக காலம் போகவில்லை. மிகச் சமீபத்தில்தான் பல்லாயிரக்கணக்கில் பொதுமக்களை இழந்தோம். அது உலகின் மிகக் கொடூரமான இனப்படுகொலை. அந்த இனத்திலிருந்து இப்பொழுது

நீங்கள் எழுந்து வந்திருக்கிறீர்கள் மாநாடு நடத்த. அக்குருதிச் சேற்றின் மீதும், புதைகுழிகளின் மேல் நின்றும் மாநாட்டுப் பந்தல் கட்டுகிறீர்கள். சிறு கூச்சமாவது உங்களுக்கு வரவில்லையா? எழுத்தாளரை காலத்தின் குரல், மனச்சாட்சியின் குரல் என்றெல்லாம் சில அறிவிலிகள் சொல்லக் கேட்டிருக்கிறேன். நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள் நீங்கள் காலத்தின் குரலா? நீங்கள் மனச்சாட்சியின் குரலா?

இப்பொழுது நான் எழுதுவதுதான் காலத்தின் குரல். என்போன்ற ஏராளம் படைப்பாளிகளும், ஏராளம் மக்களும் கதறிச் சொல்கிறார்கள் காலத்தின் குரலை. இக்குரலை இப்பொழுது நீங்கள் அசட்டை செய்வீர்கள், ஏனென்றால் கெடுகுடி சொற்கேளாது. ஆனால் காலம் உங்களுக்கு பதிலளிக்க காத்திருக்கிறது. உங்கள் எழுத்துக்கள் யாவும் போலியானவை. பொய்யானவை என்பதை காலம் கணக்கெடுத்துக் காட்டும். முன்னர் நீங்கள் உண்மையாக எழுதியிருந்தாலும் அதன் போலித்தன்மையை காலம் எடுத்துக்காட்டும்.

சின்னதொரு விஷயம் இதில் பதிகிறேன். பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் என் குரு. ஆசான். வழிகாட்டி. பல சந்தர்ப்பங்களில் தந்தையாய் நின்றவர். அவர் மகளுக்கு நான் தமிழ் கற்பித்த போது மிக அதிகமாக புழுகப்பட்டார். 'இது ஆருக்கும் நிகழாத ஒன்றா, என்னிடம் தமிழ் கற்றவன் என் மகளுக்கு தமிழ் கற்பிக்கிறான்' என்று குதூகலம் எய்தினார். அப்பேர்ப்பட்டவர் கருணாநிதி கூட்டிய செம்மொழி மாநாட்டிற்கு சென்றதன் மூலம் தன் அத்தனை மரியாதையையும் இழந்தார். அது பற்றி மேலும் கதையாட அஞ்சுகிறேன். ஏனெனில் அழுதுவிடுவேன்.

இம்மாநாட்டிலும் என் மரியாதைக்குரியவர்கள், என் மரியாதையைத்தான் விடுங்களேன், தமிழர் பலரின் மரியாதைக்குரியவர்கள் சிலர் பங்கேற்கிறார்கள். அவர்களையிட்டு என் கவலை சூழ்கிறது. மனச்சாட்சி உள்ள மானிடரே ஒரு கணம் நின்று நிதானித்து பாருங்கள். யாருக்காக பேனா தூக்கினீர்கள்? எவருக்காக வியர்வை சிந்தினீர்கள்? அந்த மக்களைக் கொன்றொழி?த்தவர்களுடன் கும்மாளமிட்டு மாநாடு நடாத்தப் போகின்றீர்களா? இம்மாநாட்டுக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று தயவுசெய்து சொல்லாதீர்கள். யாருடைய பணத்தில் இது நடக்கின்றது? எவருடைய இடத்தில் இது நிகழ்கின்றது? இதனால் பயன் அடையப் போவபவர் யார்?

## இரவி அருணாசலம்

### எழுதுவது என்னவெனில்

காலத்தின் குரலாய் இது ஒலிப்பதனால் காலத்தைச் சற்று பின்னகர்த்திப் பார்க்கிறேன். 1982ம் ஆண்டின் இறுதிப் பகுதி, தேசிய இனப்பிரச்சினை கூர்மையடைந்த காலமாயினும் இவ்வாறு ஓர் அனர்த்தம் இனப்படுகொலை நிகழாத காலம். இன்னும் சொன்னால் 1983 யூலை இனவன்முறைக்கு முற்பட்ட காலம். ஒன்பது அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து சிங்கள அமைப்பின் சாகித்ய வெண்கல பரிசுகளை நிராகரிப்பது தொடர்பான அறிக்கையை வெளியிட்டது.

தேசிய கலை இலக்கிய பேரவை, யாழ் நாடக அரங்கக் கல்லூரி, அளவெட்டி ஞாயிறு படைப்பாளிகள் வட்டம், அலை இலக்கிய வட்டம், புதுசுகள், வேகம் சஞ்சிகைக் குழு, இளவாலை நாடக மன்றம், புங்குடுதீவு இலக்கிய வட்டம், யாழ் சமூக விஞ்ஞான கல்வி வட்டம் ஆகிய ஒன்பது அமைப்புக்களே அவை.

இக்கூட்டமைப்பு விட்ட அறிக்கை தமிழ் பேசும் மக்கள் மீதான சிங்கள அரச பயங்கரவாதம் குறித்தும், இன வன்முறை கலாச்சார சீரழிவு குறித்தும் உரத்த குரலில் பதிவு செய்து இதற்காக அடையாள எதிர்ப்பாக இலங்கை அரசின் சாகித்ய மண்டல பரிசுகளை நிராகரிக்குமாறு கோரியிருந்தது. அதாவது அக்கால கட்டத்தில் விருது பெறப்போகும் தமிழ் எழுத்தாளர்களை நோக்கியே வேண்டுகோள் விடப்பட்டது. இது நிகழ்ந்து 28 வருடங்கள் ஆகிவிட்டன.

அவ்வாறிருக்கையில் தமிழ்க்கலைஞர்களான மு.நித்தியானந்தன், நிர்மலா ஆகியோரின் சிங்கள அரசின் கைதையும் குறித்து கண்டித்து அதற்காகவும் பரிசை நிராகரிக்குமாறு வேண்டியிருந்தது. இப்பொழுது இவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது ஒரு முரண்நகை. என்றாலும் இவ்வறிக்கையில் கையெழுத்திட்ட ஒரு சிலரும் ஒரு அமைப்பும் (தேசிய கலை இலக்கிய பேரவை) இம் மாநாட்டை நிகழ்த்த முண்டுகொடுப்பது இன்னொரு கால முரண்நகை.

எது எவ்வாறோ சகல தமிழ் எழுத்தாளரையும் நாம் வேண்டுவது இதுதான். இது காலத்தின் குரல். கவனத்தில் எடுங்கள்.

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*





திருப்பிறப்பு (கிறிஸ்மஸ்)

ஏசுநாதர் பிறந்த நாளான டிசெம்பர் 25ல் கொண்டாடப்படும் கிறிஸ்மஸ்தான் உலகின் பண்டிகைகளிலேயே தலைசிறந்த பண்டிகை எங்களுக்காக இன்னல்களை அனுபவித்து எங்கள் பாவங்களின் மன்னிப்பிற்காக தேவகுமாரன் மனித உருவில் வந்தார் எனக் கோடனு கோடி மக்கள் நம்பும் தேவகுமரனின் பிறந்த நாளை நத்தார் என்றழைப்பதிலும் பார்க்க் திருப்பிறப்பு என்று அழைப்பதே சாலப் பொருந்தும். திருவுக்கு பல அர்த்தங்கள் சொல்லலாம். திருச்சபை, திருக்காட்சி, திருப்புகழ் என்பதுபோல் தெய்வீகத்தை குறிக்கும் சொல்லாக இங்கு அது பயன்படுகின்றது.

திருப்பிறப்பு எப்போதிருந்து கொண்டாட்ப்படுகிறது! அந்த வரலாறு பல சுவையான தகவல்கள் தரவல்லது. பூமியின் வட கோளத்தில் வாழ்பவர்களே இப்படி ஒரு பண்டிகையை ஆரம்பித்தார்கள். 4,000 ஆண்டுகள் வரையிலான வரலாறு இதற்கு உண்டு. யூன் 21 ல் இருந்து கதிரவன் தெற்கு நோக்கி நகருகிறான். அதனால் குறைந்து கொண்டே போகும் பகல் நேரம் டிசெம்பர் 21ல் அதன் ஆகக் குறுகிய நிலையை அடைந்து பின் விரிந்து கொண்டு போகும். இதை அவதானித்த ஐரோப்பியர்கள் குறிப்பாக இஸ்கண்டிநேவியர் (Scandinavians) பகல் நீள ஆரம்பிக்கும் அம்மாதத்தின் 21ம் திகதியை ஒட்டிய வாரத்தை ஒரு விழாவாகக் கொண்டாட ஆரம்பித்தார்கள். எந்தப் பெயரால் இது அழைக்கப் பட்டாலும் கதிரவன் புதிய உத்வேகம் பெறும் தன்மையை மையமாகக் கொண்ட விழாவாகவே இது கருதப் பட்டது. இந்தியா பூமியின் நடுக் கோட்டிற்கு அண்மையாக உள்ளதால் பெரிதாக இந்த மாற்றம் உணரப் படுவதில்லை. ஆனாலும் அவனின் வடக்கு நோக்கிய பயணத்தை அவர்களும் உத்தராணய புண்ணிய காலம் என்று சிறப்பிக்கின்றார்கள். இந்தப் பண்டிகை மற்றைய எல்லாப் பண்டிகைகளையும் விட முக்கியத்துவம் பெற்றதற்கு வேறு காரணமும் உண்டு. விவசாயம் முக்கிய பங்கு வகித்த அந்நாளில், குறுகிய நாட்களாலும் குளிராலும் பயிர்ச் செய்கை இன்றி குறைவான வேலைப் பளுவே மக்களுக்கு இந்தக் காலத்தில் இருந்தது. அதனால் அவர்களுக்கு கூடிய ஓய்வு நேரம் இருந்தது. நாள் நீளப் போகின்றது என்பதால் அவர்கள் உள்ளங்களில் எழும் மகிழ்ச்சியும் இவ்விழாவிற்கான இன்னுமொரு உந்து சக்தியாக இருந்தது. பகற் காலம் நீள்வதை அடிப்படையாக வைத்து ஆரம்பமான ஒரு பண்டிகை அதே வாரத்தில் வரும் கர்த்தரின் பிறப்புடன் இணைந்து திருப்பிறப்பாக அதாவது கிறிஸ்மஸ் ஆக, பண்டிகைகளின் சிகரமாக மாறியது.

சில மரபுவழி மத நம்பிக்கையாளர்கள் ஜனவரி 7ம் திகதியைத் கிறிஸ்மஸ் ஆகக் கொண்டாடுகிறார்கள். அவர்களும் டிசெம்பர் 25 தைத்தான் கர்த்தர் பிறந்த நாளாகக் ஏற்றுக் கொண்டாலும் அவர்களின் நாட்காட்டியின்படி ஜனவரி ஏழு தான் அவர்களின் டிசெம்பர் 25. 1582 ல் போப்பாண்டவர் 13வது கிரகவுறி பூமி கதிரவனைச் சுற்றிவர முந்நூற்றி அறபத்தைந்தே கால் நாட்களிலும் பார்க்க 11 நிமிடங்கள் குறைகிறது என்பதை தன் துல்லிய கணிப்பினால் கண்டறிந்து ஏற்படுத்திய இன்றைய நாட்காட்டியை ஏற்க மறுத்து பழைய யூலியன் நாட்காட்டியை வைத்திருப்பதன் விளைவுதான் இந்தத் தவறான நாளும் கோளாறும். இந்த 11 மணித்துளிகள் 400 ஆண்டுகளில் 3 நாட்களும் 8 நிமிடங்களும் ஆகத் திரண்டுவிடும் என்பதை கணிப்பாளர்கள் மறக்கவில்லை நாமும் மறந்துவிடக் கூடாது.

தென் கோளத்திலோ நிலை தலைகீழ். கூடிய பகல் அன்றுதான் அவர்களுக்கு. கோடை கால உச்சத்தில் அமைவதால் இதைக் கோடை விழாவாகக் கொண்டாட முடியும். ஓய்வு நேரங்களை திட்டமிட்டு ஒழுங்கு செய்யக்கூடிய இன்றைய சூழலில் கோடையில் கொண்டாட வாய்ப்புப் பெற்ற தென் கோளத்தவர்களே கூடுதல் பயன் பெறுகிறார்கள். கதிரவனின் வடக்கு தெற்கு நோக்கிய பயணத்தின் அடிப்படையில்தான் பருவங்கள் அமைகின்றன. அவனின் வடக்கு நோக்கிய பயண ஆரம்பத்திற்கு முன்பாக வடகோள வெப்ப மண்டல நாடுகளில் நல்ல மழை பொழிவதால் பயிர் சாகுபடி செய்யப்பட்டு விளைச்சல் பெற ஆரம்பிக்கிறார்கள். கதிரவனுக்கு நன்றி சொல்லும் தைப்பொங்கற் பண்டிகையும் வட பயணம் ஆரம்பித்த 30 நாட்களுள் நிகழ்கிறது.




NAG & Co.
SOLICITORS

✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Email : nagandco@yahoo.co.uk
Unit 3 Holles House, Myattsfield south, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. 34 years, 5'2", Graduated, British Citizen, looking for a suitable bride. Ref: 2396

2. 33 வயது, 5'8", Engineer, இலங்கையில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த துணையை இலங்கையில் தேடுகின்றனர். Ref: 2371

3. 32 years, 5'7", A/L finished, UK PR, looking for a suitable bride. Ref: 1526

4. 25 years, 5'6", Student visa in UK, looking for a matching bride. Ref: 1703

5. 40 வயது, 5'7", A/L finished, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2578

6. 31 years, 5'7", A/L finished, UK PR, looking for a matching bride. Ref: 686

7. 26 years, 5'10", Finansial Sector, British Citizen, looking for a educated bride. Ref: 1825

8. 30 வயது 5'9", Self Employed, Norway இல் வசிக்கும் மணமகன் ஐரோப்பிய நாட்டு குடியுரிமை பெற்ற மணமகளைத் தேடுகின்றார். Ref: 2249

9. 31 years, 5'8", Engineer, Student visa in UK, looking for a educated bride with citizenship. Ref: 2440

10. 31 வயது, 5'7", Self Employed, செவ்வாய் குற்றம் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 2395

11. 25 years, 6", fast food chain assistant manager, UK PR, looking for a suitable bride. Ref: 2327

12. 27 years, 5'7", Engineer, PSW visa in UK, seeking a suitable bride. Ref: 1013

13. 33 வயது 5'2" கடந்த 13 வருடங்களாக பிரித்தானியாவில் வசிக்கும் ஒரு Private Company இல் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 2303

14. Age 29, tall 5.4 British citizen accountant looking for a suitable bride Ref: 1130

15. Age 36, tall 5.4 British citizen, Engineer at present doing a Business looking for a suitable Bride Ref: 2149

16. Age 30, 5'7", Doctor, Danish Citizen, looking for a well educated bride. Ref: 1729.

17. வயது 26, 5'11", Personal Banker, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் நன்கு படித்த தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1807

18. Age 36, 6", MSc finished, British Citizen, well employed, looking for a matching bride. Ref:1191.

19. வயது 37, 5'9", A/L finished, PR in France, தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 972.

20. Age 27, 5'9", BSc in Computer Engineer, Student visa in UK, looking for a matching bride. Ref: 1856.

21. வயது 31, 5'6", A/L finished, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1837.

22. வயது 31, 5'6", A/L finished, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1784.

23. வயது 30, 6", BSc Graduate, UK PR, இலங்கையில் வசிக்கும் தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றார். Ref: 2012

24. Age 29, 5'9", MSc in IT, Student Visa in UK, looking for a matching bride with UK PR or citizenship. Ref: 1919

25. 37 years, 5'10", working in a retail profession, British Citizen, looking for a matching bride. Horoscopes should be matched. Ref: 1728

26. 31 years, 5'7", Doctor, British Citizen, looking for a well educated bride. Ref: 1680

27. வயது 32, 5'2", Student visa இல் பிரித்தானியாவில் வசிக்கும், செவ்வாய் குற்றம் உடைய மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 636.

28. வயது 25, 6'0", துபாயில் வசிக்கும் மணமகனுக்கு ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1528

29. Age 25, 5'6", HND Business student, student visa in UK, looking for a matching bride with UK PR or Citizenship. Ref: 1703

30. வயது 31, 5'5", இலங்கையில் கல்விக் கோட்டத்தில் வேலை செய்யும் வாய் பேச முடியாத மணமகனுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1656

31. வயது 31, 5'7", பிரித்தானியாவில் நிரந்தர வதிவிடவுரை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 686

32. 24 years, 5'9", IT Student, student visa in UK, looking for a suitable bride. Ref: 1672

33. 35 years, 5'11", Uk PR, Self-Employed, seeking a matching bride. Ref: 1693

34. 37 years, 5'6", Computer Science Graduate, British Citizen, Divorced, looking for a suitable bride with UK citizenship. Ref: 1684

35. வயது 52, 5'7", widowed, இலங்கையில் வசிக்கும் மணமகன் சிறந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1699

36. Age 31, 5'7", working as Project Manager in a leading company in UK, British Citizen, seeking a suitable bride. Ref: 575.

37. வயது 28, 5'4", Medical sector, இந்திய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1565.

38. வயது 35 5'5", BA Graduate, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1480.

39. Age 35 5'7", self employed, French Citizen, seeking a suitable bride. Ref: 1444.

40. வயது 40, 5'7", Accountant, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1457.

41. துபாயில் வசிக்கும் வயது 28, 5'5", மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1602

42. வயது 32, 5' 7", UK PR, looking for a suitable bride. Ref: 1526.

43. வயது 30, 5'6", Accountant, அவுஸ்திரேலியன் PR பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார் Ref: 1413.

44. Age 30, height 5.5" in Sri Lanka, a farmer looking for a suitable bride Ref: 1323

45. Age 28, height 6.0" Engineer working in UK in a company with the work permit visa looking for a suitable bride Ref: 1316

## மணமகன் தேவை

1. 42 வயது, 5'2", ஆசிரியையாக இலங்கையில் பணிபுரியும் பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2622

2. 26 வயது, 5'3", நோர்வேயில் வசிக்கும் செவ்வாய் குற்றம் உள்ள பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2749

3. 25 வயது, 5'6", BA finished, British Citizen, நன்கு படித்த தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 2495

4. 31 years, 5'4", Architect & self employed, German Citizen, living in UK, looking for a well educated groom. Ref: 589

5. 29 years, 5'2", Accountant Student, French Citizen, looking for a educated groom. Ref: 881

6. 25 வயது, 5'6", கொழும்பில் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 2273

7. 28 வயது, 5'2", இலங்கையில் ஆசிரியராக பணிபுரியும் பெண்ணுக்கு பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். Ref: 2392

8. 30 வயது, 5'6", A/L finished, கணவனை இழந்து ஒரு குழந்தையுடன் இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையை எதிர்பார்க்கின்றனர். Ref: 2496

9. 50 வயது, 5'6", Finished Hotel Management in Colombo, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 804

10. 49 வயது, 5'6", Finished Hotel Management, Canadian Citizen, பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 805

11. 41 years, 5'4", Doctor, Living in Sri Lanka, looking for a educated groom anywhere. Ref: 1514

12. 43 years, 5'1", A/L finished, Living in UK, looking for a suitable groom with UK PR or Citizenship. Ref 2119

13. Age 29, 5'5", working as a Financial Analyst, British Citizen, looking for a well educated groom. Ref: 2175.

14. Age 27, 5'6", Investment Banker, British Citizen, looking for a educated and professional groom. Ref: 1722.

15. Age 28, 5'5", Doctor, British Citizen, seeking a well educated groom. Ref: 1780.

16. வயது 24, 5'3", BSc Degree holder in Mathematics & statistic, லண்டனில் வசிக்கும் செவ்வாய் குற்றம் உடைய பெண் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றார். Ref: 1243.

17. வயது 37, 5'3", MSc in IT, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 895.

18. வயது 28, 5'5", Financial Officer ஆக இலங்கையில் வேலை செய்யும் மணப்பெண்ணுக்கு ஐரோப்பாவில் தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2027

19. வயது 29, 5'7", MSc in Financial Mathematics, இலங்கையில் Bank Of ceylon இல் வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1871

20. வயது 33, 5'3", A/L finished, இலங்கையில் வசிக்கும் விவாகரத்து பெற்ற மணமகளுக்குத் தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1782

21. வயது 36, 5", A/L finished, இலங்கையில் தினக்குரல் பத்திரிகையில் வேலை செய்யும் பெண்ணுக்கு பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற துணையைத் தேடுகின்றனர். Ref: 1942

22. வயது 46, 5'6", பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற, குழந்தையுடன் வசிக்கும் விவாகரத்து பெற்ற பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1845

23. Age 32, 5'6", Teacher, French Citizen, looking for a matching groom. Ref: 1954.

24. 21 years, 5'3", Information technology in IT, living in India, seeking a matching groom in UK with citizenship. Ref: 1686

25. வயது 30, 5'4", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1551

26. வயது 23, 5'3", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு UK Citizen பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1697

27. 25 years, 5'1", BA Graduate, PR in UK, seeking a suitable groom. Ref: 1580

28. வயது 23, 5'6", இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1696

29. வயது 29, 5'4", Doctor, இலங்கையில் வசிக்கும் மணமகள் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1695

30. 41 years, 5'5", MSc in computing, British Citizen, looking for a matching groom. Ref: 1678

31. Age 38, 5'7", working in financial sector, Canadian Citizen, looking for a matching groom. Ref: 1595.

32. வயது 23, 5'2", Medical Student, British Citizen, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1408.

33. Age 25, 5'2", Pharmasist, British Citizen, looking for a educated groom. Ref: 1551.

34. வயது 28, 5'4", BSc Degree Holder, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் நன்கு படித்த தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1596

35. Age 25, 5'2", Computer Engineer, Danish Citizen, looking for a educated groom. Ref: 1527.

36. வயது 25, 5'0", தற்பொழுது France இல் வசிக்கும் பெண்ணுக்கு, ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1475.

37. வயது 27, 5'2", இலங்கையில் Administrative Assistant ஆக வேலை செய்து கொண்டிருக்கும் மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1459.

38. வயது 25, 5'0", இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1525.

39. Age 43, 5'2", working in a University in Sri Lanka, looking for a suitable grrom. Ref: 1246.

40. வயது 27, 5'1", graduate degree holder, இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1433.

41. Age 24, 5'9", BA finished in Jaffna univercity, looking for a suitable groom. Ref: 1599

42. இலங்கையில் வசிக்கும் வயது 30, 5'5", Nurse, மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1598.

43. Age 37, height 5.5" Doctor working in a Jaffna Hospital looking for a suitable Groom Ref: 1063

44. Age 38, height 5.6" Canadian Citizen, Engineer working in a company looking for a suitable Groom Ref: 1322

45. Age 35, height 5.6" French Citizen, in UK Divorcy working as a sales assistant looking for a suitable Groom Ref: 610

46. Age 28, height 5.0" in India looking for a suitable Groom Ref:1347

47. Age 27, height 5.2" British Citizen Accountant working in a company looking for a suitable Groom Ref:1348

48. Age 32 height 5.3" Sri Lanka, finished diploma in Psychology looking for a suitable Groom Ref:1391

49. Age 28, height 5.7" in UK worked as a English teacher in Sri Lanka look ing for a suitable Groom Ref:1406

50. Age 30, height 5.7" British citizen, Graduate and working as a Biochemist looking for a suitable Groom Ref:627

51. Age 22, height 5.2" British citizen, Graduate looking for a suitable groom Ref: 1408

52. 28 வயது, 5'0", மணமகள் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1222

53. 41 years, 5'5", finished MBA in UK, seeks an educated groom. Ref: 1230.

54. 39 வயது, 5'4", Doctor in UK, நன்கு படித்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1232.

55. 43 years, 5'2", working at univercity in sri Lanka, is looking for a groom with Europe Citizenship. Ref: 1246.

56. 46 வயது, 5'2", British Citizen, divorcee, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1210

57. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 28 வயது, 5'2" உயரம், BSC Degree in Computer Science & Business Management படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர் Ref: 1160

58. இலண்டனில் படித்துக் கொண்டிருக்கும் 22 வயது, 5" உயரம் உள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1040.

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# ஈழத் தமிழரின் இறுதி மரண சாசனம்

"எங்களை ஒரு விலங்கினமாகவாவது கருத்தில் கொண்டு, மிருகவதை சட்டத்தின் கீழாவது இந்த பாவிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி உலக நாடுகளிடம் இறைஞ்சுகிறோம்."











தமிழினக் கொலைஞர் கருநாய்நிதிக்கு இது சமர்ப்பணம்

## வெதும்பிய பிஞ்சுகள்

பதினாறு வயதினிலே
பருவத்தின் விளிம்புகளில்
மலரொன்றை மனம் நினைத்து
பல மாதம் துடிதுடித்து
கனவினிலே கண்டு
காதலிலே துவண்டு
எண்ணங்கள் பலவற்றில்
இரவிரவாய் விழித்திருந்து
நல்ல நித்திரை போல்
நாடகமும் நடத்தி
கூடப் படுப்பதாய்
குடும்பமும் நடத்தி
காலையில் எழுந்ததும்
கண்டிப்பாய் வெக்கி
தனிமை வாய்த்ததும்
திரும்பவும் நினைத்து
உடல் கொதிக்க
ஒவ்வொன்றாய் எண்ணி
பள்ளியிலும் படிப்பு
பாதியும் ஏறாமல்
பெற்றோர் சொல்லையும்
பெரிதாய் மதிக்காமல்
நினைப்பதே நிம்மதிபோல்
நண்பரையும் நாடாமல்
காலை எழுந்தாலும்
கழிவுக்குப் போனாலும்
இதயம் இனிக்க
இதழை நினைத்து
குளிக்கப் போனாலும்
நினைத்துவர மணியாகி
கடமைக்குச் சாப்பாடு
கடுகளவும் பசியின்றி
கண்டுவிட்டால் மலர்முகத்தை
கனநாளாய் நினைவினிலே
விழாக்களாய்ப் போனாலும்
விடியவிடியப் பின்னாலே
காலுக்கு ஓய்வென்றால்
அந்தமலர் அந்தமலர்தான்
இப்படியே நினைத்தலைந்து
இடையினிலே படிப்பறுந்து
நினைத்தமலர் கோபுரமாய்
நினைத்தவரோ நிற்கதியாய்!

- வ.கஜேவ்ர

## அப்பா சொன்னாரென

அப்பா சொன்னாரென
பள்ளிக்குச் சென்றேன்
தலை சீவினேன், சில
நண்பர்களைத் தவிர்த்தேன்,
சட்டை போட்டுக் கொண்டேன்,
பல் துலக்கினேன், வழிபட்டேன்,
கல்யாணம் கட்டிக் கொண்டேன்,
காத்திருக்கிறேன்
என் முறை வருமென்று.
என்முறை வந்தபோது
அப்பா சொல்லாமலேயே
ஒரு லட்சத்து எழுபத்தாறாயிரம்
கோடியை
ராசாவோடு சேர்ந்து ஆட்டையை
போட்டேன்.

- கனிமொழி




Lee High Road,
London SE12 8RU
tel: 020 8852 5234

email: lee@bairstoweves.co.uk
www.bairstoweves.co.uk
www.rightmove.co.uk

வீடுகள் வாங்க... விற்க... வாடகைக்கு பெற...

அழையுங்கள்.....Raj: 020 8852 5234

OPEN 7 DAYS A WEEK

Bairstow eves
Countrywide

# 2010 இல் தமிழ் சினிமா!



வருஷம் முடியபோகுது ஆளாளுக்கு விருது குடுக்க ஆரம்பிச்சிடுவானுக. இதோ என்னுடைய பங்குக்கு நானும் இவங்களுக்கெல்லாம் விருது கொடுக்க போறேன்

'அஞ்சா நெஞ்சன்' விருது - சக்தி சிதம்பரம் (பெருந்தலைகள் எல்லாம் கவுக்க பாக்குற, வரிசையா மண்ண கவ்விக்கிட்டு இருக்கிற தளபதி நடிச்ச காவலன் படத்த தைரியமா காசு கொடுத்து வாங்கி இப்ப படத்த ரிலீஸ் பண்ண போராடுற தைரியத்துக்காக )

'நினைத்ததை முடிப்பவன்' விருது - ரஜினிகாந்த் (ஐஸ்வர்யா ராயுடன் நடித்தே ஆக வேண்டும் என்ற தன் ஆசையை நிறைவேற்றி கொண்டதால் )

'வெள்ளிவிழா நாயகன்' விருது-இளையதளபதி டாக்டர் விஜய் (அவர் நடித்த ஜோஸ் ஆலுக்காஸ் விளம்பரம் நூற்றி அம்பது நாட்களை தாண்டி திரையரங்குகளில் தூக்கப்படாமல் ஓடிக்கொண்டிருப்பதால்)

'நான் உண்மையிலேயே ஏழைங்கோ' விருது'-கருணாநிதி (அவர் காட்டிய சொத்து கணக்கு விபரத்திற்காக )

'நானும் ரௌடிதான்' விருது ஜாக்குவார் தங்கம் (அஜித் ரஜினிக்கு எதிராக வாய்சவாடல் விட்டதால் )

'எவ்வளவு அடிச்சாலும் தாங்குவான்' விருது - விக்ரம் (கந்தசாமி , ராவணன் என்று அடி மேல் அடி வாங்கியும் பேட்டி குடுத்துக்கொண்டு திரிவதால்)

பெரும் காப்பி(ய) படங்கள் - ஜக்குபாய் (வசாபி) மற்றும் நந்தலாலா (சிகிஜிரோ )

*கொஞ்சம் சீரியஸ் விருதுகள்*

கண்டிப்பா சிறந்த நடிகன் அப்படின்னு இந்த வருசத்துல சொல்லணும்னா நந்தலாலாவில் வந்த அந்த சின்ன பையானத்தான் நான் சொல்லுவேன். மிகைபடுத்தபடாத நடிப்பை அவனிடம் இருந்த வாங்கிய மிஷ்கினை பாராட்டலாம்...

அதே மாதிரி சிறந்த இயக்குனர்னா அது என்னை பொறுத்தவரை களவாணி இயக்கிய சற்குணம்தான். நான் கொஞ்சம் கூட சலிப்படையாம இந்த வருடம் பார்த்த ஒரே ஒரு திரைபடத்தை அவர் இயக்கியதால் அவரை நான் சொல்லுவதே முறை. இவரின் அடுத்த படத்தை ஆவலுடன் எதிர்பாக்கிறேன் சொதப்பாமல் இருந்தால் சரி.

சிறந்த இசை என்றாள் ஏ.ஆர். ரகுமான் அவர்கள்தான் வழக்கம் போல இந்த வருடமும் இசை அமைத்த எல்லா பாடல்களும் ஹிட். அப்ப அவரைதான சொல்ல வேண்டும் சிறந்த இசையமைப்பாளர் என்று.

சிறந்த காமெடி என்றால் அது பாஸ் என்கிற பாஸ்கரன் படத்துல சந்தானம் பண்ணுனதுதான்.

இந்த வருடம் பதிவுலகில் நான் அதிகம் காண்டாகிய ஒரு விஷயம் சில அதிமேதாவிகள் எழுதும் சினிமா விமர்சனங்கள்தான் ...

சினிமா விமர்சனம் எழுதும் ஆசிரியர்களே , நீங்க காசு கொடுத்து பாக்குற சினிமாவ விமர்சனம் பண்ண உங்களுக்கு முழு உரிமையும் இருக்கு ஆனா சில பேர் விமர்சனம் எழுதுகிறேன் என்று படத்தை அதிகமாகவே டெமேஜ் பண்ணி எழுதுகிறார்களோ என்று தோன்றுகிறது. ஒரு படத்தை விமர்சனம் பண்ணும் போது படத்துல இருக்கிற குறைகளை சொல்லலாம் தப்பே இல்ல ஆனால் இவனெல்லாம் ஒரு இயக்குனரா ? நீயெல்லாம் எதுக்கு நடிக்கிற என்று வரம்பு மீறி எழுதுவதெல்லாம் ரொம்ப ஓவர். சிறந்த விமர்சனம் அந்த படங்களின் நிறை குறைகளை அலசுவதுதான் என்று நான் எண்ணுகிறேன். அதை விட்டு விட்டு உங்கள் அதிமேதாவிதனத்தை அதில் காட்டுவதை தவிர்க்கலாமே. ஒரு பேச்சுக்கு நீங்க எழுதிக்கிட்டு இருக்கிற ஆக்கங்களை யாராவது இப்படி ரொம்ப மோசமா விமர்சனம் செய்தால் உங்களுக்கு எவ்வளவு கோபம் வரும்? சந்தானம் பாணியில சொல்லணும்னா 'ஓசியில அஞ்சு பைசா செலவில்லாம கட்டுரை எழுதுர நமக்கே இவ்வளவு அடப்பு இருந்ததுனா , கோடி கோடியா செலவு பண்ணி படம் எடுக்கிற அவனுகளுக்கு எவ்வளவு இருக்கும்'. நான் எல்லா படங்களையும் நல்லாவிதமா எழுத வேண்டும் என்றெல்லாம் சொல்லவில்லை .. படம் பற்றிய உண்மையை அப்படியே எழுதலாம் தப்பில்லை ஆனால் நாலு பேரு அதிகமா உங்க பதிவை படிக்க வேண்டும் என்பதற்காக வரம்பு மீறி விமர்சனம் செய்வதை தவிர்க்கலாமே. (அதே சமயம் சினிமாவை தவறாக பயன்படுத்த நினைக்கும் சிலரை ஓட ஓட அடிக்கலாம் தப்பே இல்லை ...)

இந்த வருடம் சோகமயமான வருஷமா அமைந்தது நம்ம இளைய தளபதி ரசிகர்களுக்குதான், சுரா என்று ஒரே ஒரு படம்தான் தளபதிக்கு, அதுவும் மரண அடி வாங்கி விட்டது. அதுகூட பரவா இல்லை , அடுத்து அவர் எடுத்து முடித்து ஒரு படம் பல மாதங்களாய் ரிலீஸ் ஆக தியேட்டர் கிடைக்காமல் பெட்டியில் உறங்கி கொண்டு இருக்கிறது. அவர்ஹீ ரசிகர்கள் நிதிகள் எல்லாம் சேர்ந்து விஜய்க்கு எதிராக சதி பண்ணுகிறார்கள் என்று கலாநிதியையும் , உதயநிதியையும் குறை சொல்லி கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் இதே நிதிகளை பயன்படுத்தி அஜித் படங்களுக்கு எதிராக விஜையின் அப்பா சதி பண்ணி கொண்டிருக்கிறார் என்று அவர் ரசிகர்கள் கூறியபோது தளபதியின் ரசிகர்கள் ஒரு பாடலை பாடி காட்டுவார்கள் ... இன்று அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கும் இந்த குற்றசாட்டுக்கும் அதே பாடல்தான் பதில்...

*'யாரோட உயர்வையும் யாராலும்*

*தடுக்க முடியாதுடா கெடுக்க முடியாதுடா'*

என்ன பண்ண விஜய் ...? வினை விதைத்தவன் தான் வினை அறுப்பாரு என்று பெரியவங்க சும்மாவா சொல்லி இருக்காங்க.

ஆனால் அஜித் ரசிகர்களுக்கும் அதே சோகமயமான வருடம் தான். தல படம் என ரசிகர்களால் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட படம் சரண் இயக்கம் ஒரு பக்கம் சரண் பரத்வாஜ் இசை மற்றும் பஞ்ச் வசனம் அல்டிமேட் ஸ்டார் போன்ற ஓவர் பில்ட் அப் இல்லாமல் வரும் படம் என பல பிளஸ் இருந்தும் படம் பெரும் மைனஸ் ஆனதிற்கு காரணம் ரசிகன் என்பவனுக்கு புரியாத திரை கதை படம் முழுவதும் பில்லா பாகம் இரண்டோ என நினைக்க வைக்கும் கோட் ,கண்ணாடி என படம் முழுவதும் கேட்வாக் செய்தார் அஜித் என கூட சொல்லலாம்.

*- தமிழ் உதயம்*

# Tangled

## திரை விமர்சனம்



இளவரசி Rapunzel, அவள் கூந்தலில் பொதிந்திருக்கும் ஆபூர்வ சக்தியின் காரணமாக குழந்தையாக இருக்கும்போதே Gothel எனும் சூன்யக்காரியினால் கடத்தி செல்லப்படுகிறாள். நித்திய இளமையை எப்போதும் வேண்டும் கோத்தல், அதனை இளவரசி ரப்புன்ஸலின் கூந்தலில் பொதிந்திருக்கும் சக்தியின் வழியாகவே தான் பெற்றுக் கொள்ள முடியும் என்பதால் அவளை காட்டினுள் ரகசியமான ஒரிடத்தில் அமைந்திருக்கும் உயரமான கோபுரமொன்றினுள் வெளியுலகிற்கு தெரியாது வளர்த்து வருகிறாள்.

அந்த உயர்ந்த கோபுரத்திலிருந்து இளவரசி ரப்புன்ஸல் வெளியே செல்லாத வண்ணம், வெளியுலகை குறித்த அச்சம் தரும் தகவல்களை அவளிற்கு தொடர்ந்து கூறிவருகிறாள் கோத்தல். குழந்தையாக கோத்தல் கவர்ந்து வந்த ரப்புன்ஸல் வாலைக்குமரியாக வளர்ந்து நிற்கிறாள். வெளியுலகின் மீதான ஆர்வம் அவளிற்குள் வளர்ந்து நிற்கிறது.

தனது பிறந்த தினத்தன்று மட்டும் ஆகாயத்தில் பறந்து செல்லும் வண்ண வெளிச்சக்கூடுகளை பற்றிய வியப்பும் அவற்றை ஒரு முறையேனும் நேரில் சென்று பார்த்திட வேண்டும் எனும் ஆசையும் ரப்புன்ஸல் மனதில் பூக்கிறது. தன் ஆசையை தன் வளர்ப்புத் தாயான கோத்தலிடம் கூறுகிறாள் ரப்புன்ஸல், ஆனால் கோத்தலோ இளவரசியின் வேண்டுகோளை நிராகாரித்து விடுகிறாள். இந்நிலையில் ராஜகாவலர்களால் துரத்தி வரப்படும் திருடனான Flynn Rider, காவலர்களிடமிருந்து தப்புவதற்காக ரப்புன்ஸல் வாழ்ந்திருக்கும் உயரமான கோபுரத்தினுள் நுழைகிறான். ரைடரை சமயோசிதமாக மடக்கும் இளவரசி ரப்புன்ஸல் அவன் திருடி வந்த பொருளை மறைத்து வைத்து விடுகிறாள். ப்ளின் ரைடர் தன்னை வெளிச்சக்கூடுகள் பறக்கும் விழாவிற்கு அழைத்துச் சென்றால் அவன் திருடிய பொருளை அவனிடம் திருப்பி தந்து விடுவதாகவும் அவனிடம் ரப்புன்ஸல் வாக்கு தருகிறாள். வேறுவழிகள் அற்ற நிலையில் ரப்புன்ஸலை கோபுரத்தைவிட்டு வெளியே உலகை காட்ட அழைத்து செல்ல சம்மதிக்கிறான் ரைடர். இளவரசியின் கண்களின் வழியாக அவள் இதயக்கோபுரத்தில் தான் மெல்ல மெல்ல நுழைவதை ரைடர் உணர்ந்தான் இல்லை..

தேவதைக் கதைகளில் உள்ள மந்திரம் என்னெவெனில், அவைகளைக் கேட்டோ படித்தோ காலங்கள் பல கடந்து சென்றிருந்தாலும்கூட அவை மீண்டும் புதிதாய் சொல்லப்படும் விதத்தில் உங்களை அவை மீண்டும் தற்காலிக கணங்கள் சிலவற்றிலேனும் குழந்தைகள் ஆக்கிவிடுவதுதான். கிரிம் சகோதரர்களால் தொகுக்கப்பட்ட தேவதைக் கதைகளின் தொகுப்பில் இளவரசி ரப்புன்ஸலின் கதை இடம்பெற்றிருக்கிறது. அக்கதையில் பொருத்தமான மாற்றங்களை செய்து வால்ட் டிஸ்னி ஸ்டுடியோவின் ஐம்பதாவது அசைவூட்ட திரைப்படமாக வெளிவந்திருக்கும் Tangled திரைப்படமானது அதன் ஆரம்பம் முதல் நிறைவு வரை உங்களை குழந்தைகளாக்கி அழகு பார்க்கும் மந்திரத்தை தன்னுள் தாராளமாகக் கொண்டிருக்கிறது. Nathan Greno, Byron Howard ஆகிய இரு இயக்குனர்களின் திறமையும் படத்தில் அற்புதமாக வெளிவந்திருக்கிறது.

ஜப்பானிய இயக்குனர் மியாசகியின் படைப்புக்களுடன் போட்டி போடுவது என்பது டிஸ்னி ஸ்டுடியோவின் ரகசிய விருப்பமாக இருந்தே ஆகவேண்டும். அந்த ஆசையின் ஏக்க வெளிப்பாடாய் அசத்தி எடுக்கிறது திரைப்படம். சில திரைப்படங்கள் மட்டுமே அதன் ஒவ்வொரு கணத்தையும் ரசிகனிடம் சுவைக்க தரும் தாராள மனம் கொண்டவையாக இருக்கும் Tangled அவ்வகையான படங்களில் ஒன்று. இளவரசி ரப்புன்ஸலின் விழிகளிலும், கூந்தலிலும் மட்டுமல்லாது டிஸ்னியின் அரிய முத்துக்களில் ஒன்றான Tangled ல் முழுமையாக சிக்கிக் கொள்கிறான் ரசிகன்

*- கனவுக் காதலன்*



# சினிமா

## ஈசன்

### திரை விமர்சனம்



தமிழ் சினிமா ரசிகர்களின் செல்லப் பிள்ளை என்று கூட சொல்லலாம் சசிகுமாரை. தொடர்ந்து அவர் சம்பந்தப் பட்ட படங்களின் வெற்றி அவருக்கு தந்த மகுடம் அது. அவர் இயக்கும் இரண்டாவது படம் என்கிற போது பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது ஒன்றும் ஆச்சர்யமில்லை. அது தியேட்டர்களில் கூடியிருந்த கூட்டத்தை வைத்தே சொல்லிவிடலாம். இத்தனைக்கும் பெரிய நடிகர்களோ, சசிகுமாரோ நடிக்காத படம்.

கிராமம் சார்ந்த படங்களிலிருந்து விலகி நகரம் சார்ந்த கதைக்களனை தெரிந்தெடுத்திருக்கிறார்கள். ஆரம்ப காட்சியே சென்னையின் டிஸ்கோ பப்பிலிருந்து கிளம்பும் ஒரு பெண்ணை துரத்தி அவள் இறந்துபோவதில் ஆரம்பிக் கிறது. முழுக்க, முழுக்க, பப் கலாச்சாரம் பழகும் இளைஞ ர்களை சுற்றி நடக்கும் கதையாய் ஆரம்பித்து, அரசியல் வாதி, நேர்மையான ஆனால் எதுவும் செய்ய முடியாமல் கையாலாகமல் இருக்கும் போலீஸ், அரசியல்வாதியின் மகன், அரசியல் வாதியின் ஆதிக்க ஆக்ரமிப்புகள், அதற் கான கொலைகள், அரசு அதிகாரியின் அதிகாரம். அரசி யல் வாதிகளை உருவாக்கும் பணம் கொழுத்த தொழில திபர். அவரின் மகள். அவளுக்கும் அரசியல் வாதி மகனுக் குமான காதல். காதலை அறுக்க தொழிலதிபர் செய்யும் சூழ்ச்சி, அதற்கு அரசியல் வாதி நடத்தும் சைக்கலாஜி க்கல் கேம். காதல் ஓகே என்று எல்லாம் ஒரு பக்கம் ஓடிக் கொண்டிருக்க, அரசியல்வாதி மகன் தனியாக கடத்தப் பட்டு ஒரு பெரிய கியர் ஹாண்டிலால் தாக்கப் படுகிறான். யார்ரா நீ என்று கேட்கும் போது ஈசன் என்கிறான். அப்புறம் என்னவாயிற்று என்பதை வெண் திரையில் காண்க.

டைட்டில் காட்சியில் நம்மை நிமிர உட்கார வைத்தவர் கள்.. அதற்கு பிறகு எழுப்ப முயலவேயில்லை என்பது சோகமே.. மேலே சொன்ன அத்துனை காட்சிகளும் சரி யான முறையில் சொல்லியிருந்தால் சும்மா பின்னி பெட லெடுத்திருக்கும். நிச்சயமாய் தமிழ் சினிமாவில் ஒரு கார்பரேட், மற்றும் அரசியல் பொறுக்கித்தனங்களை வெளிச்சம் போட்டு காட்டப்பட்ட படமாய் அமைந்திருக் கும். ஆனால் அதற்கு பிறகு வரும் காட்சிகள் எல்லாம் வழக் கமான பழி வாங்கும் கதையாய் போய்விட, அட இதற்குத் தானா ஆசைப்பட்டாய் சசிகுமார் ரசிகனே என்று புலம்ப ஆரம்பித்து விடுகிறார்கள். எதையோ சுவாரஸ்யமாய் சொல்ல போகிறார்கள் என்று முதல் பாதியை பொறுமை யாய் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு.. பெரிய ஏமாற்றம் தான். ஜேம்ஸ் வசந்தனின் பாடல்களில் நா.முத்துக் குமாரின் வரிகளில் வரும் இந்த இரவுதான் போதுமே போதுமேவும், அந்த தஞ்சை செல்வியின் குத்து பாடலை யும் தவிர பெரிதாய் ஏதும் சொல்ல முடியவில்லை.

எஸ்.ஆர். கதிரின் ஒளிப்பதிவு, இயக்குனர் நமக்கு சொல்ல நினைத்த உணர்வுகளை முடிந்த வரை நம்மிடம் கடத்த முயற்சி செய்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

நிஜமாகவே ஒரு ஹானஸ்ட் மற்றும் கையாலாகத அஸி ஸ்டெண்ட் கமிஷனரை சரியாக பிரதிபலித்திருக்கிறார் சமுத்திரகனி. அமைச்சர் தெய்வநாயகமாக தயாரிப்பாளர் ஏ.எல்.அழகப்பன். தயாரிப்பாளர் காஜாமைதீன் கமிஷன ராக வருகிறார். பிரபல மலையாள இயக்குனர் ப்ளெஸ்ஸி அபிநயாவின் அப்பாவாக வருகிறார். அவர் வரும் கிராம த்து தொகுப்பு தேவையில்லாத சுப்ரமணியபுர திருவிழா காட்சிகள் இடிக்கிறது.

எழுதி இயக்கியவர் சசிகுமார். சுப்ரமணியபுரம் செய்த சசியா? என்று ஒரு ஆச்சர்ய கேள்வி எழத்தான் செய்கி றது. அவ்வளவு திருத்தமான திரைக்கதையும், இயக்க மும் இருக்கும் அப்படத்தில். ஒரு கதை என்றால் அதில் மூன்று நான்கு கோணங்களில் கதை சொன்ன ாலும் யார் மீதாவது ட்ராவல் ஆக வேண்டும். ஆனால் இப்படத்தில் மிகப் பெரிய குறையே அதுதான். அராஜக அமைச்சர் மீதும் ஓடவில்லை, இன்னொரு பக்கம் அஸிஸ் டெண்ட் கமிஷனர் சங்கையாவின் மீதும் ஓடவில்லை, இப்படி யார் மீதும் ஒட்டாத திரைக்கதையை என்ன காரணத்துக்காக முதல் பாதி முழுவதும் காட்ட வேண்டும். இவர்களை பழிவாங்க வரும் கேரக்டருக்கு ஒரே காட்சியில் சொல்ல முடிந்தவர் தானே நீங்கள்? இவர்களின் கேரக் டர்கள் பற்றி, சுற்றி கதை சொல்லி யார் அமைச்சர் பைய னை கடத்தியிருப்பார்கள் என்று ஒரு கேள்வியை போட்டு முற்றிலும் மாறுபட்ட ஒரு கேரக்டரை அறிமுகப்படுத்தின ால் திடுக்கிடும் திருப்பமாய் இருக்கும் என்று நினைத்தீர் களோ..? சாரி.. இது தானா உங்கள் திடுக் சசி?. முதல் பாதியிலிருந்து தனியாய் துண்டாய் நிற்கிறது இரண்டாம் பாதி. எப்போது ஒரு அழகான அக்கா, அதிலும் வாய் பேச முடியாத ஊமை என்று காட்டி விட்டீர்களோ.. அப்பவே கதை என்ன என்ன தெரிந்து விடுகிறது.

அரசியல் வாதியின் பலத்தை காட்டும் குற்றச் செயல் காட்சிகள் கூட மிகவும் மெதுவாகத்தான் செல்கிறது. பைய னை காணவில்லை என்றதும் முதல் நாள் கவலைப் படாமல் இருப்பது ஓகே. ஆனால் தொடர்ந்து அடுத்த டுத்த நாட்களிலும் கூட கொஞ்சம் கூட பதட்டமேயில்லாத அப்பாவை.. அதுவும் எல்லா சொத்துக்கும் ஒரே வாரிசான பையனை தொலைத்த அப்பாவை இப்படத்தில்தான் பார்க்கிறேன்.

பாராட்ட வேண்டிய விஷயங்களும் இருக்கத்தான் செய் கிறது. முக்கியமாய் நேர்மையான போலீஸுக்கு இருக்கும் இயலாமை. அரசியல் வாதிகளுக்கு வளைந்து கொடுக் கும் அரசு அதிகாரம். அதே அரசு அதிகாரம் செய்யும் துஷ்பிரயோகம், தொழிலதிபர்களின் கமிஷன். அவர்களு க்காக செய்யும் அரசியல் ஆங்காங்கே நச்சென வரும் வசனங்கள். போலீஸ் விசாரணையின் நுணுக்கங்கள் என்று ஆங்காங்கே தெரியும் ஒரு சில நல்ல விஷயங்க ளோடு நல்ல திரைக்கதையும் இருந்திருந்தால் நிச்சயம் மீண்டும் ஒரு ஹிட் படம் கிடைத்திருக்கும்.

*ஈசன் ! சிவன்.. சொத்து.*

*- கேபிள் சங்கர்*

## சினித்துளி

### குடும்பத்தால் குதறப்படும் காவலன் !



எங்களை திட்டமிட்டு ஒழிக்க நடக்கிற சதி? என்று விரல் நீட்டுகிறார் விஜய். அவர் நீட்டுகிற திசையில் இருக்கி றவர்கள் எல்லாருமே முதல்வர் வீட்டு வாரிசுகள். காவ லன் வரும்போது ஆடுகளமும் வரும் என்று கூறிவந்த னர் சினிமா புள்ளிகள். ஆனால் அதை நிறுத்தி விட்டு பா.விஜய் நடிக்கிற இளைஞனை ரெட் ஜெயண்ட் வெளி யிடுகிறதாம். இந்நேரத்தில் ஆடுகளத்தை கொண்டு வரப்போவதாக சன் டீவி கூறிது. ஆனால் கலைஞரின் படம் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக ஆடுகளத் தை களமிறக்க யோசிக்கிறது சன் டீ.வி.

அதனால் ஆடுகளத்தை தள்ளி வைத்து காவலனுக்கு எதிராக இளைஞனை மொத்த குடும்பமும் இணைந்து களத்திற்கு கொண்டு வருகிறார்கள். கலை ஞரின் 75 வது படம் வெற்றி பெற வேண்டும். அதெ நேரத்தில் காவலனைத் தோற் கடிக்க வேண்டும் என்பதே அவர்களது நோக்கமாம்.

### இயக்குனர் பிரகாஷ்ராஜ் !



நடிகராகவும், தயாரிப்பாளராகாவும் நாம் அறிந்த பிரகா ஷ்ராஜ், தற்பொழுது இயக்குனராகவும் உருவெடுக்கப் போகிறார். 'அபியும் நானும்' படத்தின் கன்னடப் பதிப் பான 'நானு நன்ன கனசு' படத்தை பிரகாஷ்ராஜ் இயக்கவுள்ளார். இப்படம் எதார்த்தமாக அமையும் என உறுதியளித்துள்ள பிரகாஷ்ராஜ், தற்பொழுது கதை யினை மெருக்கேற்றி வருகிறார். தனது படத்தில் பெரிய நடிகர்களை நடிக்க வைக்கவுள்ள பிரகாஷ்ராஜ், படத் தை குறித்து ரசிகர்களின் கருத்தை இணையம் மூலம் அறிந்து வருகிறார்.

பிரகாஷ்ராஜின் தயாரிப்பில் உருவாகியிருக்கும்ராதாமோகன் இ்யக்கியுள்ள 'பயணம்' திரைப்படமும் விரைவில் திரையை தழுவவுள்ளது.

### பகலவனைத் தொடங்கிய சீமான் !



விஜய் நடிக்கும் பகலவன் படத்தின் வேலைகளைத் தொடங்கினார் இயக்குநர் சீமான். சிறைக்குள் இருந்த படியே பகலவன் படத்துக்கு முழுமையான திரைக்கதை யை எழுதி முடித்த சீமான், இப்போது விடுதலையா னதும் பட வேலைகளை ஆரம்பித்துள்ளார். வரும் ஜனவரியில் பகலவன் படம் முழு வீச்தில் ஆரம்ப மாகும் எனத் தெரிகிறது. இதுகுறித்து சீமான் கூறுகை யில், பகலவன் சிறப்பான படைப்பாக வரும். தம்பி விஜயக்கு மாறுபட்ட வெற்றியைத் தரும் என்றார்.

### வேங்கைக்கும் வேங்கைக்கும் போட்டி !



ஒரு பெயரில் இரு படங்கள் வர முடியுமா? வரலாம் என்றாலும் குறைந்தது பதினைந்து வருட இடை வெளியாவது இருக்க வேண்டும். ஆனால் 'வேங்கை' என்ற பெயரில் ஒரே நேரத்தில் இரண்டு படங்களின் படப் பிடிப்பு நடந்து கொண்டிருக்கிறது. ஹரி இயக்கும் வேங்கை படத்தில் தனுஷ், தமன்னா நடித்து வருகிற ார்கள். புது இயக்குனர் பாலா இயக்கும் வேங்கையில் புது முகங்கள் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேங்கைகளின் குழப்பத்தில் அல்லாடிக் கொண்டிருப் பது ஜூனியர் ஆர்ட்டிஸ்டுகள்தானாம்.


தமிழ் இணையப் பரப்பில் புதிய வரவு

செய்திகள் | அரசியல் | ஆய்வு

விவாதம் | இலக்கியம் | சமூகம் | சினிமா

காலத்தின் பதிவாய்

இனத்தின் குரலாய்...



ponguthamil.com

513A & 515A High Road
Wembley
Middlesex
HA0 2DH
Tel: 0208 903 7217
Fax: 0208 903 0052
Email: gaithirisolicitor@btinternet.com

Situated in the rapidly developing Wembley area, a one minute walk from Wembley Central Station

# GAITHIRI NATHAN & CO.

SOLICITORS

Commissioners for Oaths

Practicing Since 1983

**First Hour Consultation is Free of Charge**

- Contentious Matters is charged at an hourly rate.
- Non-Contentious Matters is charged at a fixed rate which is to be agreed at consultation. This is followed by a written estimate.

**We would endeavour to keep the agreed figure and would not increase the estimate without writing to you first.**



**We cover a wide range of work which includes:**

- Commercial and Residential Conveyancing
- Liquor Licensing & Planning Applications
- Immigration
- Nationality & Entry Clearance Applications
- Work Permit & HSMP
- Welfare & Housing Advice
- Landlord & Tenant Matters (Residential & Business Tenancies)
- Wills & Probate
- Divorce & Family (Non Legal Aid)
- Buying & Selling Immovable Assets in India & Sri Lanka
- Powers of Attorney (General & Special)
- Change of Name Deed and/or Promissory Note, Bills of E xchange, Statuary Declaration, Tenancy Agreements under Housing Act



Wishing You A Very Happy Christmas & Prosperous New Year

இன்டலிஜென்ட் டெட் மேனேஜ்மென்ட் நிறுவனத்தின் தரமான சேவையைப் பெற்று...



Personal Loans, Student Loan, Bank O/D, Credit Cards, Store Cards போன்ற கடன்களை கையாள்கிறோம்.

கடன் சுமை உங்களை அழுத்துகிறதா? கடன்களுக்காக மாதாந்தம் கட்டும் பணம் கட்டப்படவில்லையா? கவலையை விடுங்கள். உங்களுக்கு நாங்கள் கை கொடுத்திருக்கிறோம்.

## உங்கள் கடன் சுமைகளை இன்றே அகற்றுங்கள்!

உங்கள் அனைத்து கடன்களையும் ஒருங்கமைத்து, கடன் வழங்கிய நிறுவனங்களுடன் சட்டரீதியாக தொடர்பாடல் செய்து மாதாந்தம் மிக மிகக் குறைந்த கட்டணம் செலுத்த வழியமைத்துத் தருகின்றோம்.

எமது சேவையினால் அடையக்கூடிய பல நன்மைகளில் சில இவை!

1. கடன் வழங்கிய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் தொலைபேசி அழைப்புகள் மற்றும் கடிதங்கள் என்பவற்றை நாம் கையாள்கிறோம்.
2. உங்களுக்கு கடன் வழங்கிய நிறுவனங்களிற்கான மாதாந்தக் கட்டுப்பணத்தை தனித்தனியாக கட்டாது ஒரு மாதாந்த கட்டணம் மூலம் அனைத்து நிறுவனங்களிற்கும் சென்றடையச் செய்தல்.
3. மேலும் மேலும் கடனுக்கான வட்டி அறவிடப்படாமல் தடுக்க முயற்சித்தல்.
4. Bankruptcy என்னும் வங்குரோத்து நிலையை அடைய முதல் சரியான பரிகாரம் காணுதல்.
5. கடன் தந்த நிறுவனங்களுடன் ஆலோசனை செய்ய மூலக்கடனில் ஒரு பகுதியை மட்டும் செலுத்தி முழுக்கனையும் நிவர்த்தி செய்தல்.

ஒவ்வொருவரும் எதிர்கொள்ளும் கடன் பிரச்சினைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை ஆகவே எங்களுடன் ஒருமுறை கலந்தாலோசியுங்கள். சரியான வழியில் உங்களை வழிநடத்தி உங்கள் கடன்தொல்லைகளை நிவர்த்தி செய்கின்றோம்!

Office: 17A Walm Lane, Willesden Green, London NW2 5SJ

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

020 8459 5812
Sivakumar 075 8874 5506
Muralee 079 0321 7854

# INTELLIGENT DEBT MANAGEMENT

# MASS GLOBAL SHIPPING

Sea - Air - Road & Ticketing , Serving all the Sri Lankan Communities

MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK

Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers

• Packers • Movers • Shippers

We Offer the Best Services than all the Other in the trade!







Special rates for Containers and Machinery

4 Collection Points: Harrow, Warford, Knightsbridege, Croydon

FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)

Wooden boxes from £9.00
Call 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177

Local Collection Charge £5.00 upto Hounslow. Within M1 collection charge £15.00 upto Conventry All other area's we will offer the best rates

MASS GLOBAL SHIPPING
Warehouse,652,VictoriaRoad Ruslip,HA40LN
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com

*Condition Apply
Warning No hidden charges
No bnognus promotions

# A KEY TO WEIGHT LOSS & KEEP FIT

A surprisingly easy way to burn fat quickly without an diet or exercise



Contact : S.Haria

07861 672 963

காலை உணவின் முன் இரண்டு மாத்திரைகளை எடுக்கவும்.
இருபது நிமிடங்களின் பின் காலை உணவை உண்ணலாம்.
ஆனால் உங்களுக்குப் பசி எடுக்காது.

'கொலஸ்ரறோல்' நீரிழிவுப் பிரச்சனையா? தீர்விற்கு எம்மை அணுகவும்.

Another full supplement available to control your cholestrol and Diabetics


அனைவருக்கும் எமது
நத்தார் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!
We wish you a Merry Christmas & A Happy New Year!
Niru BRAND®
Quality Taste Value
Bringing great food to life...
www.niru.co.uk